

ஒக்டோபர் - டிசம்பர் 2016 | 13

# ஆக்காட்டி

இலக்கிய இதழ்

• சி.புஷ்பராணி • கற்சுறா • கருணாகரன் • தேவ அபிரா • தர்மினி • விஜி • ராகவன்
• ஜெ.கே • அசரீரி • இங்கர் ஹாகரூப் • பானுபாரதி • சாதனா • அனோஜன் பாலகிருஷ்ணன் • தர்மு பிரசாத்
• உரையாடல்கள் - இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணி / அ௫ூர் கோபாலகிருஷ்ணன்

# இலங்கையில் கருப்புப்பிரதிகள்







**தோழமைகள் , இலங்கையில் கருப்புப்பிரதிகள் வெளியீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு**

**கணேசன் திலீப்குமார்** - புதுக்குடியிருப்பு , வாழைச்சேனை. (கைபேசி - 0772532296)


**அறிவாலயம் புத்தகநிலையம்** - வவுனியா

**படிப்பகம்** - யாழ்ப்பாணம்

# ஆக்காட்டி

காலாண்டிதழ்

இதழ் - 13 | ஒக்டோபர் - டிசம்பர் | 2016



காலாண்டிதழ்

இதழ் - 13 | ஒக்டோபர் - டிசம்பர் | 2016

தொகுப்பும், வடிவமைப்பும்

**தர்மு பிரசாத்**

*reysath@gmail.com*

உதவி

**தர்மினி**

*nitharmi@gmail.com*

**சாதனா**

*mesathana@gmail.com*

**மக்ஸ்டரில் வாசிக்க**

http://www.magzter.com/FR/akkaddi/Aakkaddi/Art/

**தொடர்புகளுக்கு**

*பிரான்ஸ் +33 6 52 33 75 84*

aakkaddi@gmail.com

www.facebook.com/aakkaddi

**தமிழகத்தில்**

*கருப்புப்பிரதிகள் +91 9444272500*

karuppupiradhigal@gmail.com

## கவிதைகள்

அசரீரி ♦ கற்சுறா ♦ கருணாகரன் ♦ இங்கர் ஹாகரூப் ♦ தர்மினி

## உரையாடல்கள்

19. பார்வையாளர்கள் திட்டமிடப்பட்ட முறையில் மோசமான படங்களைப் பார்ப்பதற்குப் பழக்கப்படுத்தப்படுகிறார்கள். ................................... **அடூர் கோபாலகிருஷ்ணன்**

55. சாதிய சமூக ஒடுக்குமுறைக்கு முக்கியத்துவம் கொடுத்து பண்பாட்டுக் கலாசாரத் தளத்தில் செயல்படும் எந்த இயக்கமும் எம்மத்தியில் தற்போது இல்லை.......................... **தலித் முன்னணி**

## கட்டுரைகள்

09. குழந்தைகள் பயங்கரமானவர்கள் .............. **சாதனா**

45. மக்காத பிளாஸ்ரிக் – சாதிய நச்சு ...... **சி.புஷ்பராணி**

60. கால்கள் தரித்து நிற்க எங்கே இடமுண்டு? .... **தர்மினி**

## புத்தக மதிப்பீடுகள் / விமர்சனங்கள்

04. ஆறிப்போன காயங்களின் வலி .................. **விஜி**

39. பதின்ம வயதின் அற அலைச்சல் ....................... ................................ **அனோஜன் பாலகிருஸ்ணன்**

## கதைகள்

25. புதுமைப்பித்தன் கதைகள் ..................... **ராகவன்**

51. சந்திரா என்றொருத்தி இருந்தாள் ................ **ஜெ.கே**

62. The Starry Night............................ **தர்மு பிரசாத்**

# ஆறிப்போன காயங்களின் வலி

விஜி-பிரான்ஸ்





'போர் பெண்ணின் முகமல்ல' (La guerre n'a pas un visage de femme) என்ற ஸ்வெற்லானா அலெக்ஸிவிற்ஸ் (Svetlana Aleksievitch) இன் தொகுப்பிற்கு போனவருடம் (2015) இலக்கியத்திற்கான நோபல் பரிசு கிடைத்தது. இது இரண்டாம் உலகப் போரில் ரஷ்ய இராணுவத்துடன் இணைந்து போராடிய 100 இற்கும் மேற்பட்ட பெண்களின் வாக்குமூலத்தில் இருந்து உருவாக்கப்பட்டது. ரஷ்ய மொழியில் 1985 களில் வெளிவந்திருந்தபோதும் ஏனைய ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பின்னர்தான் ஐரோப்பாவில் பேசப்படும் ஒரு தொகுப்பாக மாறியுள்ளது.

இந்நூலின் சிறப்பு என்னவென்றால் உலக யுத்தம் முடிந்து நான்கு தசாப்தங்களின் பின்னர்கூட அந்தப்பெண்போராளிகளினால் யுத்தத்தின் வலிகளையும், அதனால் யுத்தம் தங்களது வாழ்வில் ஏற்படுத்திய வடுக்களையும் மறக்கமுடியவில்லை என்கின்ற வாக்குமூலங்களேயாகும். குறிப்பாக யுத்தகாலங்களில் ஆயுதமேந்தியிருந்த அப்பெண்களின் நினைவலைகள் பதிவாகும் போதுதான் யுத்தம் விட்டுச்செல்லும் வடுக்களையும் வேதனைகளையும் இவ்வுலகுக்கு உரத்துச் சொல்ல முடியும். அதிலும் எத்தனை காலங்கள் சென்றாலும் யுத்த வியாபாரிகளினால் பெண்கள் மீது திணிக்கப்படும் யுத்தத்தை சகித்துக்கொள்ள யாராலும் முடியாது என்கின்ற உண்மைகளையும் பதிவு செய்வதில் இந்நூல் முக்கிய பங்காற்றியுள்ளது.

உலகம் பூராவும் யுத்தம், யுத்தம். மொழி, மதம், இனம், நிலம் போன்ற இன்னும் பல பெயர்களிலும் யுத்தம் நடைபெறுகிறது. எந்தக் காரணத்திற்காக யுத்தம் நடைபெற்ற போதும், யுத்தத்தின் இறுதியில் வெற்றி பெற்றவர்களாகட்டும், தோல்வியடைந்தவர்களாகட்டும் இரண்டு தரப்பினருக்கும் உயிர் இழப்புகள், உடமைகளை இழந்தவர்கள், அங்கவீனமானவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் போன்ற வற்றையே இந்த யுத்தம் விட்டுச் செல்கின்றது.

இவை யுத்த அடையாளங்களாக நீண்டகாலத்திற்கு மனிதகுல வளர்ச்சிக்கு தடையாகவும் நிலைத்து நிற்பதை பார்க்கின்றோம்.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தமாகட்டும், உலகின் பல தேசங்களிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற எந்த யுத்தமாகட்டும், எதற்கான யுத்தமாகவும் இருக்கட்டும், இந்த யுத்தங்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான தொடர்புதான் என்ன? தேசியம், இனம், மதம், மொழி, நிலம் போன்ற பல்வேறு பெயர்களில் யுத்தங்கள் இடம்பெறுகின்ற போதும் அவை யாவும் வெறும் ஆண் ஆதிக்க அரசியல் யுத்தங்களாகவே இருக்கின்றன. ஆண் ஆதிக்கம் நிறைந்த அரசியல் தலைமைகளே இந்த யுத்தங்களை தீர்மானிக்கின்றார்கள். ஆனால் பெண்கள் எவ்வாறு இதற்குள் இழுத்துச் செல்லப்படுகிறார்கள்? ஏன் எவ்விதக் கேள்விகளுமற்று இந்த யுத்தங்களை பெண்கள் ஏற்றுக்கொள்ள வைக்கப்படுகின்றார்கள்? கண்ணுக்கு முன் நமக்கு எதிரானதும் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாததுமான விடயங்கள் நடக்கும்போதுகூட ஏன் பெண்கள் மௌனமாகவே இருக்க நேரிடுகிறது? இதுபோன்ற கேள்விகள் எம்மிடம் இருந்து எழுப்பப்பட வேண்டும். ஆனால் அவ்விதக் கேள்விகள் எழுவது மிக அரிதாகவே உள்ளது.




ஆனால் யுத்தங்களில் ஈடுபட்ட போராளிப் பெண்களிடமிருந்து அல்லது யுத்த அனுபவங்களை, பாதிப்புக்களை கொண்ட பெண்களிடமிருந்து அரிதாக வரும் எழுத்துகள் மறைமுகமாக இக்கேள்விகளையே முன்வைக்க தொடங்கியுள்ளன. அந்த வகையில் இலங்கையின் வன்முறைகள், மற்றும் யுத்த அனுபவங்களை பொறுத்தவரையில் போராட்ட இயக்கங்களில் ஆரம்பகாலத்தில் இணைந்து போராடிய, சிறைசென்ற அனுபவத்தை எழுதிய புஷ்பராணியின் '**அகாலம்**' முக்கியமானதொன்றாகும்.

அதைத் தொடர்ந்து ஒரு பெண்ணாக, தாயாக, போராளியாக வாழ்ந்த தனது அனுபவத்தோடு மக்கள் அனுபவித்த கொடுமைகளை கண்முன்னே கொண்டுவந்த தமிழ்க்கவியின் '**ஊழிக்காலம்**'ஆகட்டும், விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து திரும்பிய மூன்று பெண்களின் சக வாழ்வை மேற்கொள்ளத் துடிக்கின்ற, அவர்களது தோல்விகள், துன்பங்கள், வெற்றிகள் போன்றவற்றை பதிவாக்கிய ஸர்மிளா சையத் எழுதிய '**உம்மத்**' ஆகட்டும், இளம்வயதில் இயக்கத்திற்கு சென்று யுத்தக்களம்வரை நின்று இறுதி யுத்தத்தில் உயிர் தப்பி தனது அனுபவத்தை 'ஒரு கூர்வாளின் நிழலில்' தந்த தமிழினியாகட்டும் இவர்கள் அனைவருடைய எழுத்துகளும் யுத்தங்களை நோக்கி பலத்த கேள்விகளை எழுப்புகின்றன.

சமூகத்தில் பெண்களை இரண்டாம் பட்சமாக கருதுகின்ற தன்மையானது விடுதலை இயக்கங்களிலும் கூடக் கடைப்பிடிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டதையும், அதாவது எந்தப் பதவியில் இருக்கும் பெண்களும் சுயமாக முடிவெடுக்க முடியாமல் இருந்தமையும், தங்களுக்கு உடந்தையில்லாத முடிவுகளை நிறைவேற்ற வேண்டி இருந்தமையும் பற்றி வாக்கு மூலங்கள் வெளிவருகின்றன.

இவற்றின் தொடர்ச்சியாக வெளிவந்துள்ள வெற்றிச்செல்வியின் '**ஆறிப்போன காயங்களின் வலி**'யும் யுத்தங்களை நோக்கிய பல கேள்விகளோடு எம்முன் எழுந்து நிற்கின்றது.

வெற்றிச்செல்வியின் இந்த பதிவானது இலங்கையில் இடம்பெற்று முடிந்த யுத்தத்தின் பின்னர் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்ட பெண்களின் யுத்த முடிவுக்குப் பின்னரான 'புனர்வாழ்வு முகாம்' பற்றிய அதாவது 'பெண் போராளிகளின் பம்பை மடு தடுப்பு முகாம் வாழ்வு' தொடர்பான ஒரு வரலாற்றுப் பதிவாக வெளிவந்துள்ளது.

*181* பக்கங்களை கொண்ட ஆறிப்போன காயங்களின் வலி என்னும் இந்நூலில் *21-05-2009* இல் இருந்து *06-04-2010* வரை வெற்றிச்செல்வியும் தோழிகளுமாக மொத்தம் *1851* பெண்கள் புனர் வாழ்வு முகாமில்

கடந்து வர நேர்ந்த அனுபவங்களும் அவலங்களும் வலிகளும் பதிவாகியுள்ளன. அதேபோன்று அப்பெண்கள் சந்தித்த சவால்களையும் கூட இந்நூலில் காணக்கிடைக்கின்றது . இப்பதிவானது மிக நேர்மையாகவும் நேர்த்தியானதுமாக மனதை உருக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஏதோ ஒரு நம்பிக்கையின் பாற்பட்டு போராட்டத்திற்குத் தங்களை அர்ப்பணித்த அல்லது அர்ப்பணிக்க வைக்கப்பட்ட இவர்களது போராட்ட வரலாறும் அதன் பின்னரான வாழ்வும் பல்வேறு கதைகளாக, நாவலாக வியாபிக்கக் கூடியவை என்று உணரவைக்கிறார் வெற்றிச்செல்வி. பெற்றோரை இழந்த கஜனி என்னும் முன்னாள் போராளி தன் சகோதரியின் அன்பையும் இழக்க நேரிட்ட போது தற்கொலைக்கு பலமுறை முயற்சி செய்வதையும், குழந்தை எங்கு இருக்கின்றது என்பதும் தெரியாமல் தன் குழந்தையை இழந்து நிற்கின்ற தவிப்பினை கண்முன்னே நிறுத்தியிருக்கிறார் வெற்றிச்செல்வி. மற்றும் கர்ப்பிணியாக இருந்த நித்தியா முகாமில் வாழ்ந்த காலத்திலேயே குழந்தையை பெற்றெடுப்பதையும் தெரிந்த உறவினர்களுக்கு கடிதங்களை மிக இரகசியமாக அனுப்பிவிட்டு பதிலுக்கான காத்திருப்பையும் இறுதிவரை சில பெண்களுக்கு எந்தவொரு கடிதமும் யாரிடம் இருந்தும் வராதமையையும் உறவுகளை சந்திக்கும் நாட்களில் ஒலிபெருக்கியில் தங்களுடைய பெயர் கூப்பிடப்படமாட்டாதா? என தவம் கிடந்த பெண்களையும் எம்முன் யுத்தத்தின் சாட்சியங்களாக நிறுத்தியிருக்கிறார்.

இந்த நிலையில் இருந்து சமூகம் உங்களை



இரண்டு கால்களையும் இழந்த பெண் போராளிகள் பழுதடைந்து நாற்றமடித்து நிரம்பி வழிந்து கிடக்கும் மலசலகூடத்தை எதிர்கொள்ள நேரும் கணங்களையும் நினைத்துப்பார்க்கையில் நெஞ்சம் வலிக்கத்தான் செய்கிறது.

மேலும் சுமித்திராவின் கதை கண்களை கலங்கவைக்கிறது. சுமித்திரா என்னும் முன்னாள் போராளி தடுப்பு முகாமிலிருந்த போது தனது கைக்குழந்தையை எதேச்சையாக அருகில் இருந்த பெண்ணிடம் கொடுத்து விட்டு பெயர் பதியச்செல்கின்றார். ஆனால் அதிகாரிகளால் சடுதியாக அடுத்த முகாமிற்கு ஏற்றிக்கொண்டு செல்லப்பட நேரிடுகின்றது. குழந்தையை யாரிடம் கொடுத்தோம் என்பதும் தெரியாமல் தற்போது

ஏற்றுக்கொள்ளுமா? குடும்பம் உங்களை ஏற்றுக்கொள்ளுமா? என்கின்ற புனர்வாழ்வு அதிகாரிகள் வழங்கும் வினாக்கொத்தில் இருந்த கேள்விகளைத் தொடர்ந்து போராளிப் பெண்களுக்குள் ஏற்படும் சலனம் குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் அது ஒன்றும் வினாக்கொத்தினால் மட்டும் உருவாகியது அல்ல. அது ஏற்கனவே ஒவ்வொரு பெண் போராளியின் அடிமனதை குடைந்து கொண்டிருக்கும் கேள்விதான்.

உண்மையில இந்தச் சமூகம் எங்கள வெறுக்குமா? இந்த சனத்துக்காகத்தானே நாங்க எங்கட வாழ்வையே தியாகம் செய்தம்? எங்களுக்காகவா நாங்கள் சாகப் போனம்? எங்கட சனங்களுக்காகத்தானே விடுதலை கேட்டம்? என்று ஆரணி என்பவள் எழுப்புகின்ற கேள்விகள் உலகத்தில் இடம்பெறும்

யுத்தங்கள் அனைத்திலும் பங்கெடுத்த பெண்கள் அனைவராலும் கேட்கப்படும் கேள்விகள்தான். யுத்தம் வெற்றி அடைந்தாலும், தோல்வியடைந்தாலும் ஆயுதமேந்திய பெண்களை இந்த ஆணாதிக்கச் சமூகம் அணுகுகின்ற விதம் ஒரே மாதிரியானது தானே! அதனாலே முன்னாள் போராளிகளின் எதிர்காலம் குறித்து எழுப்பப்படும் கேள்விகள் ஒரே விதமானதுதான்.

இங்கு ஸ்வெற்லானா அலெக்சிவிட்ச் (Svetlana Aleksievitch) நூலில் வெளிவந்த ஒரு பழைய போராளிப் பெண்ணின் வாக்குமூலமும் ஈழத்து ஆரணியின் ஆதங்கங்களும் ஒரே மாதிரியானதாக அமைவதை காணமுடியும்.

'எல்லோரும் போலவே நானும் போராட்டத்திற்குப் போனேன். அவர்கள் தந்த உடையை அணியச்சொன்னார்கள் அணிந்தேன். என்னைச் சுட சொன்னார்கள் சுட்டேன். 3 வருடங்களில் நான் சிறப்பாகச் சுட்டதற்காகப் பல பதக்கங்களைப் பெற்றுக்கொண்டேன். ஒருநாள் வெற்றி.. வெற்றி என்று சந்தோசமாகக் கத்தினார்கள். நானும் கத்தினேன். பின்னர் வீட்டுக்குத் திரும்பிய போதுதான் என்னைப் பயம் பற்றிக்கொண்டது. எனது குடும்பம், உற்றார், ஊரார் என்று அனைவரும் என்னை வேறுவிதமாகப் பார்த்தார்கள். அப்போதுதான் எனது எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கம் வந்தது. சமூகத்திற்காகப் போராட போன நாங்கள் அதே சமூகத்தினரால் தூக்கியெறியப்பட்டோம். யுத்தம் முடிந்து 30 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் திருமணம் செய்யாது நான் தனியாகத்தான் வாழ்கிறேன்' போன்ற வாக்குமூலங்களை வாசிக்கும் போது உலகத்தில் பெண்போராளிகள் எல்லோரும் எதிர் கொள்ள நேருகின்ற ஆணாதிக்க சமூகம் ஒரே படித்தானதாய் இருப்பதைக் காண முடிகின்றது. ஆணாதிக்கம் என்பது ரஷ்யாவில் மட்டுமல்ல அது யாழ்ப்பாணத்திலும் ஒரேவிதமாகவே செயற்படுவதைக் காணலாம்.

**ஆனந்தவிகடன் வெளியிட்ட செய்தியும் அதனால் மிகவும் கோபமும் வேதனையும் அடைந்த பெண்களும்.**

இந்தியாவில் தம்முடைய புத்தகங்களோ, எழுத்துக்களோ கூடிய கவனம் பெற வேண்டும் என்னும் நோக்கில் இந்திய எழுத்தாளர்கள் மட்டுமல்ல ஈழத்து மற்றும் புகலிட எழுத்தாளர்களும் கூட இவ்வாறுதான் புனைவு என்றும் உண்மை என்ற பெயரிலும் எவ்வாறு இலக்கிய வியாபாரம் செய்கின்றார்கள் என்பதை நாமெல்லோரும் அறிவோம்.

ஆனந்தவிகடன் இதழொன்றில் வெளிவந்த பம்பை



மடு முகாம் பற்றிய செய்தி ஒன்றை வசித்த பெண்கள் மிகவும் வேதனையும் சீற்றமும் கொள்கின்றனர். எதுக்கு இப்படியெல்லாம் எழுதுறாங்க? இப்படி எழுதிறதால படையினரப் பழிவாங்குறாங்களா? எங்களப் பழிவாங்குறாங்களா? நாங்க வெளியே போய் வாழ்றதில்லையா? எங்கட பிள்ளைகள இவனுகளா கலியாணம் கட்டுவாங்கள்? இலங்கை அரசு செய்வது இன அழிப்பா? அல்லது இவ்வாறானவர்கள் செய்வதுதான் இன அழிப்பா? போன்ற கேள்விகள் அங்கு வாழ்ந்த பெண்களிடம் இருந்து தன்மானத்துடன் சீறியெழுகின்றன.

இதே போன்று மருத்துவமனை ஒன்றில், பம்பை மடு முகாமில் இரவிரவாக பெண்களின் கதறல் சத்தம் கேட்பதாகவும், பெண்களை நிர்வாணமாக ஓடவிடுவதாகவும் எமது மக்கள் சாதாரணமாக பேசிக்கொண்டிருந்ததை கேட்டுக்கொண்டிருந்த பம்பைமடு முகாமை சேர்ந்த பெண் ஒருவர் கண்கள் பனிக்க அங்கே அப்படியெதுவும் நடக்கவில்லை, நானும் அங்கிருந்து வந்தவள்தான் என்று அவர்களுக்கு விளக்கம் கொடுக்க வேண்டிய நிலையில் இருப்பது உண்மையில் கொடுமைதான்.

பொதுவாக யுத்தம் முடிந்தபின்னர் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி எமது சமூகத்திற்குள் வாழ்ந்துகொண்டிருக்கும் போராளிகளான ஆண்களும் பெண்களும் ஒரே மாதிரி நடாத்தப்படுவதுமில்லை

மதிக்கப்படுவதுமில்லை. யுத்தத்தில் மடிந்தவர்கள் எல்லோரும் மாவீரர்கள், உயிருடன் இருப்பவர்களுக்குள் ஆண் போராளிகள் வீரர்களாகவும், பெண்கள் தரக்குறைவானவர்களாகவும்தான் கணிக்கப்படுகிறார்கள். கற்பு என்கின்ற கற்பிதத்தை யோனிக்குள் தேடுகின்ற அவலம் இப்பெண்களின் வாழ்விலும் தொடர்கின்றது.

அதாவது சமூக வாழ்க்கைக்கு இந்தப் பெண்கள் பொருத்தமற்றவர்கள் என ஒதுக்கப்படுகிறார்கள். இப்பெண்களை திருமணம் செய்ய முன்வரும் ஆண்கள் மிகச் சிறிதளவே. இயக்கத்தில் இருந்த ஆண்களே கூட இப்பெண்களை திருமணம் செய்ய விரும்புவதில்லை.

ஆகவேதான் இப்பெண்கள் சமூக நீரோட்டத்தில் கலந்துகொண்டு ஒரு சக மனிசியாக வாழ்வதற்கு மிகவும் பிரயத்தனம் செய்யவேண்டியுள்ளது. இந்தவகையான சமூக ஒதுக்குதலால்தான் வடக்கிலும் கிழக்கிலும் பாலியல் தொழிலாளர்கள் அதிகரித்திருக்கிறார்கள் என்பதை யாராலும் மறுக்கமுடியாது.

புனர்வாழ்வு முகாம்களில் தம்வாழ்வு மீதான வேதனைகளை ஓரளவேனும் மறப்பதற்கு ஒவ்வொரு வாரமும் கலைநிகழ்ச்சிகளை இவர்களே தயாரித்து நடாத்தியிருப்பதும் விளையாட்டுப் போட்டிகளை பெண் இராணுவத்தினருடன் சேர்ந்து நடாத்தியதும் இவர்களுக்குள் ஒரு நல்லிணக்கத்தை உருவாக்கியிருந்தது என்கின்றார் வெற்றிச்செல்வி. இறுதியில் நடந்த இசைக்குழுவினரின் நிகழ்வில் இராணுவத்தினருடன் சேர்ந்து பாடி, ஆடி மகிழ்ந்திருக்கின்றனர் என்பதெல்லாம் எதிரும் புதிருமாக நின்ற இருபிரிவினருக்கும் இடையில் ஒருத்தர் மீது மற்றவருக்கு சிறிய நம்பிக்கை வளருவதையும் பார்க்கமுடிகிறது.

யுத்தகாலத்தில் மிகப்பெரிய பகை முரண்பாடுகளுடன் வாழ நேர்ந்த இரு இனங்கள் மீண்டும் நல்லிணக்கம், சகவாழ்வு போன்றவை நோக்கி பயணிக்க இந்த புனர்வாழ்வு காலகட்டம் வியத்தகு பங்காற்றியுள்ளமையை இந்நூல் விபரிக்கின்றது. ஆகவே எந்த இன மக்களாக இருந்தபோதும் அவர்களுடன் பேசிப்பழகும்போது பிரச்சனைகளை இலகுவாக புரியவைக்கவும் புரிந்துகொள்ளவும் முடியும் என்பதையே இது காட்டிநிற்கின்றது. ஆகவே இதுவரை நடைபெற்ற போராட்டம், யுத்தம், அழிவு ஆகியவை ஏன்? எதற்கு? நாம் மேற்கொண்ட வழி சரிதானா? என்கின்ற கேள்விகளை நாம் கேட்டே ஆகவேண்டும்.

பற்பல காரணங்களின் நிமித்தமாக போராடச்சென்றவர்கள், போராடுவதற்கென பிடித்துச் செல்லப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் இயக்கங்களுக்குள் நுழைந்ததும் இயக்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் ஒருங்கிணைக்கப்படுகின்றனர். அமைப்பின் ஒழுங்கு விதிகளும், கட்டுப்பாடுகளும் கட்டளையிடுவதை மட்டுமே கேட்பவர்களாகவும், செய்பவர்களாகவும் மாறிவிடுவோம். தலைமைகள் சொல்வதுதான் மந்திரம், அதுமட்டும்தான் சரியெனவும் எங்களை அர்ப்பணிப்போம். அவ்வாறு இயக்கத்துக்கு தனது 18 வருடங்களை அர்ப்பணித்தவர்தான் இந்த வெற்றிச்செல்வியும்.

இறுதி யுத்தக்களத்தில் அழிவையும் அவலத்தையும் எதிர்கொண்டவர். விடுதலை, வெற்றி போன்ற எதிர்பார்ப்புகளும் நம்பிக்கைகளும் நாசமாகிப்போனதையும் கூடவே சக தோழிகள், தோழர்கள் கண்முன்னே அழிக்கப்பட்டதையும் அங்கங்கள் இழந்து, உறவுகள் இழந்து சீரழிக்கப்பட்டதையும் உணர்ந்தவரும், வாழ்ந்தவரும் வெற்றிச்செல்வி. அதனால்தான் என்னவோ தோல்வி அடைந்துவிட்டோம் என்கின்ற ஏக்கத்தைத் தவிர விடுதலைப் புலிகள் மீதான அவர்களின் அரசியல், போராட்டம், வழிமுறைகள் பற்றிய எவ்வித கேள்விகளையும் அவரது எழுத்தில் காணமுடியவில்லை. மாறாக அன்பினதும் வீரத்தினதும் உச்சம்தான் கரும்புலிகள் போன்ற வசனங்களை அவர் உச்சரித்துக்கொண்டிருப்பது கண்மூடித்தனமான இயக்க விசுவாசத்திலிருந்து வெளிவர இன்னும் சிறிதுகாலம் செல்லும் என்பதை உணர்த்துகின்றது. அதிலும் அவர் நேர்மையாகவே இருக்கிறார். இவ்வாறான விசுவாசி ஒருத்தரால் பம்பை மடு முகாம் பற்றிய தகவல்கள் பதியப்படும்போது அதனது உண்மைத் தன்மைக்கு இன்னும் உறுதி சேர்க்கிறது.

அந்த வகையில் இதுவரை காலமும் நாம் கேள்வியுற்ற, வாசித்த, அறிந்த முகாம்கள்பற்றிய மிக மோசமான பார்வையை இந்த 1851 பெண்கள் வாழ்ந்த முகாம் வாழ்க்கை பற்றிய குறிப்பு புரட்டித்தான் போடுகிறது. இந்தப் பதிவை வாசித்து முடித்தபோது என்னிடம் எழுந்த கேள்விகள் இன்று இந்தப் பெண்கள் என்ன ஆனார்கள்? என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்? எமது பாழாகிப்போன சமூகத்தின் புறக்கணிப்பில் இருந்து எவ்வாறு வாழ்கிறார்கள்? இவர்களின் பொருளாதாரத் தேவையை எவ்வாறு பூர்த்தி செய்கிறார்கள்? பெற்றோரை, குழந்தையை, துணையை இழந்தவர்கள் அந்த துயரத்தில் இருந்து சிறிதளவேனும் மீண்டுவர எந்த மனநிலை மருத்துவர்கள் உதவுவார்கள்? இந்தப் பெண்களுக்காக எம்மால் என்ன செய்யமுடிகிறது? போன்றவைதான். இவர்களின் தொடரும் வாழ்க்கைப் போராட்டத்தைப் பற்றியும் வெற்றிசெல்வி போன்றவர்களிடம் இருந்துதான் எதிர்பார்க்கின்றோம்.

●



# குழந்தைகள் பயங்கரமானவர்கள்

**சாதனா**

**மேதகு முசேவெனி !**

*நீ உருவாக்கிவிட்ட ஆயிரமாயிரம் குழந்தைப் போராளிகளில் ஒருத்தியான சைனா கெய்ட்ரசி பேசுகின்றேன்.*
*என்னைக் கண்ணாடியில் பார்க்கும்போது ,அங்கே உனது முகம்தான் எனக்குத் தெரிகின்றது.*
*எனது கனவுகளில் நீ எனது துப்பாக்கியை ஏந்தியபடியே என்னிடம் வருகின்றாய் .*
*எனது கனவுகளில் இன்றும் உனது வசீகரக் குரல் கேட்கிறது.*
*உனது அழகிய வசனங்கள் உனக்காக என்னை இரத்தம் சிந்த வைக்கின்றன.*
*நான் உனது விளையாட்டை, விதிமுறைகளை அறியாமலேயே விளையாடினேன். அப்போது உனது முகம் ஒளிர, ஒளிர எனது ஆன்மா இருண்டு கொண்டே போயிற்று.*
*நீ என் கைகளில் திணித்த துப்பாக்கியின் கனம் என்னை நிலைகுலைய வைத்தது.*
*நாங்கள் உனக்காக இரத்தத்தில் மூழ்கினோம்.*
*குண்டு துளைக்காத ஆடைக்குள் நீ பதுங்கியிருக்கின்றாய்.*
*ஆனால் அங்கே எங்களுக்கு இடமில்லை.*
*எனது ஆன்மா கேள்விகளை எழுப்பினால் நீ புன்னகைத்துக் கொண்டே என்னைத் தட்டுவதற்கு கட்டளையிடுவாய்.*
*ஏனெனில் நீ கேள்விகளைக் கண்டு அஞ்சுகின்றாய்!*
*நீ என்னை எனது நிலத்திலிருந்து துரத்தினாய்!*
*எனது குரல் உன்னை எட்டுகின்றது. ஆனாலும் நீ உனது காதுகளை மூடிக்கொண்டிருக்கின்றாய்.*
*எனது நாடு இன்று உனது வேட்டைக் காடாகி விட்டது.*
*இன்று நீ அதிகாரத்தின் உச்சிக்கு ஏறி விட்டாய்.*
*எதற்காக பசித்திருந்தாயோ அதை நீ நக்கி விட்டாய்.*
*ஏன் நாங்கள் இப்போது உன்னுடன் சேர்ந்து விளையாட விரும்பவில்லை என்று எப்போதாவது சிந்தித்திருக்கின்றாயா?*
*உனக்கு எனது பெயராவது தெரியுமா?*
*புதிய வாழ்க்கையும், ஒளிரும் எதிர்காலமும் அளிப்பதாக நீ வாக்கு கொடுத்த வாக்குறுதிகளாவது ஞாபகத்திலிருக்கின்றதா?*
*அவர்கள் உனது வெற்றிகளின் கால்களாயிருந்தபோது நீ அவர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளாவது ஞாபகத்திலிருக்கின்றதா ?*
*களங்களிலும், காடுகளிலும் உனக்காக மாண்டுபோன குழந்தைப் போராளிகளின் எண்ணிக்கையாவது உனக்குத் தெரியுமா?*



**சைனா கெய்ட்ரசி.**

'பீட்ஷ் ஆப் தி நோ நேஷன்' திரைப்படத்தைப் பார்த்துக்கொண்டிருந்த போது எனக்கு நான் பல வருடங்களுக்கு முன்னர் உகண்டாவுக்குச் சென்றதும் அங்கு நடந்த ஒரு கோரச் சம்பவமுமே நினைவுக்கு வந்தது. உகண்டாவின் மேற்கிலுள்ள கிராமமொன்றில் நானும் என்னுடைய குழுவும் தங்கியிருந்தோம். மாலை ஐந்து மணியிருக்கலாம் வானம் ஒருவித மஞ்சள் நிறத்திலிருந்தது. எங்களுக்குத் தேநீர் கொண்டுவந்து தரும் நபர் எங்களுக்கான தேநீர்க் குடுவைகளை வழங்கிக் கொண்டிருந்தார். அப்போதுதான் நான் அந்தச் சத்தத்தினைக் கேட்டேன். அதுவொரு வெடிச்சத்தம். எங்கள் காதுகளை செவிடாக்குவது போலிருந்தது. அனேகமாக நாங்கள் தங்கியிருந்த முகாமிற்கு நூறு மீட்டர் தொலைவில்தான் அது நடந்திருக்க வேண்டும். நானும் எங்கள் குழுவைச் சேர்ந்தவர்களும் ஆளுக்கொரு பக்கமாக புரண்டு படுத்துக் கொண்டோம். மேலும் இரண்டு வெடிப்புச் சத்தத்தினைத் தொடர்ந்து துப்பாக்கிகள் சத்தம் கேட்டன. கூடவே பெண்கள் மற்றும் குழந்தைகள் அலறும் சத்தம் கேட்டன. நான் மெதுவாக ஊர்ந்து சென்று வெளியில் நடப்பதைப் பார்க்க முயன்றேன். காற்றில் சடசடக்கும் துணியினூடே சில ஆயுதம் தாங்கிய குழுக்களைக் கண்டேன். அருகாக வந்து நின்று கொண்டது. அந்த நிமிடம் எனக்கு உடல் முழுவதும் வியர்த்திருந்தது. வந்தவர்கள் எங்கள் முகாமிலிருந்த சகல பைகளையும் ஒன்று விடாமல் பொறுக்கியெடுத்தார்கள். என்னுடைய பையும், அவர்களிடம் சிக்கிக் கொண்டிருந்தது. பாஸ்போர்ட் உட்பட சில பணங்களும் அதிலிருந்தன. ஆனால் அந்த நிமிடம் என்னால் எதுவுமே செய்யமுடியாத நிலை. அமைதியாக நடப்பவையெல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தேன்.

சிறிது நேரம் கழிந்திருக்கும் வந்தவர்களெல்லோரும் திரும்பிப் போய்க்கொண்டிருந்தார்கள். எனக்குப் போன உயிர் திரும்பி வருவதைப்போல் தோன்றவே, மேசையின் அடியிலிருந்து மெதுவாக வெளியே வந்தேன். மற்றவர்களும் ஒவ்வொருவர்களாக வெளியே வரத் தொடங்கினர். எங்களுடைய முகாம் அமைக்கப்பட்ட மைதானம் முழுவதும் இரத்த வாடையாய் இருந்தது.

அடுத்தநாள் காலையில் தான் இராணுவத்தினர் வந்து பிணங்களை அப்புறப்படுத்திக்கொண்டிருந்தனர். அதுவரை நாங்கள் மைதானத்திலேயே இருந்தோம். போனவர்கள் திரும்பி வந்துவிடுவார்களோ என்கிற

# 'குழந்தையை சுட்டுக் கொன்றவர்களும் குழந்தைகளே'

கண்ணில் தென்படுவோர் எல்லோரையும் அவர்கள் ஈவு இரக்கமின்றி சுட்டுத் தள்ளினார்கள். சிலர் தங்களிடமிருந்த கூர்மையான நீண்ட கத்தியால் வெட்டிச் சாய்த்தனர். பார்க்குமிடமெல்லாம் இரத்தச் சகதியாகவும் உயிரற்ற உடல்களாயும் இருந்தன.

எனக்கு வயிற்றிலிருந்து குமட்டிக்கொண்டு வருவதைப் போலிருக்கவே மெதுவாக நகர்ந்து மேசையொன்றின் அடியில் புகுந்து கொண்டேன். மேசையின் மீது வெள்ளைத் துணியொன்றினை விரித்திருந்தார்கள். அந்தத் துணியை இழுத்து மேசையின் அடியில் நானிருப்பதை அவர்கள் பார்க்காதவாறு என்னை மறைத்துக் கொண்டேன். மற்றவர்களும் தங்களை ஒவ்வொரு இடத்திற்குள் மறைத்துக் கொண்டார்கள். பத்து நிமிடங்கள் கழிந்திருக்கும் சிலரின் காலடி ஓசைகள் கேட்டன. நான், அவர்கள் போராளிகள் தானென்பதை ஊகித்துக் கொண்டேன். காலடி ஓசைகளைத் தொடர்ந்து, உள்ளூர் மொழியொன்றில் அவர்கள் பேசிக் கொள்ளும் சப்தம் கேட்டது. நான் அச்சமடைந்தவனாக நடப்பவை யாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு கரிய நிழல் எனக்கு அச்சம் வேறு எங்கள் எல்லோருக்குள்ளுமிருந்தது. நல்லவேளையாக அவர்கள் வரவில்லை. இராணுவத்தோடு சேர்ந்து யூ.என் ஆட்களும் வந்திருந்தார்கள். இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் இறந்து போயிருப்பதாக அவர்கள் எங்களிடம் அறிவித்தார்கள். நான் யூ.என் ஆட்கள் சொன்ன முழுவிபரத்தையும் ஒரு அறிக்கையாக எழுதி ஜெர்மனிலுள்ள எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பினேன். கூடவே எங்கள் ஒவ்வொருவரினதும் பாஸ்போர்ட் பறிபோன விஷயத்தை ஒரு கட்டுரையாக எழுதி அனுப்பியிருந்தேன். ஓரிரு நாட்களிலேயே எங்களுக்கான புதிய பாஸ்போர்ட் வந்திருந்தது. நாங்கள் ஜெர்மன் திரும்பி வருவதில் எந்தச் சிக்கலும் இருக்கவில்லை. நான் ஜெர்மன் திரும்பியதும் மறுபடியும் ஒரு அறிக்கையை தயார் செய்ய வேண்டியிருந்தது. அந்த அறிக்கையில் ஒரு வரி இப்படி இருந்தது.

'குழந்தையை சுட்டுக் கொன்றவர்களும் குழந்தைகளே'

x x x

படம் மேற்கு ஆப்பிரிக்க நாடொன்றில் தொடங்குகின்றது. அந்த நாட்டிலுள்ள சிறிய கிராமமொன்றில் அகூ என்கின்ற சிறுவன் தன்னுடைய குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றான். ஒரு மூத்த சகோதரனும் இரண்டும் இளைய சகோதரங்களும் அவனுடைய உடன்பிறப்புகள். உள்ளூர்த் தலைவரான அகூவின் தந்தை, எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழுவொன்றுக்கு தன்னுடைய நிலத்தில் தங்க அனுமதி கொடுத்துள்ளார்.

அரசாங்கம் கவிழ்கின்றது. நாட்டின் அதிகாரம் இராணுவத்தால் பறிக்கப்படுகின்றது. அகூவின் கிராமமும் இராணுவத்தினால் சுற்றிவளைக்கப்படுகிறது. இராணுவம் அவர்களை போராளிகளெனச் சந்தேகிக்கின்றது. அகூவின் தந்தை எவ்வளவு சொல்லியும் இராணுவம் அவர்களை நம்ப மறுக்கின்றது. கடைசியில் ஒரு கிழவியை வரவழைத்து இவர்கள் இந்த ஊரைச் சேர்ந்தவர்களா எனக் கேட்கின்றார்கள். கிழவியோ கொஞ்சம் புத்தி மங்கிப் போனவள், அவள் இவர்களை பார்த்ததேயில்லையென்று பொய் சொல்லுகின்றாள். அந்த இடத்திலேயே அகூவின் தந்தை சுட்டுக் கொல்லப்படுகின்றார். அகூவும், அவனுடைய மூத்த சகோதரனும் தப்பி ஓடுகின்றார்கள். அப்படி ஓடும்போது மூத்த சகோதரன் சுட்டுக் கொல்லப்படுகின்றான். ஆனால் அகூ மாத்திரம் எப்படியோ தப்பி ஒரு காட்டுக்குள் ஓடிவிடுகின்றான்.



இராணுவமே அக்கிராமத்திற்கு தலைமை தாங்குகின்றது. மக்கள் தங்களுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தலைநகருக்கு தப்பிச் செல்கின்றனர். அகூவின் தந்தை ஒரு கார்க்காரனிடம் தன்னுடைய குடும்பத்தை ஏற்றிச் செல்லும்படி கெஞ்சுகின்றார். கார்க்காரனோ பணம் கொடு ஏற்றிப் போகிறேன் என்கிறான். அகூவின் தந்தையும் தன்னிடமிருக்கும் பணத்தையெல்லாம் எடுத்துக் கொடுக்கின்றார். ஆனால் கார்க்காரனோ இந்தப் பணத்திற்கு இருவரை மாத்திரமே ஏற்றிப் போகலாமென்று கூறி அகூவின் தாயையும், கடைசிச் சகோதரனையும் மாத்திரமே ஏற்றிப்போகின்றான்.

அகூ, அகூவின் தந்தை, அகூவின் மூத்த சகோதரன் மூவரும் இராணுவத்தினரிடம் பிடிபடுகின்றனர். அங்கே NDF என்னும் கொரில்லா இயக்கமொன்று அவனைத் தங்களுடன் சேர்த்துக்கொண்டு விடுகின்றது. அந்த இயக்கத்தின் கொமாண்டோ (இத்ரிஸ் எல்பா) அவனுக்கு கொரில்லா இயக்கத்தின் சகல வித்தைகளையும் கற்றுக் கொடுக்கின்றார். முடிவில் அவனை ஒரு முழு கொரில்லாப் போராளியாக மாற்றுகின்றார்.

அந்த இயக்கத்தில் அகூவைப் போலவே இருக்கும் இன்னொரு சிறுவன்தான் ஸ்ரைக்கா. ஆனால் ஸ்ரைக்காவால் வாய்பேச முடியாது. அவனுடன் அகூ ஸ்னேகம் கொள்கிறான். ஒருநாள் இரவு அகூவை தன்னுடைய அறைக்கு அழைத்துக் கொள்ளும்

இத்ரிஸ் அவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்கின்றார். அகூவைப் போலவே ஸ்ரைக்காவும் இத்ரிஸினால் பலாத்காரத்துக்கு உட்பட்டவனே. அகூவை சமாதானம் செய்யும் அவன் அகூவின் மனதினை மாற்ற அவனுக்கு போதைப்பொருளைக் கொடுக்கின்றான்.

அகூவும் ஸ்ரைக்காவும் யுத்தம் செய்கின்றார்கள். பலநகரங்களைப் பிடிக்கின்றார்கள். பெண்கள், குழந்தைகளென ஒருவர் விடாமல் கொலை செய்கின்றார்கள். பலரை கைது செய்து தங்களுடைய இருப்பிடத்துக்கு அழைத்து வருகின்றார்கள். ஒரு நாள் இத்தரிஸூம் சில போராளிகளும் தங்களுடைய மேல்மட்டத் தலைவரை சந்திக்கச் செல்கின்றனர். பல மணித்தியாலங்கள் காக்க வைக்கப்படும் அவர்களை முடிவில் மேல்மட்ட தலைவர் வந்து சந்திக்கின்றார். இத்தரிஸூக்கு லெப்டினன்ட்டாக பதவி உயர்வு கிடைக்கின்றது. அதைக் கொண்டாடுவதற்காக ஆனால் இத்ரிஸ் அவர்களை சமாதானப்படுத்த முயல்கின்றார். பொறுங்கள் ஆயுதங்கள் இப்போது வந்து விடும் கூடவே மருந்துகளும் வருகின்றன, நாம் தொடர்ந்து போராடலாம் என்கின்றார். அப்போது இத்ரிஸை ஒருவன் எதிர்த்துப் பேச, கோபம் கொள்ளும் இத்ரிஸ் துப்பாக்கியைக் காட்டி அவனை மிரட்டுகின்றார். இந்தச் சமயத்தில் அகூ தன்னுடைய துப்பாக்கியால் இத்ரிசை குறிவைக்கின்றான். நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து கொள்ளும் இத்ரிஸ் மௌனமாக துப்பாக்கியை கீழே இறக்குகின்றார். முடிவில் போராளிகளெல்லோரும் யு.என் நிறுவனத்திடம் சரணடைகின்றார்கள்.

அங்கே இவர்களுக்கு, இத்தனை நாளும் எவ்வாறான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தார்களோ அவ்வாழ்க்கைக்கு முற்றிலும் மாறான வாழ்க்கையொன்று கிடைக்கின்றது. கல்வியும் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. அகூ அந்த வாழ்க்கையோடு

## ‘முதலில் உன் குடும்பத்தைக் கொல், அல்லது யாராவது ஒருவரைக் கொல் நீ மாற்றமடைவாய்’

விபச்சாரவிடுதிக்குச் செல்லும் அவர்களை அங்கேயிருக்கும் ஒரு பெண் சுட்டுவிடுகின்றாள். அதில் பலமாக காயமடையும் இத்ரிஸ் அவளைக் கொன்று விடுகின்றார். முடிவில் தன்னுடைய படையுடன் அந்தக் கிராமத்தை விட்டு வெளியேறியும் விடுகின்றார்.

இப்படியாக யுத்தம் தொடர்கின்றது. அவர்களிடம் இருக்கும் ஆயுதங்கள் குறைந்து போகின்றன. தொடர் தோல்விகளினால் போராளிகள் எல்லோரும் சலித்துக் கொள்கின்றார்கள். ஒருதடவை மறைந்திருந்து தாக்கும்போது ஸ்ட்ரைக்கா இறந்து போகின்றான். தன் நண்பனின் உடலை தன் தோளிலே சுமந்துவரும் அகூ அவனின் உடலை ஒரு இடத்தில் புதைத்துவிட்டுப் போகின்றான்.

படத்தின் இறுதிக் காட்சி, போராளிகள் குற்றவுணர்வு கொள்கின்றார்கள். ஆயுதங்களும் முடிந்து போகின்றன. காட்டுக்குள்ளேயே இருப்பதால் ஒரு விதமான நோய் அவர்களைத் தாக்குகின்றது. சிலர் இறந்தும் போகின்றார்கள். இத்ரிஸிடம் சென்று நாங்கள் திரும்பிப் போய்விடுகின்றோம் என்கின்றார்கள். ஒன்றிப் போகின்றான்.

x x x

சமீப ஆண்டுகளாக யுத்தத்தில் குழந்தைகளைப் பெருமளவில் பயன்படுத்தி வருவது வருத்தமளிக்கின்றது. ஆனால் இது புதிதாக நடந்த ஒன்றல்ல. முதலாம் உலக யுத்தத்தின் போது கூட இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் சிறுவர்களைத் தன்னுடைய படையில் சேர்த்துக் கொண்டது பிரிட்டன். ஆரம்பத்தில் அவர்களை போர்டர்களாகவும், தகவல்களை கொண்டுவந்து தருபவர்களாகவும் மாத்திரமே பயன்படுத்தியிருக்கின்றது. படையில் ஆட்களின் போதாமை ஏற்பட்ட போதுதான் அவர்களையும் எதிரிகளுடன் சண்டைபோடக் கட்டாயப்படுத்தியிருக்கின்றது. லண்டன் மாத்திரமென்றல்ல சிரியா, ரஷ்யா, ஆப்கானிஸ்தான், ஆசியா, ஆப்பிரிக்கா இப்படிப் பல நாடுகள் சிறுவர்களை படையில் சேர்த்துக்கொண்டிருக்கின்றன. வரலாறு முழுவதிலும் சிறுவர்களை இராணுவமானது மிகவும் தீவிரத் தன்மையுடன் தன்னுடைய படையில் சேர்த்துக் கொண்டதை நாம் பார்க்க முடியும்.

நான் மேலே முதலாம் உலகப் போரென்று

குறிப்பிட்டிருந்தேன் அல்லவா அந்தப் படையிலிருந்த அத்தனை சிறுவர்களும் பதினெட்டு வயதிற்குக் குறைவானவர்கள். ஒரு கட்டத்தில் ஐரோப்பா முழுவதும் அவர்கள் போரிட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். 1970 சர்வதேச நிறுவனமொன்று இராணுவத்திலுள்ள சிறுவர்களை எண்ணிக்கை அடிப்படையில் குறைக்க முயன்ற போதும் அது அவர்களால் முடியாமற் போனது. ஏனெனில் அப்போதிருந்த இராணுவம் சிறுவர்களையே எல்லாவற்றுக்குமாக நம்பியிருந்தது என்று Coalition to Stop the Use of Child Soldiers என்கின்ற தன்னுடைய அறிக்கையில் கூறியிருந்தது.

குழந்தைகள் போராளிகளாக இருப்பதற்கு இன்னொரு முக்கிய காரணம் லெதர் வெப்பன்ஸ் எனப்படும் கனமற்ற ஆயுதங்கள். பெரியவர்களை போலவே அவர்களாலும் துப்பாக்கிகளைத் தோளில் மாட்டிக்கொண்டு ஓட முடிகின்றது. சோவியத்தின் ஏ.கே 47 அல்லது அமெரிக்காவின் எம் - 16 இந்த இரண்டு வகையான துப்பாக்கிகளுமே பயன்படுத்துவதற்கு இலகுவானது. பத்து வயதிற்கு குறைவானவர்களினால் கூட இந்த வகையினான துப்பாக்கிகளை கையாள முடியும். பிரித்துச் சுத்தப்படுத்தி பின் பொருத்துவதும் கூட மிக இலகுவானது. குழந்தைப் போராளிகள் அறிமுகமான காலம் தொட்டு, அதாவது 1947லிருந்து ஆப்பிரிக்காவில் மாத்திரமே ஐம்பத்தைந்து மில்லியன் ஏ.கே 47 துப்பாக்கிகள் விற்பனையாகியுள்ளன.

ஹிட்லரின் நாசிக் கட்சியில் சிறுவர்களுக்காகவே "ஹிட்லர் யூத்" என்கின்ற ஒரு பிரிவிருந்தது. ஆரம்பத்தில் இருபத்துநான்கு வயதிற்கு மேற்பட்டவர்களே அந்தப் பிரிவிலிருந்தாலும், சோவியத் யூனியனுக்கு எதிரான நாசிக் படையின் யுத்தம் ஆரம்பமாகிய பிறகு பதினாறு மற்றும் பதினேழு வயதிலிருந்த சிறுவர்களையும் அது தன்னுடைய அணியில் இணைத்துக் கொண்டது. Heinz Shuetze என்கின்ற பதினைந்து வயதுச் சிறுவன் ஒரு டாங்கியை தகர்க்கவைத்தான் என்பதற்காகவே அரைநாள் மாத்திரம் பயிற்சி கொடுக்கப்பட்டு முன்னணியில் போர் புரிய அனுப்பிவைக்கப்பட்ட கதைகளும் உண்டு.

கடந்த பத்து வருடங்களில் மாத்திரம், இரண்டு மில்லியன் சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். ஒரு மில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் அனாதைகளாக்கப்பட்டுள்ளார்கள். ஆறு மில்லியனுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் காயமடைந்தும், அல்லது நிரந்தரமாக முடமாக்கப்பட்டுமுள்ளனர், மற்றும், பத்து மில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் தீவிரமான உளவியல் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு உகண்டாவில் இந்த முடிவற்ற போரினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டது பெண்களும், குழந்தைகளுமே. போராளிகளினால் கொல்லப்பட்ட ஆண்களால் பெருமளவிலான பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். அதன் விளைவாக அனாதைகளாக்கப்பட்டுள்ள அவர்களின் கைகளில் பெரும் சுமைகள் சுமத்தப்பட்டுள்ளன.


'முதலில் உன் குடும்பத்தைக் கொல், அல்லது யாராவது ஒருவரைக் கொல் நீ மாற்றமடைவாய்' என்கின்றது Lord's Resistance Army. LRA என்பது உகாண்டாவைச் சேர்ந்த ஒரு போராட்டக் குழு. காட்டுக்குள் தமது இருப்பிடத்தை அமைத்திருக்கும் இந்தக்குழு திடீரென்று அருகிலிருக்கும் கிராமத்துக்குள் புகுந்து கொலைவெறியில் ஈடுபடும். அல்லது பெண்களையும், சிறுவர்களையும் கடத்திப் போவார்கள். அப்படிக்கடத்தப்பட்டவர்தான் Marie Mboligele. காங்கோவைச் சேர்ந்த இளம் தாயான இவரை ஒருநாள் LRA கடத்திச் செல்கின்றது. கூரிய கத்தியொன்றினால் அவருடைய உதடுகளையும், காதுகளையும் அறுத்தெறிந்துவிட்டு ஒரு வனாந்தரத்தினுள் தனியே விட்டுவிட்டுப்போகின்றது அந்த



இயக்கம். எப்படியோ தன்னுடைய கிராமத்துக்கு வந்துவிடும் இவரை அவருடைய குடும்பம் கண்டு கண்ணீர் விடுகின்றது. இப்படி எத்தனையோ குரூரங்கள் போராளிக் குழுக்களினால் நடத்தப்படுகின்றன.

உண்மையில் எந்த மனிதனும் பிறக்கும்போது வன்முறையாளனாகப் பிறப்பதில்லை. சூழலும் அதிகாரமுமே ஒருவனை பைத்தியக்காரத்தனமான அளவிற்கு வன்முறையாளனாக மாற்றுகின்றது. சகிப்புத்தன்மையின்மை கூட ஒருவகையில் வன்முறையே என்கின்றார் காந்தி.

பீட்ஷ் ஆப் தி நோ நேஷன் திரைப்படத்தில் வரும் போராளிகளிடம் ஒரு அப்பாவி மனிதன் பிடிபட்டு விடுகின்றான். அவனைக் கொலை செய்யச் சொல்லி அவனிடம் ஒரு கத்தியைக் கொடுக்கின்றார் இத்ரிஸ். முதலில் தயங்கும் அவன் இத்ரீஸின் வற்புறுத்தலினால் அந்த மனிதனின் தலையைக் குறிவைத்துக் கத்தியால் வெட்டுகின்றான். ஒருதடவையல்ல, இருதடவையல்ல பலதடவைகள் அந்த மனிதனின் தலையை வெட்டு வெட்டென்று வெட்டுகின்றான். குருதி அவனின் முகத்தில் பிசிறியடிக்கின்றது. ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து வளர்ந்த பிள்ளைக்கு இத்தனை மூர்க்கம் எங்கேயிருந்து வந்தது. தந்தையின் பிரம்படிக்கும், கண்டிப்புக்கும் பயந்து வளர்ந்த சிறுவனால் எப்படி ஒரு கொலையை இப்படிச் சர்வ சாதாரணமாகச் செய்ய முடிந்தது. எல்லாமே ஒரு அதிகாரம் தான். தன்னுடைய கையில் எல்லாமே இருக்கின்றது, எது செய்தாலும் யாருமே கேட்கமாட்டார்களென்ற வீம்பு. அந்த வீம்புதான் அவனை அப்படிக் கொ-டூரமாகக் கொலை செய்ய உந்தியிருக்கின்றது. மேலும் தலைவனின் கட்டளையும்.




இன்னொரு காட்சியில் போராளிகள் தங்களிடம் பிடிபட்ட பெண்களை வன்புணர்கின்றனர். அந்தக் கும்பலில் அகூவும் இருக்கின்றான். போராளிகளில் ஒருவன் ஒரு பெண்ணை ஆவேசமாக வன்புணரும் போது அகூ அவளின் தலையைக் குறிவைத்துச் சுடுகின்றான். எதற்காக இப்படிச் செய்தாயென கேட்டபோது, அவள் என்னுடைய அம்மாவின் சாயலிலிருக்கின்றாள். அவள் அழுவதை பார்க்க என்னால் சகிக்க முடியவில்லை. அதனால் அப்படிச் செய்தேன் என்கிறான்.

ஆப்பிரிக்கா, இந்தியா, இலங்கை போன்ற மூன்றாம் தர நாடுகளில் பாலியல் வன்முறைகள் அதிகரித்தளவில் காணப்படுவதற்கு மிக முக்கிய காரணம் அந்தச் சமூகங்களுக்கிடையிலிருக்கும் பாலியல் வறட்சி. அல்லது அதுபற்றிய அறிவின்மை. எந்தவொரு மனிதனுக்கும் உடலுறவு என்பது மிக முக்கிய தேவைகளிலொன்று. இயலாதவர்களின் காமம் தீயை விட உக்கிரமானது என்று ஜெயமோகன் எழுதியிருப்பார். இந்த உக்கிரம் தான் ஒரு மனிதனை மிக மோசமான பாலியல் வன்முறையாளனாக மாற்றுகின்றது. ஐரோப்பா போன்ற தாராளவாத முதலாளித்துவ நாடுகளில் பாலியல் தேவையென்பது மிக இலகுவில் கிடைக்கக்கூடிய ஒன்றாகும்.

x x x

'ஒரு குழந்தைப் போராளியாகவிருப்பது மோசமானது, அதிலும் பெண்களாகயிருப்பது மிகவும் மோசமானது. ஏனெனில் நாங்கள் அதிகமான யுத்தங்களில் பங்குபெறவேண்டியிருந்தது. நாங்கள் எங்கள் ஆயுதங்களோடு, எங்கள் ஆன்மாக்களை இணைத்து யுத்தம் செய்தோம். எங்கள் தலைவர்கள் எங்களுக்கு எவ்வாறு கட்டளையிடுகின்றார்களோ அவ்வாறே நாங்கள் யுத்தம் செய்தோம். பதிலுக்கு அவர்கள் எங்களைத் தவறாகப் பயன்படுத்திக்

கொண்டார்கள். அத்தோடு அவர்கள் எங்களைப் போன்று இளையவர்களல்ல. எல்லோருமே நாற்பத்தைந்து வயதிற்கு மேற்பட்டவர்கள். நாங்களெல்லோருமே அவர்களை எங்கள் தந்தையர்களாக நினைக்க அவர்களோ எங்களுக்குத் துரோகமிழைத்தார்கள். நான் மொத்தமாக மூன்று யுத்தங்களில் பங்குபற்றியிருப்பேன். ஒவ்வொன்றிலும் வெற்றி. அதன் பிறகு உயரதிகாரியொருவருக்கு மெய்ப்பாதுகாவலராக நியமிக்கப்பட்டேன். அதற்கு அடுத்தபடியாக இராணுவக் காவற்துறையில் சார்ஜண்டாக பணிபுரிந்தேன். அப்படி சார்ஜண்டாக இருந்தபோது எனக்கு வெறும் பதின்நான்கு வயதுகள் மட்டுமே நிரம்பியிருந்தது என்று கூறும் சைனா கெய்ட்ரசி தற்போது பெல்ஜியத்தில் அகதியாக வாழ்ந்து வருகின்றார். அவரை ஜூதியா வூட்ஸ் என்கின்ற பத்திரிக்கையாளர் சந்தித்துப் பேசினார். அது வருமாறு, எங்கள் இருவருக்குமிடையிலான சந்திப்பு புரூஸ்லஸ் உணவுவிடுதியொன்றில் ஏற்பாடாகியிருந்தது. அந்தப் பெண் மிகவும் மெலிவாகவும், லேசாகவுமிருந்தார். வெள்ளைச் சட்டையும், ஜீன்சும் அணிந்திருந்த அவரின் தோல்

வளர்கின்றாள். அப்பா சைனாவின் தாயைப் பிரிந்து வேறொரு பெண்ணை மணம் செய்து கொள்கின்றார். சின்னச் சின்ன தவறுகளுக்குக் கூட பாட்டியினால் தண்டிக்கப்படும் சைனா இளம் வயதிலேயே மனம் வெறுத்துப் போகின்றாள். பாட்டியிடமிருந்து தப்பி மறுபடியும் தன் தந்தையிடமே சென்றுவிட விரும்புகின்றாள். ஆனால் பாட்டி விடுகின்றாளில்லை. இரவுநேரங்களில் ஒரு அறைக்குள் அவளை அடைத்துவிடுகின்றாள். ஆனாலும் அவள் பாட்டியிடமிருந்து தப்பி அப்பாவுடன் சேர்ந்து விடுகின்றாள். அவளுடைய வாழ்க்கை வேறுவிதமாக மாறுகின்றது. ஆனாலும் அவள் நினைத்த வாழ்க்கை அதல்ல. பாட்டியிடம் எவ்வளவு துன்பங்களையும், கொடுமைகளையும் அனுபவித்தாளோ அதைவிட இரண்டு மடங்கான கொடுமைகளை அவளின் அப்பாவின் வீட்டில் அனுபவிக்க நேருகின்றது.

ஆரம்பத்தில் தன்னுடைய இரண்டாவது தாயின் பிள்ளைகளோடு அன்பாகயிருக்கும் சைனா அவர்களின் மூலம் தனக்கு ஏற்படும் ஏச்சுக்களினாலும் அடி உதைகளினாலும் அவர்களை வெறுக்கின்றாள்.

**நான் முதல் முறையாக துப்பாக்கியைத் தூக்கி என் முதுகில் சுமந்தபோது எனக்கு ஒன்பது வயது. உண்மையில் கொலைசெய்வதோ அல்லது காயப்படுத்துவதோ எனக்கு என்றுமே பிடித்தமான காரியமாக இருந்ததில்லை.**

கறுப்பாகயிருந்தது. நாங்கள் இருவரும் கைகளைக் குலுக்கி அறிமுகமாகிக் கொண்டோம். நான் சூடான கோப்பியொன்றை எடுத்துக் கொள்ள, அவர் சிகப்பு நிற திராட்சை மதுக்கோப்பையொன்றை எடுத்துக் கொண்டார்.

தன்னுடைய நீலநிறக் கண்களை அடிக்கடி சிமிட்டிக்கொண்டிருந்த அவர் பேசலானார், நான் முதல் முறையாக துப்பாக்கியைத் தூக்கி என் முதுகில் சுமந்தபோது எனக்கு ஒன்பது வயது. உண்மையில் கொலைசெய்வதோ அல்லது காயப்படுத்துவதோ எனக்கு என்றுமே பிடித்தமான காரியமாக இருந்ததில்லை. மனதளவில் கூட அப்படிச் சிந்திப்பதற்கு அச்சம் கொண்டவள் நான். ஆனால் அதையும் மீறி நான் கொலைகளையும்,காயப்படுத்தல்களையும் செய்திருந்தேனென்றால் அது என் தலைவரின் விருப்பத்திற்காக மாத்திரமே.

x x x

சைனா தன்னுடைய சிறிய வயதில் பாட்டியிடம் அங்கிருந்து தப்பி தன் நிஜமான அம்மாவைத் தேடித் போகின்றாள். ஒரு கட்டத்தில் தன் அம்மாவை கண்டுபிடித்துவிடும் அவள், தான் எதிர்பார்த்த அம்மாவாக அவள் இல்லாததினால் மறுபடியும் ஓடத் தொடங்குகின்றாள்.

அங்கேதான் சைனாவின் இரண்டாம் கட்ட வாழ்க்கை தொடங்குகின்றது. ஒரு போராளிக்கு குழுவில் தன்னை இணைத்துக் கொள்ளும் அவள் தன்னுடைய பதின்ம வயதிலேயே சகல பாடுகளையும் பட்டுவிடுகின்றாள்.

தன்னையொத்த குழந்தைகளுடன் சேர்ந்து தாக்குதல் நடத்தவும், சண்டையிடவும், முன்னேறித்தாக்கவும், பதுங்கியிருக்கவும் கற்றுக் கொள்கிறாள். போராளிகள் ஆட்சியைப் பிடித்தவுடன் அவளுக்கு அரசு அலுவலகம் ஒன்றில் காவலாளியாக வேலை கிடைக்கிறது. மீண்டும் தாயிடமே சென்று அவளுக்கு ஒரு நிலம் வாங்கிக் கொடுக்க ஆசைப்படுகின்றாள். இச்சமயத்தில் அவளுடைய வேலை பறிபோக இன்னொரு வேலையில் சேருகின்றாள். அங்கே இவளொரு முன்னாள் போராளியென்கின்ற விஷயமும்,

அவளுடைய மூர்க்கத் தனங்கள் பற்றியும் தெரியவர அங்கு பணிபுரிபவர்களெல்லோரும் அவளையிட்டு அச்சமடைகின்றனர். ஒரு வகையில் இது சைனாவிற்குப் பிடித்துப் போகின்றது. மதுச்சாலையிலும் அங்காடிகளில் பொருட்கள் இலவசமாகவே கிடைக்கின்றன. இது இப்படியிருக்க போராளிகளுக்கு எதிராக ஆட்சியாளர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கின்றனர். சைனாவிற்கு எதிராகவும் வழக்குத் தொடரப்படுகின்றது.

கருவுற்றுருக்கும் சைனா ஆட்சியாளர்களிடமிருந்து தப்பி அமெரிக்கா செல்லத் திட்டமிடுகின்றாள். அதற்கிடையில் குழந்தை பிறந்துவிட, தன் சகோதரியிடம் அக்குழந்தையை ஒப்படைத்துவிட்டு தென்னாப்பிரிக்காவில் தஞ்சமடைகின்றாள். ஆனால் உகண்டா ஆட்சியாளர்கள் சைனாவைத் தேடி அங்கும் வந்துவிட முடிவில் ஐக்கிய நாடுகள் சபையிடம் சரணடைகின்றாள்.

உண்மையில் வன்புணர்வென்பது அதிகாரத்-திமிரின் ஆணவத்தின் இன்னொரு படிமம். இந்த அதிகாரத்திமிரும் ஆணவமும் அதனை அதாவது வன்புணர்வினை எதிராளிக்கு கொடுக்கும் அதிக உச்சபட்சத் தண்டனையாகப் பார்க்கின்றது. அதுவும் பெண்களின் மீது மிக மோசமான அளவிலேயே பிரயோகிக்கின்றது. இன்னொன்று, இந்த வன்புணர்வின் மூலம் எதிராளியைத் தான் அவமானப்படுத்தி விட்டதாக நினைக்கிறது. அதிகாரத்-திமிரும் ஆணவமும் எப்போதும் - கொல்வதைவிட- அவமானப்படுத்தலையே தன்னுடைய முதற்க்குறியாக கொண்டுள்ளது எனலாம்.

இப்படித்தான் ஒருதடவை சைனா முகண்டாச் சிறுவன் ஒருவனோடு உரையாடிக்கொண்டிருக்கின்றாள். அப்பொழுது ரொனால்ட் என்கின்ற சார்ஜண்ட் இவளைப் பார்க்க வருகின்றார். வந்தவர் சைனாவையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். சைனாவிற்குப் பயம் பிடித்துக் கொள்கின்றது. சிறிது நேரத்தில் அந்த முகண்டாச் சிறுவனை வெளியே அனுப்பிவிடும் ரொனால்ட் சைனாவைத் தூக்கி கட்டிலில் போடுகின்றார். இதற்கு முதல் அவள் யாருடனாவது படுத்திருக்கின்றாளா என்பதை அறிவதற்காக அவளுடைய அல்குலை பிடித்துப் பார்க்கின்றார். வலியில் கதறும் சைனாவை அந்த இடத்திலேயே வன்புணர்கின்றார். அவர் போனபிறகு திரும்பிவரும் முகண்டாச் சிறுவன் சைனாவை ஆறுதற்படுத்துகின்றான். ஆனால் சைனாவால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அடுத்தநாள் காலை சைனா தான் நல்ல மனிதரென்று நம்பியிருக்கும் நாற்பது வயதுடைய சார்ஜண்ட் ஒருவரைச் சந்தித்து நேற்றிரவு நடந்ததனைத்தையும் சொல்லுகின்றாள். அவள் மீது இரக்கம் கொள்ளும் அந்த மனிதர் அவளை தன்னுடைய மனைவியிடம் அழைத்துச் சொல்லுகின்றார். முதலில் அச்சமடையும் அவர் மனைவி, பின்பு அவளை தன்னுடைய வீட்டில் தங்க அனுமதிக்கின்றாள். அவர்களின் வீட்டில் பொந்து போன்றிருந்த சிறிய அறையொன்றில் மறைத்து வைக்கப்படும் சைனா மூன்று நாட்கள் கழித்து அவளின் தாயிடம் அனுப்பப்படுகின்றாள்.

சைனா காட்டின் வழியே நடந்து போகின்றாள். கூடவே இன்னொருவன் பாதுகாப்பிற்கு வருகின்றான். இருவரும் காட்டின் நடுப்பகுதியை அடைகின்றனர். அப்போது பாதுகாப்பிற்கு வந்தவன் அவளை மறித்து, இப்பொழுதே இங்கேயே நீ என்னுடன் படுத்தாக வேண்டுமென்கின்றான். மறுத்தால் கொலை செய்துவிடுவேனெனவும் மிரட்டுகின்றான். நடுங்கிப் போகும் சைனா, அவனிடமிருந்து தப்பிப்பதற்காகத் தானொரு ‘சிபிலிஸ்’ நோயாளியெனப் பொய் சொல்லுகின்றாள். அவள் சொல்லும் பொய்யை உண்மையென நம்பிவிடும் அவன் அவளை அப்படியே விட்டுவிட்டுப் போகின்றான்.

இன்னோர் இடத்தில் கசிலிங்கி என்பவனின் வீட்டில் காவலாளியாக வேலைக்குச் சேர்கிறாள் சைனா. ஒருநாள் தன்னிடம் அறிவிக்காமல் இரவு நேரத்தில் வெளியே போனதற்காக சைனாவைத் தண்டிக்கும் கசிலிங்கி, தன்னுடைய விருப்பத்திற்கு அவளை பயன்படுத்துகின்றான். துயரம் தாங்காமல் தன்னை வேறொரு முகாமுக்கு மாற்றச் சொல்கின்றாள். ஆனால் கசிலிங்கியோ அவளை விடாமல் வன்புணர்கின்றான். மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சைனா கர்ப்பம் தரிக்காமலிருக்க வைத்தியமும் செய்கின்றான். நாள்தோறும் துன்பப்படும் சைனா ‘வலிக்கிறது’ என்று கூறும்போதெல்லாம், ‘பயப்படாதே இனிமேல் செய்யும்போது மெதுவாகச் செய்கிறேனென்கின்றான்’

இப்படித் தன் வாழ்நாள் முழுவதும் சைனா வன்புணரப்பட்டுக்கொண்டேயிருக்கின்றாள். அதுவும் அவள் நல்லவர்களென்று நம்பியிருந்தவர்களாலேயே அப்படியொரு சம்பவம் நடந்தது பெருந்துயரம்.

குழந்தைகள் தெய்வத்திற்குச் சமனானவர்கள். ஆனால் அவர்களோ தவறான மூளைச் சலவை மூலம், அல்லது வழிகாட்டலின் மூலம் துப்பாக்கி ஏந்தப் பழகிவிட்டார்கள். இதற்கு ஏதோவொரு வகையில் பெரியவர்களாகிய நாங்களும் காரணமாயிருக்கின்றோம்.

●

கற்சுறா

### 1.எழாது படிதல்

கர்வத்தின் குழந்தை கையில் தூங்கிக்கிடந்தது.
ரேகைகளை மறைத்தபடி
சரிந்து கிடந்த கோலம்
உதிர்காலத்து இலையைப்போல்
நிலத்தில் படியும் என்ற நிறம் மாறிப்போய்விட்டது.

கால்களை அகல விரித்துப் பிரியும்
சருகின் வர்ணம்,
தூக்கத்திலும் சிரிக்கும் குழந்தையிடமும்
தோற்றுக் கொண்டேயிருக்கிறது.
.
எழுந்து நடக்கும் கனவில்
சிரித்து விழும் குழந்தைக்குத் தெரியாது
பழுத்த இலை
நிலத்திற்காய்த் துளிர்க்காதது.

### 2. எட்டுச் செலவு.

அழைத்த இடம் தேடி நான் வரப்போவதில்லை.

நீ வந்து கொண்டிருப்பது எனதிடம்.

சக்கரங்களில் சுழன்று சுற்றுவதில்
இல்லையா முடிவு?

காரணம் ஒன்றாய் இருப்பின்
அது கொலையல்ல
தற்கொலையைப்போல்.

அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது
தூக்குக் கயிறு.


கயிற்றின் நுனி நாடிச் சென்று
அடையா வழியில் இடம்மாறி
முடிவில் தொங்கி
நிலை கொள்ளாது
எதிர் இருக்கையில்
வளைந்து நெளிவதா கவிதை?
அதற்கொரு பெயர் வை.

கற்சுறா



## 3. கொப்பிழந்த கை தவறி குறி பற்றியது.

*வெப்பச் சரீரத்தின் மூச்சுக் காற்றிலிருந்துதான் நீங்கள் முதற் கதையைச் சொல்லத் தொடங்கினீர்கள். எப்போதோ சொல்லிச் சலித்துப் போன கதைகளை திரும்பவும் கேட்கும்படி நிர்ப்பந்திக்கிறீர்கள். இப்போது ரசிக்கமுடியாமல் இருப்பது கதைகளை மட்டுமல்ல. தனித்தே நடத்தி வந்த காட்டுப்பாதைகளில் மட்டும் நீங்கள் என்னைத் தவிக்கவிடவில்லை. வனத்தின் வாசனையை அறுத்தெடுத்த காலத்தில் இருப்பது நானல்ல. எனது அலறலை உங்களது குரல் பற்றியிருக்கும் காலமாய் மாறிவிடும் என்று நினைத்திலேன். அறுத்தெடுக்க அறுத்தெடுக்க கை தவறி பற்றியது எது? யாரது குறி?*



> பார்வையாளர்கள் திட்டமிடப்பட்ட முறையில் மோசமான படங்களைப் பார்ப்பதற்குப் பழக்கப்படுத்தப் படுகிறார்கள். சமூக விழுமியங்கள் பண்பாடு மற்றும் இரசனைகளிற் திட்டமிடப்பட்ட தரக்குறைவு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

*கடந்த மாசி மாதம் 14ம் திகதி த இந்தியன் எக்ஸ்பிரசில் வெளிவந்த அடூர் கோபால கிருஷ்ணன் அவர்களுடனான நேர்காணலின் தமிழ் வடிவம்*

*'பார்வையாளர்கள் திட்டமிடப் பட்ட முறையிற் மோசமான படங்களைப் பார்ப்பதற்குப் பழக்கப்படுத்தப்படுகிறார்கள். சமூக விழுமியங்கள் பண்பாடு மற்றும் இரசனைகளிற் திட்டமிடப்பட்ட தரக்குறைவு ஏற்படுத்தப்பட்டு வருகிறது'*

– **அடூர் கோபாலகிருஷ்ணன்**

*கேரளாவின் புதிய சினிமா அலை இயக்கத்தினதும் திரைப்படச்சங்கங்களினதும் மூலகர்த்தாக்களில் ஒருவராகக் கருதப்படும் அடூர் கோபால கிருஷ்ணன் அவர்கள் பதினொரு திரைப்படங்களையும் 30 குறுந்திரைப்படங்களையும் இன்னும் ஆவணப்படங்களையும் இயக்கியுள்ளார், ஏறத்தாழ 50 வருட காலச் சினிமா வாழ்வில் அவர் பல முக்கியமான விருதுகளையும் பெற்றிருக்கிறார். 1984 இல் பத்மஸ்ரீ விருதையும் 2004ல் தாதாசாகேப் பால்கே விருதையும் 2006ல் பத்மவிபூஷன் விருதையும் பெற்றிருக்கிறார்.*

**சுப்ரா குப்தா: டெல்லி மற்றும் வடஇந்தியாவின் ஏனைய பகுதிகளுக்குச் செல்லும் பொழுது அங்கிருக்கும் பார்வையாளர்கள் முன்பிருந்ததை விடத் தற்பொழுது கேரளச் சினிமாப் படங்களை வரவேற்பதாக உணர்கிறீர்களா?**

க் ட் 13

கேரளாவில் இருந்து வரும் வர்த்தகரீதியான சினிமாப்படங்களுக்குத்தான் அதிகளவு வரவேற்பிருப்பதாக நினைக்கிறேன். இத்தகைய படங்களை நான் கருத்துக்கெடுப்பதில்லை. இம்மலையாளப் படங்கள் போலிவூட்டில் (Bollywood) உருவாக்கப்படுகிற ஏனைய படங்களைப் போன்றவைதான். இவை மலையாளப்படங்கள் அல்ல. படத்தில் வரும் பாத்திரங்கள் மலையாளத்தைப் பேசுகின்றன அவ்வளவுதான். இத்தகைய படங்கள் அதிக நம்பிக்கைகளைத் தருவதில்லை.

**சுப்ரா குப்தா: நம்பிக்கையைத் தருவதில்லையா?**

இல்லை. இத்தகைய படங்கள் நம்பிக்கையைத் தருவதே இல்லை. பல சந்தர்ப்பங்களில் இத்தகைய படங்களில் நல்ல கூறுகள் பலவற்றைக் காண முடிந்தாலும் அவை அங்கேயே கொல்லப்பட்டு விடுகின்றன. வர்த்தக சினிமாவின் ஒரே வகை மாதிரியான சமன்பாட்டுக்குள் அல்லது வாய்ப்பாட்டுக்குள் எல்லாவற்றையும் திணிக்கப் படத் தயாரிப்பாளர்கள் முனைவதனால் படங்களில் வரும் நல்ல அம்சங்களும் பழுதாகி விடுகின்றன. பல நல்ல கதைகளும் நாவல்களும் படமாக்கப்பட்டுள்ளன. ஆனால் இவற்றை நுணுக்கமாகக் கவனித்தால் இப்படங்களில் அக்கதைகளினதும் நாவல்களினதும் தனித்துவமும் மூலத்துவமும் இழக்கப்பட்டிருப்பதைக் காணலாம். காரணம் என்னவெனில் நல்ல கதைகளை வியாபார சினிமாவின் வாய்ப்பாட்டுக்குள் அடக்கத் தயாரிப்பாளர்கள் முயற்சி செய்திருப்பார்கள். ஒரு படம் சில முக்கியமான விடயங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்ற உணர்வை அவர்கள் கொண்டிருக்கிறார்கள். குறைந்த பட்சம் ஐந்து அல்லது ஆறு பாடல்கள், ஒரு கதாநாயகன், ஒரு கதாநாயகி, அவர்கள் ஓடி ஆடிப்பாடுதல் சில நகைச்சுவை நடிகர்கள் போன்றவை ஒரு படத்தில் இருக்கவேண்டும் என்பது அவர்களின் விருப்பமாக இருக்கிறது.

**சுப்ரா குப்தா : 1970 - 80 கள் கேரள சினிமாவின் பொற்காலம். அக்காலத்தில் வந்த படங்களைப் போன்று தற்காலத்தில் படங்கள் உருவாக்கப்படுவதில்லை என நினைக்கிறீர்களா?**

கேரளாவிலும் கூட வழமைக்கு மாறான கதை அம்சங்களைக் கொண்ட(offbeat-கலைப்படமொன்றை) படமொன்றைத் தயாரிப்பது இலகுவானதல்ல. இத்தகைய படங்கள் பிரபலங்களை வைத்துத் தயாரிக்கப்பட்டவையாக இருந்தாலும் கூட அவற்றை வெளியிடுவது கஸ்டமாகத்தான் இருக்கிறது. முன்பு, நீங்கள் ஒரு திரை அரங்கைப் பதிவு செய்து அதில் ஒரு படத்தை வெளியிட்டால், குறிப்பிட்ட சில நாட்களுக்கு குறித்த அளவு பார்வையாளர்களைக் கொண்டு அப்படம் ஓடினாலே பொருளாதாரரீதியான தன்னிறைவைப் பெறுவது சாத்தியமாக இருந்தது. இப்பொழுது வழமைக்கு மாறான கதை அம்சங்களைக் கொண்ட படங்கள் என்றாலே திரை அரங்க உரிமையாளர்கள் அரங்கைத் தரப் பின்னடிக்கிறார்கள். நட்சத்திர நடிகர்கள் நடிக்காத படங்கள் என்றால் அதிலும் தேசிய விருது பெற்ற படங்கள் என்றால் திரை அரங்க உரிமையாளர்கள் அரங்கைத்தர விரும்புவதில்லை. ஒரு படம் தேசிய விருது பெற்றது என்றாலே அந்தப் படம் திரையிடத்தகாதது என்ற எண்ணம் உருவாகிவிட்டது.

**சுப்ரா குப்தா: உங்களுடைய எல்லாப் படங்களும் விருது பெற்றவை. அவை வெளியிடப்படவில்லையா என்ன?**

சுயம்வரம் (Swayamvaram) படத்துக்காக எனக்குத் தேசிய விருது கிடைத்தபோது அவ்விருதும் அதை ஒட்டி வந்த செய்திகளும் கேரள மக்களைக் கவர்ந்து அப்படத்தின்பாற் கவனத்தை ஏற்படுத்திய காரணத்தால் அப்படம் Box officeல் உடனடி வெற்றியை அடைந்தது. பல வருடங்களுக்குப் பிறகு எனக்கு மீண்டும் அனந்தரம், கதாபுருசன் படங்களுக்காக விருது கிடைத்தது. ஆனால் அப்பொழுது அப்படங்களுக்கு மக்களிடம் முன்பு போல வரவேற்பு இருக்கவில்லை. வெகுசனங்களும் திரை அரங்க உரிமையாளர்களும் அக்கட்டத்தில் தேசிய விருது என்பது கனதியான படங்களுக்கான தரக் குறியீடு எனவே இத்தகைய விருது பெறும் படங்கள் திரை அரங்குகளில் வெளிப்படவேண்டியவை அல்ல என்னும் மனப்பதிவை அடைந்து விட்டிருந்தனர். இதனால் அவர்கள் திரை அரங்குகளில் பெருமளவான மக்களைக் கவரக்கூடிய குப்பைகளைத் திரையிடத் தொடங்கினார்கள். இதற்காக அவர்களைக் குறைகூறமுடியாது.

**மனீஸ் ஷிபெர்: வழமைக்கு மாறான கதை அம்சம் கொண்ட பல இந்திப்படங்கள் அண்மையில் box office இல் வெற்றி அடைந்துள்ளன. அவற்றைப் பார்த்திருக்கிறீர்களா?**

நான் சில இந்திப்படங்களைப் பார்த்துள்ளேன். தற்காலத்தில் இந்திப் படங்களில் உண்மையிலும் மிக ஆர்வமூட்டும் விடயங்கள் நிகழ்ந்து வருகின்றன. இவற்றை வழமையான பொலிவூட் திரைப்படங்கள் என்ற வகைக்குள் இனிமேலும் கொண்டு வர முடியாது. இப்படங்கள் இந்தி மொழியில் தயாரிக்கப்படுகின்றன. மேலும் இவை நவீனமான பன்மாடத்திரை அரங்குகளில் வெளியிடப்படும் சந்தர்ப்பத்தையும் பெறுகின்றன.உண்மையில் இந்தியாவின் ஏனைய

மாநிலங்களிலும் மொழிகளிலும் தயாராகும் கலைப்படங்களை வாங்கி மொழிமாற்று அடிக் குறிப்புக்களோடு நவீன பன்மாடித்திரை அரங்குகளில் வெளியிடுவதன் மூலமும் லாபத்தை சம்பாதிக்க முடியும் ஆனால் இதற்கு எந்த விநியோகத்தரும் துணிவதில்லை.

**லிஸ் மத்தியூ: ஆரம்பத்தில் கேரளத்தில் இடதுசாரிச் சிந்தனைகளின் தாக்கம் பெருமளவுக்கு இருந்தது; மாறுபட்ட கலாச்சாரமொன்றிருந்தது. அது முன்னேற்றகரமானதென்றும் கருதப்பட்டது. பிற்பாடு கேரளத்தின் இடதுசாரிப் பண்பு கொண்ட உரையாடல் மற்றும் விவாதங்களின் தரம் குறைந்து போய்விட்டதாகக் கருதுகிறீர்களா?**

*கேரளத்தின் எழுத்தறிவு 100 வீதம் என்றொரு கருதுகோள் உள்ளது. எழுத்தறிவை 100 வீதம் கொண்ட ஒரு சமூகத்தில் உருவாகக் கூடிய பண்பாட்டின் கோலம் எவ்வாறு இருக்க வேண்டும்? கேரளத்தைப் பாருங்கள். கேரளத்தில் ஒரு நாடக இயக்கம் இல்லை. நாடக எழுத்தாளராக இருக்கக் கூடிய உள்ளுறை ஆற்றலையும் இரசிப்பையும் கொண்ட பல எழுத்தாளர்கள் முட்டாள்தனமான குறுந்திரைத்தொடர் எழுத்தாளர்களாக மாறி இலகுவாகப் பணம் சம்பாதிக்கும் முயற்சியில் இருக்கிறார்கள். உண்மையிலும் நாங்கள் ஆபத்தானதொரு சூழ்நிலையில் இருக்கிறோம். குறுந்திரைத் தொடர்கள் அளவுக்கணக்கில்லாமற் பார்க்கப்படுகின்றன. கேரளாவில் 30 க்கும் அதிகமான தொலைக்காட்சி நிலைய அலைவரிசைகள் இருக்கின்றன. ஆனால் ஒன்று கூட விருதுபெற்ற படங்களை ஒளிபரப்புவதில்லை. பார்வையாளர்கள் திட்டமிடப் பட்ட முறையிற் மோசமான படங்களைப் பார்ப்பதற்குப் பழக்கப்படுத்தப்படுகிறார்கள். சமூக விழுமியங்கள் பண்பாடு மற்றும் இரசனைகளிற் திட்டமிடப்பட்ட தரக்குறைவு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. கேரள சமூகத்திற்கு இப்போக்கு உண்மையான அச்சுறுத்தலாக உள்ளது. நாங்கள் இதில் இருந்து தப்ப முடியாதபடி அகப்பட்டுள்ளோம்.*

**ஷைலஜா பாஜ்பாய் : தணிக்கைக் குழுவை மறுசீரமைப்புச் செய்வதற்கான பரிந்துரைகளை வழங்கும் நோக்குடன் சியாம்பெனகல் குழு அமைக்கப்பட்டது. தணிக்கை என்னும் கருத்தை நாங்கள் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்களா? தணிக்கை குழு என்பது தனியே சான்றிதழை வழங்குவதாக மட்டும் அமைய வேண்டும் என்றும் நினைக்கிறீர்களா?**

*இது தொடர்பாகச் சியாம் பெனகல்: 'அது தணிக்கைக் குழு அல்ல, சான்றிதழ் வழங்கும் குழு மட்டுமே' எனத் தெளிவான கருத்தைச் சொல்லியுள்ளார். என்னைப் பொறுத்த வரை சான்றிதழ் வழங்குதல் என்பதற்குக் கூட நான் எதிரானவன். நீங்கள் எதற்குச் சான்றிதழ் வழங்கப் போகிறீர்கள். சிலர் இருந்து கொண்டு நல்லதையும் கெட்டதையும் தீர்மானித்து விதிகளையும் வியாக்கியானம் செய்துகொண்டிருப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஒருவரைப் படத்தில் மதுக் கோப்பையுடன் காட்டினால் படக் காட்சியின் அடியில் மது அருந்துதல் உடல் நலத்துக்குக் கேடானது என ஒரு செய்தியைப் போட வேண்டும் என்கிறார்கள். மது அருந்துதல் கேடானது என்பது பார்வையாளர்களுக்குத் தெரியாது என்று கருதுகிறீர்களா? உண்மையிலும் அங்கு வர வேண்டிய செய்தி மதுவுக்கு அடிமையாக வேண்டாம் என்பதுதான். ஆனால் சினிமா என்பது எல்லாவற்றையும் எழுதக் கூடிய கரும்பலகை அல்ல. இன்றைக்கு இணையத்தில் எல்லாவற்றையும் தரவிறக்கிக் கொள்ள முடிகிறது. குடிப்பது உடல் நலத்துக்குக் கேடானது என்ற செய்தியைப் எங்காவது பார்க்கும் போது அன்று மாலை நீங்கள் அருந்த வேண்டிய மதுவின் நினைவு உங்களுக்கு வந்துவிடுகிறது. உடனேயே நீங்கள் காட்டவேண்டிய புற்றுநோய் பற்றிய கொடூரமான குறுந்திரைப்படத்தின் நினைவும் வந்துவிடுகிறது. கடவுளே! எல்லோரும் உணர்வற்றுப்போய்விட்டார்களா என்ன?*

**சுப்ரா குப்தா : கலைப்படங்களைப் பார்ப்பதற்கு ஆர்வமில்லாத ஒரு சமூகத்தில் சினிமாவை முன்னேடுத்து செல்ல என்ன செய்யலாம் என நினைகிறீர்கள்?**

*வர்த்தக நோக்கத்தைக் கொண்டிராத திரைப்படங்களுக்கு வழங்கி வந்த சகல உதவிகளையும் அரசாங்கம் நடைமுறையில் நிறுத்தி விட்டது. மாணவர்கள் பயிற்றப்படும் திரைப்படக்கல்லூரியைப் பாருங்கள். அதற்கு என்ன நடந்தது என்பதைப் பாருங்கள்.*

**சுப்ரா குப்தா: இந்தியத் திரைப்பட மற்றும் குறுந்திரைப்படக் கல்லூரியின்** [The Film and Television Institute of India (FTII)] **நிலையும் இவ்வாறுதான்.**

*நம்பிக்கை வைப்பதற்கு அங்கே என்ன இருக்கிறது. இந்தியத் திரைப்பட வளர்ச்சிக் கூட்டுத்தாபனத்தைப்* (National Film Development Corporation of India (NDFC) *பாருங்கள். அல்லது அது போன்றதொரு நிறுவனமான தேசியத் திரைப்பட ஆவணத்துறையைப் பாருங்கள். அவர்கள் மறைமுகமாக வர்த்தக சினிமாத்துறை வளர்ச்சிக்கே உதவி செய்து வருகிறார்கள். அவர்கள் திரைப்பட வளர்ச்சி இன்னும் ஆவணப்படுத்தல்கள் போன்றவற்றில் நடைமுறையில் ஈடுபடுவதில்லை. அவர்கள் வேறு விடயங்களில் ஈடுபடுகிறார்கள்*

அல்லது எவற்றிலும் ஈடுபடுவதில்லை.


**சுப்ரா குப்தா: இவற்றுக்கெல்லாம் காரணம் அரசாங்கமே என்று நம்புகிறீர்களா? பொதுமக்கள்- தனியார் துறைக் கூட்டுமுயற்சி இங்கு அவசியமாகிறது என்று நினைக்கிறீர்களா?**

எந்த அரசாங்கமாவது (திரைப்படத்துறையைப் பொறுத்தவரை) ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடும் என்று நம்புவது தவறானது. ஏனெனில் கடந்த கால அனுபவங்கள் கசப்பானவையாகவே இருக்கின்றன. தனியாரது முயற்சிகளே இன்றைக்கு அவசியமானவை. உதாரணமாகக் கலைப்படங்களை வாங்கி அவற்றின் உரையாடலுக்கு மொழிபெயர்ப்பு எழுத்தோட்டம் இட்டுப் பெரிய நகரங்களில் திரையிடும் வேலையைச் செய்வதற்கான வலைப் பின்னலை உருவாக்க ஒரு விநியோகத்தர் தேவைப்படுகிறார். பெரு நகரங்களிற் கலைப்படங்களைப் பார்ப்பதற்கு பெருமளவு மக்கள் தயாராகவே இருக்கிறார்கள். இதன் மூலம் இம்முயற்சி பொருளாதாரரீதியான தன்னிறைவையும் அடையமுடியும்.

**அமிர்த் லால் : நீங்கள் கேரளாவின் திரைப்படச்சங்கங்களின் உருவாக்கத்தின் அல்லது இயக்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகக் கருதப்படுகிறீர்கள். நல்ல சினிமாக் கலாச்சாரத்தை உருவாக்குவதில் இத்தகைய சங்கங்களின் முக்கியத்துவத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

திரைப்படச்சங்கங்கள் சினிமாக் கலாச்சாரத்தை முன்னேற்றுவதற்கு மிகுந்த பங்களித்துள்ளன. அது மட்டுமல்ல முன்பு இவை உலக சினிமாவைப் பார்ப்பதற்கு வழியும் செய்தன. இவை இல்லாவிட்டால் கேரளாவில் மலையாள சினிமாவையும் தமிழ் சினிமாவையும் தான் மக்கள் பார்த்துக் கொண்டிருந்திருப்பார்கள். திரைப்படச் சங்கங்கள் சினிமாக் கலாசாரத்தை ஊக்குவித்தது மட்டுமல்ல. அவை காரணமாகப் பலர் படங்களைத் தயாரிக்கும் ஆர்வத்தையும் அடைந்தனர். இன்றைக்கு இத்தகைய திரைப்படச் சங்கங்கள் மக்கள் மத்தியில் முன்பு போல் அதிக தாக்கத்தை ஏற்படுத்துபவையாக இருப்பதில்லை. ஏனெனில் உலக சினிமாவுக்கான ஒரேயொரு சன்னலாக இவை இப்போது இல்லை. இப்பொழுது நிறைய வசதிகள் வந்துவிட்டன. இணையத்தில் படங்களைத் தரவிறக்கம் செய்ய முடிகிறது. தொலைக்காட்சிகளில் படங்களைப்பார்க்க முடிகிறது. திரைப்படவிழாக்களும் தற்பொழுது கேரளாவில் பரவலாக இடம்பெறுகின்றன.

**சுப்ரா குப்தா: கேரளப் பார்வையாளர்களுக்கு மொழி மாற்று அடிக்குறிப்புகளுடன் இந்தி**



**சினிமாக்களைப் பார்ப்பதற்குக் கிடைக்கிறதா?**

ஆம் அவர்களுக்கு மொழிமாற்று அடிக்குறிப்புகள் கூடத் தேவையில்லை. இவ்விடயத்தில் இந்திப் படங்களுக்கு சாதகமான சூழ்நிலையே நிலவுகிறது. இந்திப்படங்களில் வரும் உரையாடல்களையோ பாடல்களையோ மொழிமாற்றித்தான் படத்தை விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற தேவை அதனைப்பார்ப்பவர்களுக்கு ஏற்படுவதில்லை. ஏனென்றால் இப்படங்கள் யாவும் ஒரே மாதிரியானவை. படத்தில் பார்வையாளருக்குப் புரிந்து கொள்வதற்கு கடினமானவெதுவும் இல்லை. படத்திற்கும் பார்வையாளருக்கும் இடையில் உராய்வுகள் ஏதும் இல்லை.

**சுப்ரா குப்தா: நீங்கள் சொல்வதைப் பார்த்தால் படத்துக்கும் பார்வையாளருக்கும் இடையில் உராய்வு இருக்க வேண்டும் என்கிறீர்கள்?**

ஒரு படமானது இதுவரையும் சொல்லாத ஒன்றை, அவர்களுக்குப் பழக்கப்படாத ஒன்றைச் சொல்லும் போது பார்வையாளருக்கும் படத்துக்கும் இடையில் உராய்வு ஏற்படுகிறது. கலைப்படங்கள் எனப்படும் படங்களில் இதுதான் நிகழ்கிறது.



கேரளாவில் பல உணர்வலைகளையும் தோற்றுவித்த நாவலாகும். அது தோற்றுவித்த உணர்வலைகளாற் பாதிக்கப்பட்டவர்களுள் நானும் ஒருவன். 1980களில் ஏறத்தாள 25 வருடங்களின் பின்பு அக் கதை மீண்டும் எனது மனதிற்குள் வந்தது. அக்கதை பெற்றிருந்த பிரபல்யம் காரணமாக மலையாள இயக்குனர்கள் பலர் அக்கதையைப் படமாக்க விரும்பி இருந்தனர். சிலர் திரைக்கதையைக் கூட எழுதிவிட்டிருந்தனர். ஆனால் திரைப்படத்தில் கதாநாயகி என ஒருவரைக் காட்ட அக்கதை இடமளிக்காது என்பதை உணர்ந்த போது அவர்கள் பின்வாங்கி விட்டனர். அக்கதையைப் படமாக்குவதற்கான உரிமையைப் பெற்றுக் கொள்ள பஷீர் அவர்களிடம் சென்ற பொழுது அவர் படத்தின் கதாநாயகி யாரெனக்கேட்டார். நான், படத்தில் கதாநாயகி என்று ஒருவரும் காட்டப்படமாட்டார்கள் என்று கூறினேன். ஆகா! அப்படி என்றால் படம் நன்றாக வரும் எனப் பஷீர் கூறினார்.

மிகப் பொதுவான யதார்த்தத்தைப் பார்த்துப் பழக்கப்பட்டவர்களுக்கு இவ்வாறான வழமைக்கு மாறான யதார்த்தங்களைப் பார்க்கமுடிவதில்லை. உதாரணமாக ஒரு மரணக்காட்சியைக் காட்டும் போது எல்லாப்படங்களிலும் உடனடியாக ஒரு பின்னணி இசை வரும். அதற்கு அனைவரும் பழக்கப்பட்டிருப்பர். அவ்வாறு ஒரு பின்னணி இசை வராவிட்டால் பார்வையாளர்கள் மகிழ்ச்சி அடையமாட்டார்கள். இவ்வாறுதான் சந்தோசமான காட்சி ஒன்றைக் காட்டும் போது இன்னொரு வகையான வழமையான இசைப் பின்னணியில் வரும். இப்படி ஒரே வகைமாதிரியாகவே படங்கள் இருக்கின்றன.

**அமிர்த் லால்: கதையொன்றில் உங்களுக்கு ஆர்வமூட்டும் கூறாக இருப்பது?**

நான் படமாக்குவதற்காக மற்றவர்களுடைய கதைகளை அனேகமாகப் பெற்றுக்கொள்வதில்லை. நான் எடுத்த 11 படங்களில் மூன்று படங்களுக்கான திரைக்கதைகள் மட்டுமே மற்றவர்களுடையவை. என்னிடம் உயிர்ப்பான அனுபவங்கள் இல்லாதிருந்த போது நான் முன்பு வாசித்த விடயங்களை மீள நினைவுபடுத்திப் பார்க்கையில் மனதில் வந்தவையே அவை. வைக்கம் முகமது பஷீர் அவர்களின் மதிலுகள் அவ்வாறு ஞாபகத்திற்கு வந்த நாவல்களில் ஒன்று. மதிலுகள் (1965) மிக ஆர்வமூட்டும் கதை மட்டுமல்ல.

**சுப்ரா குப்தா: உங்களது படத்தில் நட்சத்திர நடிகர்கள் நடிப்பது எவ்வளவு முக்கியமானது என்று கருதுகிறீர்கள்?**

பொதுவில் திரைக்கதையை எழுதி முடிக்க முன்பு எனது படத்தில் யார் நடிக்கப்போகிறார்கள் என்பதை நான் யோசிப்பதில்லை. திரைக்கதையை எழுதி முடித்ததும் சில சந்தர்ப்பங்களில் திரைக்கதையை எழுதிக் கொண்டிருக்கும் போதும் எனக்குத் தெரிந்த அல்லது எனக்கு விருப்பமான கதாநாயகர்கள் ஞாபகத்திற்கு வருவதுண்டு. உதாரணமாக மதிலுகள் (1989) படத்தில் நான் மம்முட்டி நடிக்கவேண்டும் என விரும்பினேன். ஏனென்றால் அவர் அனந்தரம்(1987) படத்திலும் என்னுடன் வேலை செய்திருந்தார். அப்படத்தில் அவருக்கு இரண்டாம் நிலைப் பாத்திரம் தான் இருந்தது. ஆனாலும் அவர் என்னுடன் வேலை செய்வதற்கு மிகுந்த ஆர்வம் காட்டினார். அது எனக்கு உவப்பாகவும் இருந்தது. அக்கணத்தில் அவர் முன்னணி நடிகராக இருந்த போதும் என்னுடன் இணைந்து பணியாற்றுவதற்கு விருப்பமாகவிருந்தார். எனது இரண்டு படங்களிலும் அவரை நடிக்க வைக்க அது காரணமாக இருந்தது. அவர் நடித்த அவ்விரண்டு படங்களிலும் அவருக்குச் சிறந்த நடிகருக்கான தேசிய விருது கிடைத்தது. எனது படங்களில் நடித்த ஆறு நடிகர்கள் தேசிய விருதுகளைப் பெற்றுக் கொண்டனர். இது முக்கியமானதொரு பதிவாகும். இவர்கள் என்னுடன் வேலை செய்த போது நட்சத்திரங்களாக இருக்கவில்லை. நடிகர்களாகவே இருந்தனர்.

**உன்னி ரஜன் சங்கர்: நீங்கள் கடந்த 45-50 வருடங்களாக சினிமாத் தொழிலில் இருக்கிறீர்கள். இக்காலப்பகுதியில் பதினொரு படங்களைத் தயாரித்திருக்கிறீர்கள். திரைப்பட இயக்குனராக உங்கள் படிமுறை வளர்ச்சி நிலை எவ்வாறு அமைகிறது?**

நான் திரைப்படக் கல்லூரியை விட்டு நீங்கிய போது வருடத்திற்கு ஒரு படமாவது தயாரிக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன். திரைப்படக் கல்லூரியிற் பயின்று சிறந்த தகுதியடைந்து வெளிவந்திருக்கிறேன். எனவே படங்களை இயக்குவதற்கு தயாரிப்பாளர்கள் என்னை அணுகுவார்கள் என நினைத்தேன். என்னுடைய நண்பர்களினூடாக நான் சிலரை அணுகியும் பார்த்தேன். ஆனால் தயாரிப்பாளர்கள் என்னை வைத்துப் படத்தை இயக்குவதற்கு தயாரில்லை என்பதை விரைவிலேயே உணர்ந்து கொண்டேன். திரைப்படக் கல்லூரியில் முறைப்படி கற்றுவந்த ஒருவருக்கு திரைப்படங்களை இயக்கும் ஆற்றல் இருக்காது என அவர்கள் நினைத்தார்கள். எங்களுக்குத் திரைப்படக்கல்லூரியிற் கிடைத்த பயிற்சியை அவர்கள் நம்பவில்லை என்பதுடன் எங்களை அவமதிக்கவும் செய்தார்கள். 7 வருடங்களின் பின்னரேயே எனது முதலாவது படத்தைத் தயாரிப்பது சாத்தியமானது. 1972 இல் அது நிகழ்ந்தது. எனது முதலாவது திரைப்படமான சுயம்வரத்தின் பின்பு 5 வருடங்கள் கழித்தே எனது இரண்டாவது படமான கொடியேத்தம் வெளிவந்தது. அது மிகப்பெரிய வெற்றியையடைந்தது. அதன் பின்பே நாங்கள் எங்களுக்கென ஒரு நிலையத்தை அதற்குத் தேவையான கமரா, ஒளியூட்டுச் சாதனங்கள் தொழில் நுட்பசாதனங்கள் எனஅனைத்தையும் கொண்டதாக உருவாக்கினோம். இப்பொழுது உபகரணங்கள் இருந்தன. ஆனாற் பணமில்லை. எனவே படமெடுப்பதென்பது மாதங்களாகத் தொடர்ந்தது. கொஞ்சப்பணம் கையில் வந்ததும் படச்சுருளை விலைக்கு வாங்கிப்படமெடுப்போம். பின்னர் காத்திருப்போம். இவ்வாறு எடுத்த படச்சுருள்கள் யாவும் சென்னையில் இருந்த ஒரு இரசாயனக்கூடத்தில் தேங்கியிருந்தன. பணமில்லாதபடியால் சென்னைக்கு சென்று அவற்றைத் திரையிடலுக்கான மாற்றங்களுக்குட்படுத்திப்பெற முயற்சி செய்ய வில்லை. இதனால் கொடியேத்தம் படத்தின் எதிர்மறைப் படச்சுருள்கள் ஒருவருடமாகச் சென்னை இரசாயனக்கூடத்தில் இருந்தன. இதற்கிடையில் நான் சில ஆவணப்படங்களை இயக்கிப் பணத்தைச் சேர்த்துக்கொண்டு எனது படச்சுருட்களைத் திரையிடலுக்குத் தயார்ப்படுத்தச் சென்னைக்குச் சென்றேன்.

1982 இல் நான் எலிப்பத்தாயத்தை எடுத்த பொழுது அப்படத்தில் நட்சத்திர நடிகர்கள் எவரும் இருக்கவில்லை. ஆயினும் அப்படம் box officeல் குறிப்பிடத்தக்க வெற்றியைப்பெற்றிருந்தது. என்னில் விருப்பமாயிருந்த **சத்தியஜித்ரே** : 'அடூர் நீ இப்பொழுது அங்கீகாரத்தைப்பெற்றிருக்கிறாய். வருடத்துக்கு ஒரு படத்தை நீ ஏன் தயாரிக்கக் கூடாது' என்று கேட்டார். மனிக்-தா என்னுடைய விருப்பமும் அதுதான் ஆனால் இது நடைமுறைச்சாத்தியமில்லை. திரைக்கதை எழுதவேண்டும் அதில் வரும் எண்ணங்களை ஒழுங்குபடுத்த வேண்டும் எனக் கூறினேன். 1984ல் முகாமுகத்தை எடுத்தேன். அதைச் சத்தியஜித்ரே அவர்கள் பார்த்திருக்கிறார்கள். அதன் பின்னர் அவர் எனக்குக் கூறினார் : 'எந்த நேரமும் உறங்கிக்கொண்டிருக்கும் ஒருவனைப்பற்றிய படத்தை எடுப்பதற்கு உண்மையிலேயே தைரியம் வேண்டும்' அதன் பின்னர் அவர் அப்படத்தின் மூலம் ஏற்கனவே வெளிவந்த ஒரு கதையா எனக் கேட்டார். நான் சொன்னேன்: இல்லை படத்தின் மூலமும் திரைக்கதையும் என்னுடையதுதான். அதைக்கேட்டதும் அவர்: உன்னுடைய பட உருவாக்கத்தின் படி நிலைகளை இப்பொழுது நான் விளங்கிக் கொள்கிறேன். என்று கூறினார்.

**ஷாலினி லாங்கர்: நீங்கள் படம் ஒன்றைப்பார்க்கும் போது படத்திற்கும் பார்வையாளருக்கும் இடையில் எழக்கூடிய ஊராய்வு நிலையைப்பற்றிச் சொன்னீர்கள். இன்றைய சூழ்நிலையில் படம் ஒன்றைப் பார்க்கும் போது ஊராய்வை -விளக்கமின்மையை ஏற்படுத்தக்கூடிய ஒரு நிலை படத்தில் வரும் போது அப் பிரச்சனையை எப்படிக் கையாளலாம்? இது கடினமானதா?**

புதிய விடயமொன்றைத் திரைப்படத்தில் சொல்லும் போது அது சொல்லும் விடயத்துடன் உங்களுக்கு முரண்பாடு தோன்றுவது இயற்கையானது. பழக்கமில்லாத விடயங்கள் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்தான். புதிய விடயங்கள் உங்களை அடையும் போது தோன்றும் முரண்பாடு ஒன்றும் கெட்ட விடயமல்ல. ஆனால் இது தொடரும் போது அவற்றுக்கு பழக்கப்படும் நிலை தோன்றுகிறது. எனவே புதிய வகையான சினிமா தொடர்ச்சியாக உங்கள் முன் வைக்கப்படும் போது நீங்கள் அவற்றை ஏற்றுக் கொள்ளத் தொடங்குவீர்கள். இவ்வாறுதான் பார்வையாளர்களைப் பயிற்ற வேண்டும்.

நன்றி: http://indianexpress.com/article/entertainment/entertainment-others/idea-exchange-were-being-trained-to-watch-bad-films-says-adoor-gopalakrishnan/

மொழிபெயர்ப்பு: தேவ அபிரா

காணாமற் போனோர் சிறப்பிதழுக்காக நினைவுக்குறிப்பொன்றை எழுதித்தரும்படி நீங்கள் அனுப்பிய மின்னஞ்சலை வாசித்தபோது எனக்கு உடனடியாகப் புதுமைப்பித்தன் ஞாபகம் தான் வந்தது. புதுமைப்பித்தன் அவனது புனைபெயர் அல்ல. அவனது இயற்பெயரே அதுதான். இதற்கொரு முன்கதைச்சுருக்கமுண்டு. புதுமைப்பித்தனின் இருந்தான். அவன் எம்.ஜி.ஆர் நடித்த எந்தவொரு திரைப்படத்தையும் முழுமையாக இதுவரை பார்த்ததில்லை. எம்.ஜி.ஆரின் முழுப்பெயர் கூட அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஒருநாள் என்னிடமிருந்த புதுமைப்பித்தனின் சிறுகதைத்தொகுப்பை பார்த்துவிட்டு 'எட எனது பெயரிலும் ஒராள் இருக்கிறார். இந்த ஆளின் தகப்பனும் எம்.ஜி.ஆர் இரசிகராயிருப்பாரோ?'



# புதுமைப்பித்தன் கதைகள்

► ராகவன்

தகப்பனான மன்மதநாயகம் ஒரு தீவிர எம்.ஜி.ஆர் இரசிகர். அகில இலங்கை எம்.ஜி.ஆர் இரசிகர் மன்ற யாழ்ப்பாணக்கிளையின் தலைவராகத் தொடர்ந்து பத்தாண்டுகள் பதவி வகித்த பெருமைக்குரியவர். அவரைத் தெரிந்தவர் அறிந்தவரெல்லாம் எம்.ஜி.ஆர் மன்மத நாயகம் என்றே செல்லமாக அழைப்பர். எம்.ஜி.ஆர் மீது கொண்டிருந்த தீராத அபிமானத்தால் தனது ஒரேயொரு மகனுக்குப் புதுமைப்பித்தன் எனப்பெயரிட்டார்.

புதுமைப்பித்தனுடன் மூன்று வருடங்களுக்கு மேல் பழகியிருக்கிறேன். மன்மதநாயகம் எந்தளவுக்கு எம்.ஜி.ஆர் மீது தீவிர அபி-மானங்கொண்டிருந்தாரோ அதற்கு முற்றிலும் எதிர்மாறானவனாகப் புதுமைப்பித்தன் எனக்கேட்டான்.

புதுமைப்பித்தன் நாளிதழ்களைத் (News paper ) தவிர வேறெதையுமே வாசிப்பதில்லை. காரணங்கேட்டால், நாளிதழ்களில் வெளிவரும் செய்திகள் தான் எதற்குமே அடிப்படையாக அமைவதால் நாளிதழ்களைத் தவறாமல் வாசித்தால் போதுமானது. வேறெதையுமே வாசிக்க வேண்டியதில்லையென்று சொல்வான்.

ஒரு வாரத்தில் குறைந்தது மூன்று தடவைகளாவது எனது வீட்டிற்கு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்த புதுமைப்பித்தனை

க் ட் 13

சுமார் ஒரு மாதகாலமாகப் பார்க்கமுடியவில்லை. திடீரென ஒருநாள் பிற்பகல் வேளை புதுமைப்பித்தன் கையிலொரு ஃபைலுடன் வீட்டிற்கு வந்திருந்தான். இத்தனை நாட்களாக ஓய்வின்றிக் கதை எழுதிக்கொண்டிருந்ததாகவும், அதையெல்லாம் ஒரு ஃபைலில் போட்டுக்கொண்டு வந்திருப்பதாகவும், வாசித்துவிட்டு எனது கருத்தினை முன்வைக்குமாறும் என்னிடம் கேட்டுக்கொண்டான். எனக்கு வியப்பாகவும், மறுபுறம் திகைப்பாகவும் இருந்தது. நாளிதழ்களை மட்டுமே வாசிக்குமொருவன் கதை எழுத வெளிக்கிட்டதை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

*2*

பச்சைநிற ஃபைலின் ஓரங்களுக்கு சிவப்புப் பைண்டிங்ரேப் ஒட்டி நடுவே சரிந்த எழுத்துக்களில் 'புதுமைப்பித்தன் கதைகள்' எனக் கறுப்பு மார்க்கரால் எழுதியிருந்தான். பைலைத் திறந்து பார்த்தேன். A4 தாளில் நூற்றைம்பது பக்கங்களுக்கு எழுதியிருந்தான். இப்போதொன்றும் அவசரமில்லை. 'உனக்கு நேரங்கிடைக்கும் போது வாசித்து கருத்துச்சொன்னால் போதும்' என்று சொல்லி விட்டுப்போனான்.

நான் தொடர்ந்து மூன்று நாட்களாக அவனது கதைகளை வாசித்ததில் பத்துப் பக்கங்கள் வரை எஞ் சியிருந்தன. பிறிதொரு தினத்தில் வாசிக்கலாமென வேறாக எடுத்து வைத்திருந்தேன். எதிர்பாராத-விதமாக ஒருநாள் நான் வீட்டிலில்லாத தருணம் புதுமைப்பித்தன் வந்து அம்மாவிடம் சொல்லி விட்டு கதைப் ஃபைலை எடுத்துக்கொண்டு போய்விட்டான். அதிலும் வேதனைக்குரிய விடயமென்னவென்றால் அவன் கதை ஃபைலை எனது வீட்டிலிருந்து எடுத்துச்சென்றிருந்த அத்தினத்திலிருந்து தான் காணாமல் போயிருந்தான். அவனுக்கு என்ன நடந்தது? கதைப்பைலை எங்கே கொண்டு சென்றான்? அவன் இப்போது எங்கேயிருக்கிறான்? என அடுக்கடுக்காக எழும் கேள்விகளுக்கு எந்தவொரு பதிலும் கிடைக்கவேயில்லை.

புதுமைப்பித்தனின் கதைப் ஃபைலில் இருந்து நான் எடுத்து வைத்திருந்த பக்கங்களை இக்குறிப்புடன் சேர்த்துள்ளேன். இது ஒரு நினைவுக்குறிப்பென்ற வகையில் புதுமைப்பித்தனின் இந்தக்கதைகளைப் பற்றி நான் எந்தவொரு கருத்தினையும் முன்வைக்கப் போவதில்லை. அந்தப்பொறுப்பை வாசகர்களிடமே விட்டுவிடுகிறேன். இனித்தொடர்ந்து அந்தப்பக்கங்களை நீங்கள் வாசிக்கலாம்.

ரியூட்டரி நிர்வாகி இந்திரகுமாரின்ர மனிசிக்காரி அற்புதமலர் தன்ரை புரியனை கடந்த இரண்டு கிழமையாய்க் காணவில்லையெண்டு பொலிசில என்றி போடப் போகேக்குள்ளதான் ஓஜசி குணதாச அவளில கண்வைச்சவன். பிறகு மூண்டு வரிசமாகியும் இந்திரகுமாரைப் பற்றின தகவலேதும் கிடைக்கேல்ல. ஆனால் ஓஜசி குணதாச அற்புதமலரையும் ஏயெல் படிச்சுக்கொண்டிருந்த அவளோட மேள் தேவமலரையும் மடக்கிப்போட்டான். அது மட்டுமே சைக்கிள்ள பள்ளிக்கூடம் போற அந்த ஏரியா ஏயெல் பெட்டையள் சிலதையும் மடக்கி அந்த ஏரியாக்குள்ள பெரிய பெம்பிளைக் கள்ளனாகிட்டான்.

ஓஜசி மடக்கின ஏயெல் படிக்கிற பெட்டையளில வில்பிரட்டின் மகள் மோட்சலங்காரியுமொருத்தி. வில்பிரட், ரவுணுக்குள்ள சாராயபார் வைச்சு நடத்திறார். கடும் அரசியல் செல்வாக்குள்ள ஆள். இந்த விசயத்தை கேள்விப்பட்டோண்ண 'பற வேசை! குலத்தில பிறந்து குரங்காட்டம் ஆடப்போறியோ?' எண்டு மகளுக்கு சாத்து சாத்தெண்டு சாத்திப்போட்டு தன்ர கட்சிப் பெருந்தோழரைப் போய்ச்சந்திச்சார். வில்பிரட்டைக் கண்டோண்ண 'என்ன சாராயம் இந்தப்பக்கம்?' எண்டு பொடி வைச்சுக்கேக்க இவரும் ஆதியோடந்தமாய் விசயத்தை சொல்லி உந்த ஓஜசிக்குச் சுண்ணி வெட்டிச் சொதிவைக்கவேணும் எண்டு கெம்பி நிக்க பெருந்தோழர் , 'இஞ்சேர் வில்ப்பிரட் நீர் லூசுமாதிரிக் கதைக்காதேயும் ஐஸே'. அந்த ஓஜசியின்ரை பக்கிறவுண்ட் தெரியாமக் கதைக்கிறீர். அவனார் தெரியுமே? கோத்தாபாயவின்ரை ஆள். அவனில கைவைச்சா நீர் ரவுணுக்குள்ள பாறே நடத்தேலாது தெரியுமே? கசிப்பு வித்ததெண்டு கேஸ் செற் பண்ணி உள்ளை தள்ளிடுவான். வீணா ரிஸ்க் எடுக்க வெளிக்கிடாதையும். அதோட நீரும் நானும் எங்கையெங்கை கீப் வைச்சிருக்கிறமெண்டதையும் நோண்ட வெளிக்கிடுவான். அதால உந்தச் சங்கதியைக் கண்டும் காணாத மாதிரி விட்டுப்போட்டு வேற அலுவலப்பாரும். இப்ப யாழ்ப்பாணத்துப் பெட்டையெல்லாம் உப்படித்தானே திரியுறாகள். மற்றது ஓஜசியோட தொடுப்பு வைச்சிருக்கிறது உம்மட மோளுக்கும் பாதுகாப்புத்தானே?' எண்டு சாதகபாதகங்களை அலசிக்காட்டினார். வில்பிரட்டுக்கும் பெருந்தோழர் சொல்லுறது நியாயமெண்டுபட்டுது.

*3*

ஆனந்தகுமாரசாமிக்கு புலனாய்வுத்துறை அனுப்பியிருந்த ஃபக்ஸில் 'நீங்கள் திரும்பவும் நாட்டில் புலிப்பயங்கரவாதத்தைத் தோற்றுவிக்குமளவிற்கு மிகவும் ஆபத்தானவரெனக் கருதப்படுகிறீர்கள் ஆனந்தகுமாரசுவாமி எனும் உங்களது பெயரை பிறப்பாண்டுடன் இணைத்து AK47 என எழுதிவருவதாக விளக்கமளித்துள்ளீர்கள். உங்களது பதில் எமக்குத் திருப்தியளிப்பதாகவில்லை. இது உங்களுக்கு சாதாரணமாகத் தோன்றலாம்.

ஆனால் AK47 என ஒவ்வொரு தடவை உச்சரிக்கும் போது நாமொரு படைக்கலத்தின் பெயரை உச்சரிக்கின்றோம் என்பதை மறந்து விடலாகாது. மீளவும் இளந்தலைமுறையினரிடையே ஆயுதக் கலாசாரத்தை தோற்றுவிக்கும் நோக்குடன் நன்கு திட்டமிட்டே உங்களது பெயரை AK47 என்றெழுதி வருகிறீர்கள். ஏனெனில் தங்களது முழுப்பெயரான சுப்பிரமணியம் ஆனந்தகுமாரசுவாமி என்பதை SAK 47, SAK1947, SA1947, SA47 என நான்கு விதமாக எழுதச் சாத்தியமிருந்தும் அதை விடுத்துத் தொடர்ந்தும் AK47 என எழுதி வருவது தண்டனைக்குரிய குற்றமாகும்' எனக்குறிப்பிடப்பட்டிருந்தது. அதை வாசித்து முடித்த ஆனந்த குமாரசுவாமிக்கு அந்த வழுவழுப்பான தாளில் எதையாவது எழுதவேண்டுமென்று கைபரபரத்தது. தனது பிக்மீடியம் கறுத்தப்பேனையைத் திறந்து ஃபக்ஸ்தாளில் AK47 என்றெழுதி ஒரு கோடிட்டிருந்தார்.

*4*

இந்த நெற்கபேயை நெடுவல் மூண்டு வரிசமாய் நடத்துறான். இங்கை வாறாக்களில அரைவாசிப்பேர் எதுக்கு வருகினமெண்டு அவனுக்கு வடிவாய்த் தெரியும். அவனதைப் பெரிசுபடுத்துறதில்லை. கண்டுங்காணாமல் விட்டிடுவான். அவனுக்கு வருமானமே அந்தாக்களால தானே. மற்றது புலனாய்வுக்காரரும் வருவாங்கள். மற்றக் கட்சிக்காரரும் வருவினம். அவங்களோடை மிண்டிக்கிண்டினால் பிறகு நெற்கபேயை நடத்தேலாது. ஏதோ தொழில் பாதகமில்லால் நடந்தாப் போதுமெண்டு இருக்கிறான். கடைசிக்கட்டச்சண்டை நடந்த காலத்தில பெரிசாச்சனம் வாறேல்ல. ஒரு சிலர் களநிலவரமறிய வருவினம். இன்னுங்கொஞ்சப்பேர் நெற்போன் கதைக்கவருவினம். எண்டைக்குச் சண்டை முடிஞ்சு பாதை திறந்தாங்களோ அண்டையில இருந்து நிலைமை மாறிட்டுது. எந்தநேரம் பார்த்தாலும் ஒரே கிறவுட். ஒன்பது மெசினிலும் ஆள் மாறியாள் வந்துகொண்டேயிருப்பினம். ஆமிக்காரரும் வரத்தொடங்கியிட்டாங்கள். நெடுவலுக்கு கொலக்சனும் பரவாயில்லை.

நெடுவலின்ரை நெற்கபேயில எப்பவும் கிறவுட்டாயிருக்கிறதுக்கு காரணமென்னவெண்டால் அவன் ஒன்பது மெசினுக்கும் ஆளுயரத்துக்கு சிற்போட்டால் தனித்தனிய மறைப்படிச்சு வைச்சிருக்கிறான். அதோட ஒவ்வொரு தடுப்பையும் உள்ளாலை லொக்பண்ணக்கூடிய வசதியுமிருக்கு. ஒவ்வொரு மெசினுக்கும் இரண்டு ஸ்ரூல் போட்டிருக்கிறான்.

உள்ள போறவை லொக் பண்ணிட்டு வெளிக்கிடேக்க திறந்துகொண்டு வரலாம். இந்த வசதியெல்லாம் மற்ற நெற்கபேகளில இல்ல.

நெடுவல் பேருக்கு ஏற்ற மாதிரி ஆறடி உயரம் இருப்பான் அவன் தடுப்புக்குள்ளால நடந்து



போகேக்குள்ள எந்த தடுப்பு லொக் பண்ணி-யிருந்தாலும் நிண்ட நிலையிலேயே உள்ளுக்க என்ன நடக்குதெண்டு நோட்டம் விடுவான். அது உள்ளை இருக்கிறவைக்கு தெரியாது. ஏனெண்டால் மெசினை வாசலை நோக்கித்தான் பிற்பண்ணி இருக்கிறான். ஆரும் இளம் பெட்டையள் தனிய வந்தால், நெடுவல் அலேட்டாய் இருப்பான். உப்புடித்தான் அண்டைக்கொரு பெட்டை வந்தாள், படிக்கிற பெட்டையாக்கும், Webல ஏதோ டேட்டா எடுக்கப்போகுதாக்கும் எண்டு தான் நெடுவல் நினைச்சான். ஒரு கா மணித்தியாலத்துக்குப் பிறகு தற்செயலாய் அந்தப்பக்கம் போனாப் போல, பெட்டை என்ன செய்யுதெண்டு நைசா தடுப்புக்கு மேலால எட்டிப்பார்த்த நெடுவல் விறச்சுப்போனான். பெட்டை இஸ்கைப்பில ஆரோ கள்ள மாப்பிளையோட மேலுக்கும் கீழுக்கும் திறந்து காட்டி எப்பிடியிருக்கு? எண்டு சினகம் பொழிய அவரும் closeup !! closeup !! எண்டு சொல்லி கிடாயாடு மூத்திரம் குடிக்கிற மாதிரி சொண்டைக்குவிக்கிறார். பறவேசை! வெளியில போடி எண்டு கலைச்சுவிட மனம் துடிச்சாலும் தொழில் கெட்டுப்போகுமெண்டு சைலெண் மோட்டில விட்டிட்டான்.

போன கிழமை ஒரு பெட்டை பஸ்சில

வந்து இறங்கி நெற்கபே வாசலில் நிண்டு கொண்டு ஆருக்கோ போனெடுத்துக் கதைச்சாள். பிறகு ஒரு பத்து நிமிசத்தால ஒரு பெடியன் மோட்டச்சைக்கிள்ள வந்து இறங்கினான். ரெண்டு பேருமாய் நெற்கபேக்குள்ள நுழைஞ்சினம், நெடுவலுக்கு அந்தப்பெடியன், நகைக்கடையில வேலை செய்யிறவன் எண்டு தெரியும். அதோடு எந்தக்கட்சியோட திரியிறவன் எண்டும் தெரியும்.பெட்டையைத்தான் மட்டுக்கட்டேலாம இருந்தது. அவையள் ரெண்டுபெருமாய் நெடுவலிட்ட வந்து நெற்பாக்கப்போறமெண்டு கேட்டினம். தொங்கல் மிசின் பிறியாய் இருந்தது. அதுக்குள்ள போங்கோ எண்டு காட்டிவிட்டான். ரண்டு பேரும் உள்ள போய் லொக் பண்ணுற சத்தம் கேட்டுது. ஒரு பத்து நிமிசம் கழிச்சு நெடுவல் எழும்பிப்போய் அந்தத்தடுப்பு வாசலில் நிண்டு சாதுவாக எட்டிப்பார்த்தான். மொனிட்டரில ஒரு செக்ஸ் படம் ஓடுது. தம்பியர் பிள்ளையை மடியில வச்சு மேலையும் கீழையும் தடவிக்குடுக்கிறார். 'ம் வெளியில வரட்டும் தடவினதுக்கு எல்லாம் சேர்த்து கணக்கு முடிப்பம்' எண்டு நெடுவல் திரும்பி வந்து தன்ர சீற்றில இருந்து கொஞ்ச நேரத்தில டீஎஸ் சும் கொமிசனரும் தங்கட பிக்கப்புகளில வந்து நெற்கபே வாசலில இறங்கி அரக்கப்பரக்க உள்ள வந்தினம். நாலஞ்சு போலீஸ்காரரும் ஜீப்பில வந்து இறங்கி உள்ள ஓடி வந்தாங்கள் நெடுவலும் கொஞ்சம் பயந்துதான் போனான். இதுக்கு முதல் ஒரு காலமும் இப்பிடி நடக்கேல்ல 'எல்லோரையும் வெளியில வரச்சொல்லுங்கோ ஒருக்கா செக்பண்ண வேணும்' எண்டு டீஎஸ் அதில நிண்டே ஓடர் போட நெடுவல் ஒவ்வொரு தடுப்பு கதவையும் தட்டி தயவு செய்து உள்ள இருக்கிறாக்கள் எல்லாம் ஒருக்கா வெளியில வாங்கோ ஏதோ செக்பண்ண வேணுமாம் எண்டு உரப்பினான். ஒவ்வொருத்தரா லொக்கைத் தட்டிப்போட்டு வெளியில வாறத டீ எஸ் சும் கொமிசனரும் வச்ச கண் வாங்காமல் பாத்துக்கொண்டு நிக்கினம், தொங்கல் தடுப்பு திறக்குது நெடுவலுக்கு ஒரே டென்சனா இருக்குது முதல்ல பெட்டைதான் வெளியில வாறாள். அவளுக்குப் பின்னால் பதுங்கிக்கொண்டு தம்பியர் வாறார். ஆளுக்கு முகத்தைக்கட்டி வேர்க்குது. ஆனால் பெட்டையின்ர முகத்தில ஒரு சின்னச்சலனம் கூட இல்லை. 'அந்தக்கடைசில வாற ரெண்டு பேரும் இஞ் சால வாங்கோ!' எண்டு டிஎஸ் கூப்பிடேக்க தான் இவையள் ரெண்டு பேரையும் ஏய்ம் பண்ணித்தான் இவ்வள ஏற்பாடும் நடந்திருக்கெண்டு நெடுவலுக்கு விளங்கிச்சுது.

'இதோட என்ர தொழிலுக்கும் உலை வச்சிடுவாங்கள் போல இருக்கே' எண்டு நினைக்கவே ஆளுக்கு கிலி பிடிக்குது பெட்டைதான் முன்னுக்கு வந்தவள் பெடிப்பிள்ளை கொஞ்சம் தள்ளி நிக்கிறார் 'நீங்கள் ரெண்டு பேரும் ஒரே ரூமுக்குள்ள இருந்திட்டு வாறியள் என்ன!'

டீஎஸ் கேக்க,

'இல்லை நான் மட்டும் தான் உள்ளை இருந்து வந்தனான் என்னோட ஆரும் இருக்கேல, பெட்டை பிடிகொடுக்காம கதைக்கிறாள். அப்ப உமக்குப்பின்னால நிக்கிறது?

டீ எஸ் குழம்பிப்போய் கேக்க பெட்டையும் அசராமல் அது ஆரெண்டு எனக்குத்தெரியாது எண்டாள் . டீஎஸ் இதை எதிர்பாக்கேல, சும்மா உரப்பினால் பெட்டை வெருண்டு போய் உண்மையைக் கக்கிடுவாள் எண்ட எதிர் பாப்பில மண் விழுந்துது. எண்டாலும் டி எஸ் அதை வெளிக்காட்டாமல். சும்மா பொய் சொல்லாதையும் நீங்கள் ரெண்டு பேரும் ஒண்டாய் வெளியில வந்ததை இப்பநான் பாக்கிறன். நீர் எனக்குச் சுத்தப்பாக்கிறீர் என்ன?'

எண்டு வெருட்டினாப் பிறகும், பெட்டை கொஞ் சமும் அசையேல்ல அவள் இன்ன இஸ்கூல்ல தான் ஏ எல் படிக்கிறாள் எண்டும் ஒரு பிறசண்டேசனுக்காக டேட்டா எடுக்கத்தான் இங்க தனிய பஸ்சில வந்ததெண்டும் ஸ்கூல் ஐடியையும் எடுத்துக்காட்டி, இதுக்கும் நம்பாட்டி நெற்கபே ஓணரை கேட்டுப்பாருங்கோ எண்டு நெடுவலை இதுக்குள்ள கோத்துவிட நெடுவல் திகைச்சுப்போனான். எடி நாசமாய் போன வேசை! உனக்கும் உன்ர கள்ள மாப்பிளைக்கும், உரஞ் சுறதுக்கும் தடவுறதுக்கும் இடந்தந்தது போதாது எண்டு என்னை மாட்டிவிடுறியோ? எண்டு உள்ளுக்க பொருமிக்கொண்டு நிக்க. 'நெற்கபே ஓணர்! இங்க முன்னுக்கு வாரும்' எண்டு டீஎஸ் உரப்ப நெடுவல் விழுந்தடிச்சு ஓடிப்போய் நிண்டான். டீ எஸ் நெடுவலுக்குப் பெட்டையையும் பெடியனையும் காட்டி 'இவையள் ரெண்டு பேரும் இப்ப ஒரே ரூமுக்குள்ள இருந்திட்டுத்தானே வெளி-யில வந்தவை? உண்மையச்சொல்லும்? பிறகு சட்டப்படி நடவடிக்கையெடுக்க வேண்டி வரும்' எண்டு வெருட்டியடிக்க நெடுவலும் பதில் சொல்ல வெளிக்கிட்டான். அப்ப பாத்து டீஎஸ் இன்ர மொபைல் சாதுவாய் அனுங்கிச்சுது ஆளும் ரிசீவ் பண்ணிக் காதில்வச்சு ஹலோ சொல்லிட்டு ஓம்... ஓம்... நீங்கள் ஆர்? எண்டு கேட்டாப்போல அந்தப்பக்கத்தில இருந்து ஆர் என்ன கதைச்சினம் எண்டு தெரியேல்ல, டீ எஸ் க்கு முகம் கறுத்துப்போச்சு நெடுவலைக் கொலைவெறியோட பாத்திட்டு திரும்பி கொமிசனரோட ஏதோ குசு குசுத்துப்போட்டு கேஸ் பிடிக்கலாம் எண்ட அடுக்கோட வந்த போலிஸ்காரரையும் திரும்பிப்போகச்சொல்லி கை காட்டிப்போட்டு டீஎஸ் போய் தன்ர பிக்கப்பில ஏற மற்றாக்களும் தங்கட தங்கட வாகனங்களில ஏறித் திரும்பிப்போச்சினம்.

*5*

அவள் தற்செயலாய் வாசனை பரந்தன் சந்தியில வைச்சுக்கண்டால் போல, 'என்ன வெண்மதி எப்பிடியிருக்கிறீர்?' எண்டு அவன் கேட்க 'என்னத்தச்சொல்லுறதண்ணை எதோ இருக்கிறம்', தடுப்பால வந்து அம்மாவையோடதான் இருக்கிறன். அப்பா ஷெல் அடியில மோசம் போட்டார் தங்கச்சியும் காலில பீஸ் பட்டு கொஞ்சநாள் நடக்கேலாமல் இருந்தவள், இப்ப கொஞ்சம் பறவாயில்லை. இந்த முறைக்கு ஏயெல் எடுக்கிறாள். தம்பியும் வாற முறைக்கு ஓ எல் எடுக்கிறான், இடைக்கிடை விறகு வெட்டப்போறவன் . அம்மா சந்தை யாவாரம் செய்யிறா. நான் மிதி வெடி அகற்றுவதற்குப்போறனான். என்ன ஒரு பத்தாயிரம் பதினைய்யாயிரம் வரும், உயிர வெறுத்துச்செய்யிற வேலை அதுகும் நிரந்தரமில்லை' எண்டு அவளும் தன்ர நிலைப்பாட்டைச் சொல்லிப்போட்டு அண்ணை உங்களுக்குத் தெரிஞ்சாக்கள் மூலமாய் ஒரு நிரந்தர வேலைக்கு ஏற்பாடு செய்து தர ஏலுமோ ? எண்டு அவனிட்டக்கேட்டாப்போல, 'நான் உமக்கு மன்மதராணி எண்டொரு பிள்ளையின்ர நம்பர் தாறன், அவ கோணாவில்ல இருக்கிறா. நான் சொன்னதாகச்சொல்லி கதைச்சிட்டு அவாவைப்போய் சந்தியும்' எண்டு சொல்லி ஒரு மொபைல் நம்பரைக்குடுத்திட்டுப்போனான்.வெண்மதியும் அந்த நம்பருக்கு அடிச்சு வாசன் சொன்னது மாதிரியே மன்மத ராணியோட கதைச்சார்.

ஓகே நீங்கள் அடுத்த சனிக்கிழமை மத்தியானதுக்கு முதல் வாங்கோ. வந்த உடனே இந்த நம்பருக்கு அடியுங்கோ. நான் வந்து பிக் அப் பண்ணுவன், எண்டு மன்மதராணி சொன்னாள். அடுத்த சனிக்கிழமை தனக்கிருந்த சோலியெல்லாம் விட்டுப் போட்டு காலம வெள்ளன பஸ் எடுத்துக் கோணாவில்ல போய் இறங்கி மன்மதராணியின்ர நம்பருக்கு போனடிச்சாள். இரண்டு மூன்று தரமடிக்க டைவேர்ட்டில போச்சுது. ஒரு கொஞ்ச நேரத்தால மன்மதராணியே எடுத்தாள். 'ஆரது வெண்மதியோ? வந்திட்டியளோ? சரி பத்து நிமிசத்தில வாறன் எண்டவள் முக்கா மணித்தியாலங் கழிச்சு ஒரு ஸ்கூட்டியில வந்தாள். ட்ரவுசரும் சேர்ட்டும் கூலிங் கிளாசுமாய் ஆள் அமர்க்களமாய்த் தானிருந்தாள். டிரேசிங் சைக்கிளில் போன ரண்டு ஆமிக்காரர் அவளை பார்த்து விசிலடிக்க வெருளி மாதிரிச் சிரிச்சுக் கொண்டு அவங்களுக்கு டாட்டா காட்டினத்தைப் பாத்தோண்ண வெண்மதிக்கு ஒரு மாதிரியிருந்தது.'ஸோரி ஸோரி. கொஞ்சம் லேற்றாப்போச்சு. சரி வாங்கோ போவம் 'எண்டு வெண்மதியப் பின்னுக்கு ஏத்திக் கொண்டு போனாள். காற்றோட்டத்துக்கு மன்மதராணி அடித்திருந்த பெர்பியூம் கமகமத்துக் கொண்டிருந்தது. மயக்கிற வாசனையெண்டு கேள்விப் பட்டதை வெண்மதி இப்ப தான் உணர்ந்தாள். ஒரு பத்து நிமிசத்தில அவளின்ர வீட்டை போய்ச் சேர்ந்தாச்சு .நல்ல கொண்டிசனான வீடு.

காந்திக்கிராமத்தில அப்பிடியொரு வீட்டைப்பாக்கிறது வெண்மதிக்கு அதிசயமாக இருந்தது. மன்மதராணியும் தாயும் தங்கைக்காரியும் தான் அந்த வீட்டை இருக்கினம். தாய்க்காரி ஒரு நீளக்கிளாசில வெண்மதிக்கு கொக்கக்கோலா சோடா கொண்டு வந்தா இதுதான் அம்மா எண்டு அறிமுகப்படுத்தினாள். மன்மத ராணியைப்போலை மொட்சாய் ஒருத்தி ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு போக அதுதான் தங்கச்சி ரதிராணி எண்டு காட்டினாள். பிறகு வெண்மதியின்ர குடும்பத்தை பற்றி விசாரித்து விட்டு. 'வாசன் அண்ணா எல்லாம் சொன்னவர் தானே?' எண்டு கேட்டாள் வெண்மதியும் ஓமெண்டு தலையாட்டினாள். நீங்கள் இப்ப என்ன வேலை செய்யிறியள் எண்டு கேட்டாள். மிதி வெடி அகற்றுற வேலை. எண்டு வெண்மதி சொல்லி முடிக்க முதலே, அதுவும் ஒரு வேலையே? சரியான சீரழிவு, வெய்யில் வழிய திரியோணும், உயிருக்கும் உத்தரவாதமில்லை. ஆக மிஞ்சிப்போனால் ஒரு பதினைய்யாயிரம் வருமாக்கும்? எண்டு மன்மத ராணி பொழிஞ்சு தள்ள வெண்மதியும் மறியாடுபோல தலையாட்டிப்போட்டு அதுதான் உங்களைத்தேடி வந்தனான் என்றாள். மன்மதராணி பெருமையோட 'உங்கட புத்திசாலித்தனமான முடிவை நான் பாராட்டுறன். உங்களப்போல எல்லா லேடீசும் முன்வந்தால் நாங்கள் கெதியாய் முன்னேறிடலாம்' எண்டு சொல்ல வெண்மதி வெக்கத்தோட சிரித்தாள். மன்மதராணி தொடர்ந்தும் கதச்சாள். இந்தக்காந்திக் கிராமத்தில் பாத்தீங்களெண்டால், அனேகமான லேடீஸ் இதைத்தான் தொழிலாய்ச் செய்யினம், எடுத்த உடனை எல்லாருக்கும், கைநிறைய மாசச்சம்பளம் வாங்கிற தொழில் கிடைக்குமே? அதுகும் நாங்கள் தடுப்பில இருந்திட்டு வந்த ஆக்கள் ஒரு கூலி வேலைக்குப்போனாலும், மற்றச்சனங்கள் வேலைக்குக் கூப்பிடத்தயங்குதுகள். ஒரு மாதிரிதான் பாக்குதுகள் , கற்போட இருந்தால் பசி தீருமே? எனக்கும் முதல்ல கூச்சமாயும் தயக்கமாயும்தானிருந்தது. போகப்போக பழகிட்டுது. அதுகும் வெளியிலை போய் வெய்யில்ல சிரமப்படத்தேவையில்லை. கொஞ்ச நேரத்தில நிறையக்காசு உழைக்கலாம். புலனாய்வுக்காரர் தான் முக்கியமா கூப்பிடுவாங்கள். அவங்கள் கோல் பண்ணிச்சொல்லுற இடத்துக்குப் போகோணும் சில நேரம் நாலஞ்சு பேரையும் சமாளிக்க வேண்டி வரும், குடும்பத்துக்கும் பாதுகாப்புப்பிரச்சினையில்லை என்ன சொல்லுறியள்? சம்மதம் தானே?

மன்மத ராணி சொன்னதையெல்லாம் கேட்க வெண்மதிக்கு ஐஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுத் தலைவிறைத்தது. அவளுக்கென்ன சொல்லுறதெண்டே

தெரியேல்ல இருந்தாலும் சமாளிக்க வேணுமே அதுக்காக நீங்கள் சொல்லுறதும் சரிதான். நான் மறுக்கேல வீட்டையிருந்து டப்பெண்டு வெளிக்கிட்டதால முன்னேற்பாடு இல்லாமல் வந்திட்டன். இண்டைக்குப்போயிட்டுப் பிறகு' எண்டு வெண்மதி இழுக்க எட இதுக்குப்போய்.... ஒண்டும் அவசரமில்லை போய் நிதானமாய் வாங்கோ. பிரச்சனை இல்லை, எண்டு மன்மதராணி மேவினாள். பிறகு பொறுங்கோ தங்கச்சி வந்தோண்ணை பைக்கில கொண்டுபோய் உங்களை பஸ்சில ஏத்தி விடுறன் எண்டு சொன்னாள். வெண்மதிக்குத் தப்பினன் பிழைச்சன் எண்டு இருந்தது. இனி வாசனை எங்கையும் வழி தெருவில கண்டால் 'புண்டையாண்டி என்னை வேசையாடச் செற்பண்ணி விடப்பாத்தனியோ'

எண்டு கிழியக்கிழியக் கேக்கவேணும் எண்டு வெண்மதி அடுக்கெடுத்தாள்.

*6*

ஊர்ப்பள்ளிக்கூடத்தில பதினைஞ்சு பிள்ளையள் அஞ்சாம் வகுப்பு இஸ்கொலசீப் சோதனையெடுத்து மேசன் செல்வராசாவின்ர பெடியன் மட்டும்தான் பாஸ் பண்ணினவன் அதால மேசன் செல்வராசாவுக்கு மூக்கு முட்டின பெருமை. பொடியன் இப்ப டவுன் பள்ளிக்கூடத்தில படிக்கிறான், பஸ்சிலதான் போய் வாறவன் அடுத்த வரியம் ஓ லெவல் எடுக்கப்போறான் மாவட்டத்திலையே முதலாவதாக வருவான் எண்டு அவனுக்குப்படிப்பிக்கிற வாத்திமாரும், சொல்லினம். பள்ளிக்கூடத்தில என்னோட படிக்கிற பெடியளெல்லாம் டச் போன் வைச்சிருக்கிறாங்கள், என்னட்ட மட்டும் தானில்லை . அது மட்டும் இருந்தா எக்சாம் செய்யிறதுக்கு ஈசியாய் இருக்கும் எண்டு பொடியன் தாய்காரியின்ர காதைக் கடிச்சாப்போல எட படிக்கிற பிள்ளை வாய்விட்டுக்கேக்கிறான் எண்டு ஏதோ விதப்பட்டு மேசன் செல்வராசாவும் புத்தப்புதிசாய் ஒரு டச் போனை வாங்கி பொடியனின்ர கையில குடுத்தான். அதுக்குப்பிறகு எப்ப பாத்தாலும் பெடியன் போனும் கையுமாய்தான் இருப்பான். ஆளுக்குச் சினேகிதங்களும் கனக்க அடிக்கடி சில பொடியள் வீட்டையும் வந்து போவாங்கள், இப்ப இருக்கிறவீடு மண்வீடுதான், அரைச்சுவர் வைச்சு கீற்றுத்தட்டி கட்டியிருக்கு பக்கத்தில ஒரு கல்வீட்டுக்கு, அத்திவாரம் போட்டு அரைச்சுவர் எழுப்பியிருக்கு, வீட்டுக்குச் சினேகிதங்கள் வந்தால் பொடியன் அந்தக் குறைவீட்டுப்பக்கம் தான் கூட்டிக்கொண்டுபோய்வைச்சுக் கதைப்பான். வசதியான குடும்பத்தில எல்லாம் பொடியனுக்குச் சினேகிதங்கள் இருக்கு. சிலது கடுக்கண் குத்திக்கொண்டு வரும், சிலது தாடியை அரை குறையாய் வழிச்சுக்கொண்டு வரும். சிலது சடை வளர்த்து குடும்பி கட்டிக்கொண்டு வரும். சிலது பச்சை குத்திக்கொண்டு வரும் இப்பிடிச்சினேகிதங்கள் பொடியனிட்ட வந்து போறதில மேசன் செல்வராசாவுக்குப் பெருமை. இதுகளெல்லாம் தன்ர பொடியனிட்ட படிக்க வருகுதுகளாக்கும்மெண்டும் மேசன் செல்வராசாவும் மனிசிக்காரியும் நினைச்சினம். சனி ஞாயிறெண்டால் பொடியனுக்கும் சினேகிதன்களுக்கும் கொண்டாட்டம், செல்வராசா வேலைக்குபோகிடுவான். மனிசிக்காரி ஊர் மேய வெளிக்கிட்டிடுவா அந்த நேரம் பொடியன் சினேகிதங்களுக்கு போன் அடிப்பான். அதுகளும் டின் பியர், சிகரெட் பெட்டியோட வருங்கள். பிறகென்ன அண்டைக்கொரே கொண்டாட்டம் தான். கொஞ்சநாளாய் சிகரட்டுக்குப்பதிலாய் கஞ்சா அடிக்க வெளிகிட்டிருக்கிறாங்கள். கடுக்கன் போட்ட குஞ்சன் தான் கஞ்சா சப்பிளேயர். கைதுடைக்கிற டிசுப்பேப்பரில கஞ்சாத் தூளைக்கொட்டி பிறகு சிகரட் மாதிரி சுருட்டிப்போட்டு பத்த வச்சிட்டு இழுத்தால், முதல் இழுப்புக்கு கெரிச்சு இருமும். அடுத்தடுத்து இழுக்க கிண் கிண் எண்டு மேலுக்கு ஏறும், அப்பிடியே மிதந்து மிதந்து பறக்கிற மாதிரி இருக்கும். சுத்திவர என்ன நடக்குது, தாங்கள் என்ன செய்யிறம் எண்டு எல்லாம் அவைக்குத்தெரியிறேல்ல. ஒருத்தன் உடுப்புக்களைக் கழட்டிப்போட்டு யட்டியோட நிப்பான். சில நேரம் எவன்ர சுண்ணி திறமானதெண்டு போட்டியும் நடக்கும். அண்டைக்கு குஞ்சன், தன்ர போனில ஒரு வீடியோக்கிளிப்பைக் காட்டினான். ஒரு பெட்டை அறைக்குள்ள நிண்டு உடுப்பு மாத்திறதை குளோஸப்பில எடுத்திருக்கு, முதல்ல மேற்சட்டையை கழற்றுறாள். பிறகு bra வைக்கழற்றுறாள். அதைப்பார்த்துக்கொண்டிருந்த ஒருத்தன். ஐய்யோ! இப்பிடிக்கொல்றாளே, ஆரடா இது? எண்டு வெம்ப, குஞ்சன் மை எல்ட சிஸ்ரர் எண்டான் சர்வசாதாரணமாக, வீடியோ கிளிப்பைப் பார்த்துக்கொண்டிருந்தவன் எல்லாம் ஷொக் அடிச்சு குஞ்சனைத்திரும்பிப் பார்க்க, ஹி..ஹி...எண்டு இளிச்சுப்போட்டு சொல்லுறான், என்ன டியர் அப்பிடிப்பாக்கிறியள்? என்ஜோய் பண்ணுறதுக்கு அக்கா, தங்கச்சி, அம்மா எண்டெல்லாம் நான் துடக்குப்பாக்கிறேல்ல மச்சான்ஸ். எளிய வேசை முழுக்கக் கழட்டுவாள் எண்டு பார்த்தன் ஏமாத்திட்டாள் அதைக்கேட்டவங்களுக்கெல்லாம் இப்ப அவனைப்பார்த்தா பிரமிப்பா இருந்திச்சுது, செய்தால் இவன் மாதிரிச் செய்ய வேணும், இல்லாட்டி என்ன மயிருக்கு ஆம்பிளையெண்டு வெளிக்கிட்டுத்திரிவான். எண்டு பொடியன் அலுத்துக்கொண்டான். ஒரு மாதிரி சினேகிதங்களெல்லாம். ஒவ்வொருத்தராய் கழண்டால் போலையும் தனிமையில் இருந்த பெடியனுக்கு இதுதான் யோசனை. நான் செய்யிறதுக்கென்ன இருக்கு? சுண்ணில மயிர் தான் இருக்கு எண்டு வெறுத்துப்போய் வெம்பினான். ஏதாவது செய்து சினேகிதங்களுக்கு கெத்துக் காட்ட வேணும் எண்ட எண்ணம் பெடியனுக்கு இதிலை

இருந்துதான் முளைச்சது. அதெல்லாம் போக அண்டைக்கொரு நாள் பள்ளிக்கூடம் போன பெடியன் சகோதரி வித்தியாவின்ர வல்லுறவுப் படுகொலைக்கு கண்டனப்பேரணியெண்டு சினேகிதன்களோட சேர்ந்து பம்பலடிச்சுப்போட்டு மத்தியான பஸ்சில வீட்ட வந்திட்டான். பெடியனுக்கு ஒரு நல்ல பழக்கம் சத்தம் சலார் இல்லாமல், தான் வீட்டுக்குள்ள வருவான். அண்டைக்கும் அப்பிடித்தான் நசிக்கிடாமல் வீட்டுக்குள்ள நுழைஞ்சிருந்தா. தென்னை மரத்தோட தகப்பன்ர சைக்கிள் சாஞ்சு கிடக்குது. இந்தாள் இண்டைக்கு வேலைக்குப்போகேல்லையோ? எண்டு நினைச்சுக்கொண்டு தன்ர படிக்கிற மேசைக்குக் கிட்டப்போக ஏதோ அனுங்கிற மாதிரிச் சத்தம் கேட்டுது. முதல்ல பொடியன் அதையவ்வளவாய்ப் பொருட்படுத்தேல்ல பிறகு பிறகு சத்தம் தீவிரமாக வடிவாய்க் காதுகுடுதுக்கேட்டான், தாயும் தேப்பனும் இருக்கிற தடுப்புக்குள்ள இருந்துதான் சத்தம் வாறது தெரிஞ்சுது. மெல்லமாய் போய்த் தட்டிநீக்கலுக்குள்ளால பாத்தான். தகப்பனும் தாயும் முற்றும் துறந்த நிலையில உச்சகட்டதிலயிருக்கினம். பொடியன் ஒண்டையும் யோசிக்கேல பொக்கற்றுக்குள்ளால மொபைலையெடுத்து கமராவை ஓன்பண்ணி அந்தக் கண்கொள்ளாக் காட்சியை ரக்கோட் பண்ணிக்கொண்டு இன்ரீரியர் மைண்ட் வொய்சில சொன்னான், எட குஞ்சா இதுக்கு முன்னால உன்ர வீடியோ எல்லாம் மயிரடா.

7

இப்பிடி நடக்குமெண்டு பத்மா கனவிலையும் நினைக்கேல்ல கொஞ்சம் கவனமாய் நடந்திருக்கலாம், இப்ப மனம் நொந்து என்ன செய்யிறது டேட் பிந்திக்கொண்டு போகேக்கையே, நிதானிச்சு இருக்க வேண்டும். அவளுக்கிருக்கிற சோலிக்குள்ள, இதையெல்லாம் கவனிக்க எங்க நேரம் கிடக்கு? தடுப்பில இருக்கிற புருசனைப்பார்க்க இரண்டு பிள்ளையையும் தாயோட விட்டிட்டு பரந்தனில இருந்து பூசாவிற்குப் போக ரெண்டுநாள் வர ரெண்டு நாள் நாலு நாள் பயணம், தங்கிற செலவு, சாப்பாட்டுச்செலவு, போக்குவரத்துச்செலவெண்டு காதில கழுத்தில கிடந்ததெல்லாம், வித்துக்கடைசியில தாலி ஒண்டுதான் மிச்சம். அதுகும் இப்ப அடைவில கிடக்கு, விக்கிறதுக்கும் மனம் வரேல்ல, அவள் புருசனை முதல் முதலா பூசா முகாமில வச்சுப்பாக்கேக்குள்ள நல்ல மாதிரித்தான் இருந்தான். இங்கை எனக்கொரு பிரச்சினையும் இல்லை. சாப்பாடும் வேளா வேளைக்கு கிடைக்குது நீயும் பிள்ளையளும் தான் நல்ல சாப்பாடு சாப்பிட்டு அவதானமாய் இருக்க வேணும், என்னோட பிடிபட்ட குரூப்பை கிட்டடியில விடப்போறாங்களாம், இனி ஊருக்கு வந்திட்டால், ஒரு தோட்டந்துரவச்செய்து கொண்டு நிம்மதியாக இருக்கலாம். எண்டெல்லாம் சொன்னவன் தான் அடுத்த முறை சந்திக்கேக்குள்ள உன்ர தலையை அடகு வச்செண்டாலும் இங்க இருந்து என்னைத் திருகோண மலைக்கு மாத்துவிக்கிறதுக்கு அலுவல் பார் இஞ்ச இவங்கள் செய்யிற சித்திரவதையள தாங்கேலாமக்கிடக்கு . இப்பிடியே போனால் அடுத்த முறை என்னை உயிரோட பாப்பியோ தெரியாது எண்டு தழு தழுத்தான். பத்மாவும் அழுது விட்டாள், அவனைக் கண் கொண்டு பாக்க முடியவில்லை. சொண்டு வெடிச்சு வீங்கிப்போயிருந்தது. முன் பல்லு ரண்டும் உடைச்சுப்போய் கண்களும் வீக்கத்தில சுருங்கிப்போய் இருந்தது, போட்டிருந்த சேட்டிற்குள் ரத்தம் கசிந்திருந்தது. நடக்கிற தில்லாமல் பத்மாவை திரும்பித்திரும்பி பார்த்துக்கொண்டுதான் போனான். அவளுக்கு வெளியில வரேக்குள்ள தலை கிறு கிறுக்கத்தொடங்கிட்டுது. மயக்கம் வாற மாதிரியும் இருந்தது. அப்படியே நிலத்தில இருந்திட்டாள். பிறகொரு மாதிரி தட்டித்தடவி லொச்சுக்கு வந்து சேர்ந்திட்டாள். அண்டுமுழுக்கச் சாப்பாடும் இல்லை நித்திரையுமில்லை. இனி என்ன செய்யப்போறன்? விக்கிறதுக்கு என்ன கிடக்கு என்னட்ட, என்ர ஆண்டவரே என்னை ஏன் இப்பிடி உத்தரிக்க விட்டனி? முள்ளிவாய்க்காலுக்க அடிச்ச செல்லில ஒண்டையாவது எனக்கு மேல விழுத்தி என்னைக்கொன்றிருக்கலாமே? என ஒரே அழுகை. பிறகு எதண்டாலும் ஊருக்குப் போய் யோசிப்பம் எண்டு முடிவெடுத்து அடுத்தநாள் காலமை, வெளிக்கிட்டாள். அந்த நேரம் பார்த்து ஒருத்தன் அவளைத்தேடி லொச்சுக்கு வந்தான்.

‘நீங்க தானே பத்மராணி அருமைச்செல்வம்?’

‘ஓமோம் நீங்கள்?’

‘நான் கியூமன் ரைட்ஸ் கொமிசனில வேலை செய்யிறன், உங்க கஸ்பண்ட் விசயமா கதைக்க வேணும்’

‘என்ன கதைக்க வேணும்?’

‘உங்கட கஸ்பண்ட் உயிரோட இருக்கிறது சாகிறது எல்லாமே உங்கட கையிலதான் இருக்கு’

‘நீங்கள் என்ன சொல்லுறியள் எனக்கு ஒண்டும் விளங்கேல’

‘எனக்கு அங்க இருக்கிற ஜெயில் காட், ஜெயிலர் சகலரையும் தெரியும், அவங்கள் ஒரு மொக்குக்கூட்டம் கடைசிக்கட்டச் சண்டையில பிடிபட்ட எத்தனையோ பெடியள அடிச்சுச் சாக்காட்டிப்போட்டு மூச்சு விடாமல் காதுங்காதும் வச்ச மாதிரி கிடங்கு வெட்டித்தாட்டிருக்கிறாங்கள். இப்பவும் அந்தப்பெடியளின்ர மனிசிமார், தாய்மார், சகோதரி மாரெண்டு கிழமைக்கொருக்கால் வந்து ஏமாந்து கொண்டு போகுதுகள், நீங்களும் கொஞ்சம் தாமதித்தால் இதுதான் நடக்கும்’

‘என்ர ஐய்யோ ! அதுக்கு நான் என்ன செய்யிறது?’

‘நீங்கள் ஒண்டும் பெரிசாச் செய்ய வேண்டாம், ஓரிரவு அவங்களோட தங்க வேணும் அவ்வளவுதான்’

‘என்னது? எளிய பொறுக்கி! என்னையென்ன வேசையாடச்சொல்லுறியோ? போடா நாயே! வெளி-

யிலை எண்டு முதல்ல துள்ளியடிக்கத்தான் செய்தாள். ஆனால் வந்தவன் விடேல்ல அவளைக்கொஞ்சம் ஓவராய்ப் பயப்பிடுத்தி இடைக்கிடை குழைக்கடிச்சு ஒருமாதிரி இணங்க வச்சிட்டான். அவள் தொடர்ந்து மூண்டு நாள் அந்த புறோக்கர், ஜெயிலர், ஜெயில் காட் எண்டு ஆறு பேரோட அழுதழுது படுத்தெழும்பினாள் . ஒரு கிழமைக்குள்ள அவளின்ர புரியன் அருமைச்செல்வத்தை திருகோணமலை ஜெயிலுக்கு மாத்தினார்கள். மனம் குறுகுறுக்க அவனைப்பார்க்கப்போனாள். அங்கையிருந்து இஞ்ச என்னை மாத்தியிருக்காட்டி என்னை முடிச்சிருப்பாங்கள். எண்டவன் சொல்ல தாலி முதல் கொண்டு எல்லாத்தையும் வித்துத்தான் அலுவல் பாத்தது எண்டு அவள் சொன்னாள். இவளால் புரியனை நிமிந்து பார்க்க முடியேல்ல, கொஞ்சம் ஒத்தது மட்டும் சட்டவிரோதமில்லையாக்கும் எண்டு டொக்ரரிட்ட கேக்கவேணும் போல இருந்தது. பேசாமல் வந்திட்டாள். இனித்தாய்க்காரிட்ட விசயத்தை மறைக்கேலாது. மற்றது அவளுக்கிருக்கிற ஒரே துணையும் தாய்க்காரிதானே. இரவு பிள்ளையள் நித்திரையானால் போல தாய்க்காரிட்ட விசயத்தைச்சொன்னாள். எளிய வேசை கண்டவன் நிண்டவனுக்கெல்லாம் கவட்டை விரிச்சுப்போட்டு பொடிவேண்டிக்கொண்டு வந்து எனக்கு நியாயம் சொல்லுறியோ? உன்னைப் பிறந்த கூட்டுக்கை கழுத்த நெரிச்சுக் கொல்லாமல் விட்டேனே! ஐயோ இப்ப ஊருலகமெல்லாம் காறித்துப்பப் போகுதே! ஐயோ! என்னைச் சந்தி சிரிக்க வைச்சிச்சிட்டியேடி! எண்டு பத்மாவைக் குடுமிப்பிடியிலை கவுட்டுபோட்டு முதுகில கும்மு கும்மெண்டு கும்மி தாய்க்காரி




அழுது போட்டு வந்தாள். இந்தத்தடுதாளிக்குள்ள சூதகம் பிந்தினதைக் கவனிக்கேல்ல, மூண்டு மாதம் பிந்தினால் போலத்தான் ஆஸ்பத்திரிக்குப்போனாள். பிள்ளை தங்கீட்டுது எண்டு டொக்டர் சொல்ல விறைச்சுப்போனாள், தலைக்கு மேலை வெள்ளம் போனாப்போலை இனி என்ன செய்யிறது? வந்து வெளியில இருந்திட்டு மத்தியானத்துக்குப் பிறகு கிளினிக் முடியிற நேரம் டொக்டரிட்ட போய் விசயத்தைச்சொல்லி கருவைக்கலைக்கிறதுக்குக் கேட்டாள். இந்த நிலையில கருக்கலைப்பு செய்யிறது உயிருக்கே உலை வச்சிடும் மற்றது தன்னால இந்தச் சட்ட விரோதமான காரியத்தைச்செய்ய முடியாதெண்டு ஆள் கையை விரிச்சிட்டார். ஆறு பேர் ஒருத்திக்கு ஒப்பாரி வச்சா. பிறகு எல்லாம் தெளிஞ்சு தாய்க்காரி ஒரு முடிவுக்கு வந்தாள். நாளைக்குக் கருக்கலோட எழும்பி புதுக்குடியிருப்புக்குப் போறம்! எண்டு சொல்லிபோட்டு தாய்க்காரி ஒருபக்கம் பத்மா ஒரு பக்கமாக விடிய விடியச் சுவரோட சாஞ்சு கொண்டு இருந்து அழுதினம்.

அடுத்தநாள் விடிய தாய்க்காரி பத்மாவையும் பிள்ளையளையும் கூட்டிக்கொண், புதுக்குடியிருப்புக்குபோனாள் அங்க தான் அவவின்ர தம்பிக்காரன் சுந்தரம் இருக்கிறார். ஆள் கலியாணம் கட்டேல்ல, தனிக்கட்டை ஆளும் ஒரு போக்கு. அங்க போனாப்போல

பிள்ளையளைச் சுந்தரத்தோட விட்டுப்போட்டு பொடி கரைக்கிறதில, எக்ஸ்பேட்டான நாகியிட்ட பத்மாவைத் தாய்க்காரி கூட்டிக்கொண்டு போனா. நாகி பத்மாவை மல்லாதிப்போட்டு வயித்த அமத்திப்பார்த்து, தொடையளை விரிச்சு உள்ள விரல் விட்டுப்பார்த்திட்டு காலம் கடந்திட்டுது இப்ப கரைக்க வெளிக்கிட்டால் பெட்டை செத்துப்போயிடும், எண்டு கையை விரிச்சாள், பொடி பிறந்தாப்போல ஆகவேண்டியதைப்பாப்பம், எண்டு தாய்க்காரி அங்க வச்சு முடிவெடுத்தாள், தம்பிக்காரன் வீட்ட பத்மாவை விட்டுப்போட்டு, பொடி பிறக்கிறது மட்டும் இங்கேயே இரு மற்றதெல்லாம் நான் பார்த்துக்கொள்ளுறன் எண்டு அவளிட்டச்சொல்லிப்போட்டு, பிள்ளையளையும் கூட்டிக்கொண்டு பரந்தனுக்கு வந்து சேர்ந்தாள். அதுக்குப்பிறகு பத்மாவையும் புரியனையும் தாய்க்காரிதான் திருகோணமலைக்குப்போய் பாத்துக்கொண்டு வந்தாள். அவனிட்ட, இருக்கிற கஸ்ரம் போதாதெண்டு பத்மாவும் கிணத்தடியில வழுக்கி விழுந்து இடுப்பெலும்பை முறிச்சுப்போட்டு கிடக்கிறாள் எண்டு கதை விட்டுக்கொண்டிருந்தாள்.

பத்மாவுக்கு இப்பையோ இக்கணமோ பொடி பிறந்திடும் எண்ட நிலையில தாய்க்காரி சுந்தரத்தை தனியக்கூட்டிக்கொண்டு போய் பத்மாவுக்கு பொடி பிறந்தவுடனை செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றிச் சொன்னா. சுந்தரமும் கோயில் மாடு மாதிரி தலையைத்தலையை ஆட்டினான். அடுத்தடுத்தநாள் இரவு பத்மாவுக்கு குத்தெழும்பிச்சுது. கடைசிக்கட்ட சண்டை நடக்கேக்குள்ள சுந்தரம், நேர்ஸ் மலரக்கா குடும்பம் உயிர் தப்புறதுக்கு எல்லா விதத்திலையும் ஒத்தாசையாய் இருந்ததால அந்த நேரத்திலேயும் சுந்தரம் டெலிபோன் அடிச்சவுடனை நேர்ஸ் மலரக்கா மனிசன்ர மோட்டச்சைக்கிள்ள ஏறி வந்திட்டா. கொஞ்சம் கஸ்ரப்பட்டுத்தான் பிள்ளை பிறந்தது. ஆம்பிளைப்பிள்ளை. எண்டு நேர்ஸ் மலரக்கா சொன்னதைக்கேட்டு அது தான் இப்ப முக்கியம் எண்டு அனுங்கினா. மறுநாள் இரவு சுந்தரம் நசுக்கிடாமல் பொடியின்ர கழுத்தைத் திருகிச் சாக்கொண்டு போட்டு மண்ணெண்ணை ஊற்றி கொழுத்திக்கருக்கினாப்போல கிடங்கு வெட்டித்தாட்டு பிறகு கொஞ்ச நாளால நாயள் அந்த இடத்தை வறுகி ஊரெல்லாம் மணத்து பொலீஸ் வந்து மிதத்தி பிறகு இதெல்லாம் நேரடி ரிப்போட்டாக போட்டோக்களோட ஒரு முழுப்பக்க கட்டுரையாய் பேப்பரில் வந்தது.

மேகலை தடுப்பில இருந்து வந்து ஆறு வரியமாகுது. அங்க இருந்து வெளிக்கிடேக்குள்ள பெண் போராளிகளுக்கு ஒவ்வொரு மொபைல் போன் தந்து தான் விட்டவங்கள். எந்த நேரத்தில கோல் எடுத்தாலும் கதைக்க வேணும். கதைக்காமல் விட்டால் தேவையில்லாத பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்குமெண்டு சொன்னார்கள். அதால அந்த மொபைல் போனுக்கு எந்த கோல் வந்தாலும் மேகலை எடுத்துக் கதைப்பாள். அநேகமா நடுச் சாமத்தில் தான் கோல் வரும்.சி .ஐ .டி பிராஞ் சில இருந்து கதைக்கிறம் எண்டு தான் தொடங்குங்கள். பிறகு தொடர்ந்து கதைக்கிறதா கேட் டால் அவளுக்கு காது ரெண்டும் கூசும். அவளும் ஏதேதோ சொல்லிச் சமாளிப்பாள். ஆறு வாரியமா இது தான் நடக்குது. தொடக்கத்திலே அவளுக்கு தலை விறைச்சு அப் செட் ஆயிடுவாள். கையில ஆர்ம்ஸ் இருந்தால் கதைக்கிறவன அம்மணமா நிக்க வச்சு சுன்னி தெறிக்க கவட்டுக்க வெடி வைக்க வேணும் போல ஆத்திரமாயிருக்கும். சில நாட்களில் இரவிரவா அழுதுமிருக்கிறாள். காலப் போக்கில் எல்லாம் பழகிட்டுது. இப்பிடித் தான் அண்டைக்கு நடுச்சாமத்தில ஒரு கோல் ஒண்டு வந்துச்சு.

'கலோ மேகலையா கதைக்கிறது'

'ஓம் ...நீங்கள் .....'

'உமக்கு வேண்டப் பட்ட ஆள் தான்'

'என்னது?'

'என்ன உமக்கு தெரிஞ்சிருக்காது.ஆனால் உம்மை எனக்கு நல்லாத் தெரியும்'

'அதுக்கு?'

'ஒண்டுமில்ல. சி ஐ டி பிராஞ் ஆட்கள் தான் உம்மடை நம்பர் தந்தவை. அது தான் எடுத்தனான். உம்மட சேவை எனக்கு தேவையாய் இருக்குது'

'என்ன சேவை?'

'சி ஐ டி பிராஞ்காரருக்கு என்ன சேவை செய்தனீரோ அந்தச் சேவை'

'எனக்கொண்டும் விளங்கேல்ல. என்னது சேவையெண்டா?'

பேப் புண்டை என்ன நடிக்கிறியோ புண்டை மயிரெல்லாம் வழிச்சிட்டு வடிவாக் கிளீனா வாடி ஒக்கிறதுக்கு'

'வையடா போனை பொறுக்கிப் புண்டையாண்டி !'

'உதுக்கெல்லாம் வேற ஆளைப்பார்' எண்டு சொல்லிக்கட் பண்ணீட்டு அவளுக்குச் சி .ஐ. டிக்காரர் வழமையாய் எடுக்கிற நம்பருக்கு அடிச்சாள். உடனே எடுத்திட்டாங்கள்.

'ஹலோ யாரு?'

'சேர் நான் மேகலை கதைக்கிறன்'

'சொல்லு என்ன ப்ராப்பிளம்'

'யாரோ கோல் பண்ணித்தேவையில்லாமக் கதைக்கினம்'

'அப்பிடியா அந்த நம்பரை எஸ் எம் எஸ் பண்ணி விடும். நாங்கள் பாக்கிறம்'

'நன்றி ஸேர்'

'ஓகே ஓகே'

அவள் எதிர்பார்த்த மாதிரியே முதல் கதைச்சவனுக்கும் இரண்டாம் தரம் கதைச்சவனுக்கும் குரல் ஒரே மாதிரியிருந்தது.

கருணாகரன் முதல்ல மண்ணெண்ணெய் வியாபாரம் செய்தவன் இவனைப்பார்த்துத்தான் மகேஸ்வரன் இந்த வியாபாரத்துக்குள்ள வந்தவர். மகேஸ்வரன் மண்ணெண்ணெய் விக்கத்தொடங்கினால் போல கருணாகரன் அதை விட்டிட்டான். பிறகு சவுக்காரம் விக்கத்தொடங்கினான். பிறகு அதையும் விட்டுப்போட்டு டெலிக்கொமினிக்கேசன் நடத்தினான். இடையில ரீவி, டெக், ஜெனரேர்டர் வாடகைக்கு விட்டான், இப்ப பொம்புளைப்புப் றோக்கரா இருக்கிறான். இந்தத்தொழில் வெளி-யில தெரியக்கூடாது எண்டதுக்காக டவுனுக்க ஒரு புடவைக்கடை நடத்துறான். அவனோட டெலிப்போன் தொடர்பு வச்சிருக்க விரும்பாத பொம்பிளையள் புடவைக்கடைக்கு போய்த்தான் டீல் பண்ணுவினம். முந்தியெண்டால் குறிப்பிட்ட சில பொம்பிளையள் மட்டும்தான் தொழில்ல இருப்பினம் ஆனால் இப்ப ஏ எல் படிக்கிற பள்ளிக்கூடப்பெட்டையள், கம்பஸில படிக்கிற பெட்டையள்.

உத்தியோகம் பார்க்கிற பொம்பிளையள், குடும்பக்குத்து விளக்குகள், தடுப்பில இருந்து வந்த பெட்டையள் எண்டு பலதும் பத்தும் தொழிலுக்கு வந்திருக்குது அதால கருணாகரனின்ர மொபையிலுக்கு புதுப்புது நம்பருகளில இருந்து கோலுகள் வந்துகொண்டே இருக்கும். பொதுவாய் யாழ்ப்பாணத்துக்கு முக்கியமான மினிஸ்ரர் மார், எம்பி மார், மேல்மட்ட பொலிடீசியன்மார். வந்தால் கருணாகரன்ர லைன் பிசியா இருக்கும் சில நேரம் ஆமிக்காரர், புலனாய்வுக்காரர், சில தமிழ்க்காரங்களும் கோல் எடுப்பாங்கள் ஆர் எடுத்தாலும் அவன் ஒரு மணித்தியாலத்துக்குள்ள பொம்புள செட் பண்ணிக்குடுப்பான். அதால எல்லா மட்டத்திலையும் அவனுக்குச் செல்வாக்கு இருக்கு.
வழக்கமாய் அவனுக்கு ஆம்பிளையள் தான் கோல் எடுப்பாங்கள் ஆனால் அண்டைக்கொரு பெட்டை கோல் எடுத்தாள்.
*'ஹலோ கருணா அண்ணாவா?'*
*'ஓமோம் ! நீங்களார் கதைக்கிறது?'*
*'நான் எழிலிசை கதைக்கிறன்!'*
*'ஏழிலிசையா ஆரது விளங்கேல?'*
*'மேசியக்கா தான் உங்களோட கதைக்கச்சொல்லி நம்பர் தந்தவா'*
*'ஓ! சரி சரி விசயத்தச் சொல்லும்'*
*'உங்களுக்கு அடிச்சுக்கதைச்சா உங்களுக்கு எல்லாம் விளங்குமெண்டு மேசியக்கா சொன்னவா , அதுதான்'*
*'ஓமப்படியோ. சர் சரி நீர் மரி பண்ணீட்ரீரோ?'*
*'ஓமண்ணா! அவர் கடைசிச்சண்டையில கிபிரடிச்சுச் செத்திட்டார், இரண்டு பொம்புள பிள்ளையள் ஒண்டுக்கு மூண்டு வயது, மற்றதுக்கு ஒரு வயது'*
*'இப்ப ஆரோட இருக்கிறீர்?'*
*'தனியத்தான்'*
*'உம்மட அம்மா அப்பா?'*
*'அவையள் சண்டைக்குள்ள செத்திட்டினம்'*
*'ம்ம்... சரி என்ன ரேட் எதிர் பாக்கிறீர்?'*
*'மேசியக்கா உங்களுக்கு எல்லாம் தெரியும் எண்டு சொன்னவா'*
*'மேசி உமக்கு எப்படிப்பழக்கம்?'*
*'அவாட சொந்தக்காரரர் என்ர வீட்டுக்கு பக்கத்தில இருக்கினம் அவா அங்க வரேக்க கதைச்சுக்கதைச்சுப் பழக்கம் அவா என்னையும் ஒரு நாள் லொட்ஜில கொண்டு போய் விட்டவ'*
*'எந்த இடம் நீர் இருக்கிறது?'*
*'திருவையாறு கிளிநொச்சி'*
*'நேரங்கள் என்ன மாதிரி?'*
*'முதல் நாள் சொன்னால் சரி'*
*'சரி. சரி.. இதுதானே உம்மட நம்பர்.. ஓகே நானே உமக்கு அடிக்கிறன்'*
எண்டிட்டு கட் பண்ணின கையோட திரும்பவும் போன் ரிங் பண்ணிச்சுது. அதுவும் புது நம்பர் எண்டாப்போல ஆன்சர் பண்ணினான்.
*'ஹலோ! கரன் அண்ணாவா?'*
*'ஓமோம் ! நீங்களார் கதைக்கிறது?'*
*'நான் நந்தினி கதைக்கிறன் பத்மா அக்காதான் நம்பர் தந்தவா'*
*'சரி பிள்ளை என்ன சங்கதி சொல்லுங்கோ!'*
*'உங்களோட கதைச்சா சரியெண்டு சொன்னவா?'*
*'சரி குஞ்சு எங்கையிருந்து கதைக்கிறீர்?'*
*'நான் இஞ்ச டவுனுக்குள்ள தான் இருக்கிறன் ஏ. எல் படிக்கிறன்'*
*'படிக்கிற பிள்ளையோ? அப்ப பத்மாவோட எப்படிப்பழக்கம்?'*
*'எனக்குத்தெரிஞ்ச BOY ஒருத்தர் மூலமா பழக்கம், என்னையும் ஒருநாள் தியேட்டருக்கு கூட்டிக்கொண்டு போனவா. அதுக்குப்பிறகுதான்..'*
*'ம்.. படிக்கிற பிள்ளை எண்டு சொல்லுறீர் பிறகு என்ன பிரச்சினை?'*
*'வீட்டில தாற காசு செலவுக்குப் போதாமல் இருக்கு'*
*'ம்.. சரி என்ன ரேட் சொல்லுறீர்?'*
*'அதெல்லாம் உங்களுக்குத்தெரியும் எண்டு பத்மாக்கா சொன்னவா?'*
*'என்ன டைம் வசதிப்படும்?'*
'Holidays' எண்டா *2.30* வரைக்கும் OK... Other days எண்டா *2.30 - 6.00* இடையில OK. மற்றதண்ணா குடிக்கிற ஆக்கள், கஞ்சா அடிக்கிறாக்கள், வயது போன ஆக்கள் எல்லாம் வேண்டாம், டீசண்டான ஜங் ஆக்கள் எண்டா சொல்லுங்கோ'
*'ம்ம்ம்.. சரி.. சரி.. இதுதானே உம்மட நம்பர், ஓகே நானே உமக்கு அடிப்பன் ரெடியா இரும்'*
*(கள்ள ஒழ் ஒக்கிறதுக்கு அவாக்கு டீசெண்டான இளம் பெடியள் தேவைப்படுது) இண்டீரியர் மொனலொக்கோட கதைச்சான்)*
'Thanks அண்ணா'

'Thanks thanks'
கதைச்சு முடிச்சிட்டு தன்ர கன்னி ராசிக்கு நாட்பலனைப் பார்த்தான். புதிய உறவு, தொழில் விருத்தி அதிக லாபம் எண்டு போட்டிருந்தது.

*8*

பேங் மனேஜ்சர் தங்கராசாவை தெரியும்தானே, மனிசிக்காரியும் டவுண் பிரிண்சிப்பலா இருக்கிறா. ஒரே ஒரு பொம்பிளை பிள்ளை, சுவாதிக்கா எண்டு சொல்லி ஏ.எல் படிக்குது. அந்த பிள்ளை என்னத்தையோ பறி கொடுத்த மாரி மூலைக்கு மூலையிருந்து யோசிச்சுகொண்டு இருந்தாப்போல தாயும் தேப்பனும் என்னவோ ஏதோ என்று பதகளிச்சு என்ன குஞ்சு நடந்தது எண்டு பதமா கேட்டும் பதில் சொல்லேல்ல. தாய்க்காரி இதபற்றி ஸ்கூலில தனக்கு நெருக்கமான ஆக்களிட்ட டிஸ்கஸ் பண்ணேக்குள்ள ரீச்சர் ஒராள் சொன்னா 'மேடம் உங்கட பிள்ளைய ஒரு சைக்காடிஸ்ட கூட்டிக்கொண்டே காட்டுங்கோ எல்லாம் சரிவரும்' இன்னொராள் சொன்னா மேடம் உதுக்குச்சரியான ஆள் மேகலா புவனேந்திரன் தான். அவதான் இப்ப யப்னாக்குள்ளையே திறமான சைக்காஸ்ரிஸ், பேப்பறுகளில எல்லாம் எழுதுறா பாக்கிறேல்லையோ? எண்டு.

அதுக்குப்பிறகு தாய்க்காரி தகப்பன்காரனுக்கு விசயத்தைச்சொல்லி மேகலா புவனேந்திரனிட்ட அப்போய்ன்ண்ட் மெண்ட் எடுத்து பிள்ளையை நைசாகக்கூட்டிக்கொண்டு போச்சினம்.

மேகலா புவனேந்திரன் ஐஞ்சாறு பேரோட கதைச்சாப்போல பிள்ளைய கூப்பிட்டா பிள்ளையோட தாயும் உள்ளை போக இதில ஆர் சுவாதிக்கா எண்டு மேகலா கேக்க, பிள்ளை நாந்தான் மேடம் எண்டு திருவாய் மலர்ந்தா போல 'பிளீஸ் நான் சுவாதிக்காவோட பெர்சனலா கொஞ்சம் கதைக்க வேண்டியிருக்குது நீங்கள் கொஞ்சம் வெளியில போறிங்களா?' எண்டு தாய்க்காரியைப்பார்த்து கேக்கேக்க தாய்க்காரிக்கு முகத்தில அடிச்ச மாதிரி இருந்தது. என்னவோ பிள்ளையின்ர பிரச்சினை தீர்ந்தால் காணும் எண்டிட்டு வெளியில வந்திட்டா. இப்ப மேகலா புவனேந்திரன் சுவாதிக்காவோட கதைக்கத்தொடங்கினா. இங்க பாரும் சுவாதிக்கா நான் மற்ற லேடீஸ் மாதிரி இல்லை. நீர் தயங்காமல் என்னோட என்னத்தையும் கதைக்கலாம். கதை வெளியில போகாது எனக்குளையே வச்சிருப்பன். அதுக்கு நீர் பயப்படத்தேவையில்லை உள்ளதச்சொல்லும். உமக்கென்ன பிரச்சனை?

இந்த விசயத்தில மேகலா, கல்லையும் கரைக்கிற ஆள் எண்டுபரவலாக் கதைப்பினம், பிள்ளையும் உடன கரைஞ்சிட்டுது.

'மேடம்! நான் ஏ எல் மட்ஸ் படிக்கிறன்'
'குட் நல்ல விசயம் ஒரு எஞ்சினியர் தயாராகிக்கொண்டு இருக்கிறா எண்டு வைப்பம்'
'அதில்லை மேடம் நான் ஒருத்தரை லவ் பண்ணுறன்'
'அதுவும் நல்ல விசயம் . அந்தப் பெடியனும் மற்சா படிக்கிறார்?'
'ஓம் மேடம்'
'இதில் என்ன இருக்கு எல்லாம் நோமலான விசயம் தானே'
'அதில்லை மேடம் இப்ப ஒரு மாதமாய் அவர் என்னை திரும்பியும் பார்க்கிறேல்ல, கோல் பண்ணினா கட் பண்ணுறார். எஸ் எம் எஸ் அனுப்பினால் திருப்பி எஸ்.எம்.எஸ் அனுப்பிறேல்ல.நேரில் சந்திக்கப் போனால் முகத்தை திருப்பிக் கொண்டு போறார்'
'ஏன் உங்களுக்கிடையில் ஏதாவது பிரச்சினையா ?'
'பெரிசா ஒண்டுமில்ல மேடம். அவர் இடைக்கிடை கஞ்சா பாவிக்கிறவர்'
'என்னது? கஞ்சா பாவிக்கிறவரா?'
'ஓம் மேடம்'
'சரி. இது எப்ப உமக்குத் தெரியும்?'
'லவ் பண்ண தொடங்கேக்கையே தெரியும் மேடம்'
'உமக்கென்ன விசரா பிள்ளை? லவ் பண்ண தொடங்க்கேக்கையே தெரியுமெண்டால் என்னத்துக்கு லவ் பண்ண வெளிக்கிட்டனீர்?'
'அதில்ல மேடம் ,எங்கட கிளாசில இருக்கிற கேர்ள்ஸ் எல்லாருக்கும் லவ்வர் இருக்கு எனக்கு மட்டும் இல்லையெண்டா நல்லாவா இருக்கும்? பிரண்ட்ஸ் மதிக்க மாட்டினம் - அது தான்'
'எட கதை அப்பிடிப் போகுதோ? சரி இப்ப என்ன பிரச்சினை'
'அவர் கொஞ்ச நாளாய் கடுமையா கஞ்சா அடிக்கிறார். எண்டாப் போல ஒரு நாள் அவர மீற் பண்ணேக்குள்ள உங்களுக்கு நான் முக்கியமெண்டா இனி கஞ்சா பாவிக்கக் கூடாதெண்டு சொன்னன். அதுக்கவர் என்ன கொன்ரோல் பண்ணுறதுக்கு நீ யார்? போடி அங்கால எண்டு கத்தினார். அதுக்குப் பிறகு தான் இந்தப் பிரச்சினை'
சரி ....இப்போதைக்கு படிச்சு யுனிவர்சிட்டிக்கு எண்டர் பண்ணுற வழியப் பாரும். பிறகு லவ் பண்ணலாம்'
'இல்ல மேடம் .என்னால படிக்க முடியல்ல. அவர் இல்லாத வாழ்க்கையை நினைச்சுக்க கூடப் பார்க்க முடியல்ல.
'சரி ..சரி .... இப்ப நீர் போயிட்டு ஒரு கிழமையால வாரும். இந்தப் பிரச்சினையை சுமூகமாத் தீர்க்கலாம்.' எண்டு பிள்ளையை வெளியில அனுப்பிட்டு 'எண்ட பாசையூர் புனித அந்தோனியாரே ,இப்பிடியான தோறையள அனுப்பி வைச்சு என்ன உத்தரிக்க விடுறாய்? எண்டு தலையில கை வைச்சா'

●



## Aust vaagoy

அவர்கள்
எங்கள் பண்ணைகளை எரித்தனர்
அவர்கள்
எங்கள் ஆண்களைக் கொன்றனர்
மீண்டும் மீண்டும்
எங்கள் இதயங்களை குமுறியெழச் செய்வோம்.

எங்கள் இதயங்களை
கொடும் வலி கொண்டு பிளந்து கொள்வோம்.
அவர்கள்
எங்கள் பண்ணைகளை எரித்தனர்.
அவர்கள் அதை இன்றே செய்தனர்.

அவர்கள்
எங்கள் பண்ணைகளை எரித்தனர்.
அவர்கள்
எங்கள் ஆண்களைக் கொன்றனர்
எங்கள்
ஒவ்வொருவரின் மரணத்தின் பின்னே
ஆயிரமாய் திரண்டெழுவர்.

எல்லாவற்றையும்
எல்லாவற்றையும் இழந்த போதும்
சளைக்காது
ஆயிரமாய் மலையெனத் திரண்டெழுவர்.
ஓ............மரணித்த தோழர்களே...!
அவர்களால்
எம்மை ஒருபோதும்
அடிபணியச் செய்ய முடியாது.

## விடுதலை



*எங்களது கைகளை*
*முன்நோக்கி நீட்டுகின்றோம்*
*ஆனால்*
*விடுதலைக்கு இருப்பிடம் எதுவுமில்லை.*
*அது எப்போதாவது*
*திருப்தியுற்று தனது இருப்பிடத்தில் அமர்ந்துள்ளதா...?*
*அல்லது*
*உணவுப் பருக்கைகளை தனது சகோதரனுடன்*
*பகிர்ந்துகொண்டுள்ளதா?*

*எப்போது*
*நிரந்தரமான வடிவத்தை*
*அது பெற்றுக் கொண்டது.*
*அது ஒரு கனவு*
*ஒரு நெருப்பு*
*ஒரு புயல்*
*உன்னுடைய இதயம் தீய்ந்து போனதை*
*உணர்ந்தாயா.......?*
*அவ்வாறெனில்*
*அது உன்னைக் கடந்து சென்றுள்ளது*
*என்பதைத் தெரிந்து கொள்*

*பசி*
*பசியைத் தருகின்றது*
*இதயத்தின் அமைதியின்மை சிந்தனைத் தடங்கல்*
*அதனது*
*நலிந்த காலடிகளுமாய் இருந்த போதும்*
*ஒருவராலும்*
*விடுதலையை சிறைப்பிடித்து விடவே முடியாது.*

**நோர்வேஜிய மொழியில்: இங்கர் ஹாகரூப்** (Inger Hagerup)
**தமிழில்: பானுபாரதி.**



**A**ust vaagoy *(அஉஸ்த் வோகொய்)* என்ற இக்கவிதை *1905 - 1985* காலப் பகுதியைச் சேர்ந்த நோர்வேயின் சிறந்த படைப்பாளிகளில் ஒருவரான இங்கர் ஹாகரூப் அவர்களால் எழுதப்பட்டது. இவரது வரலாறு பற்றியோ அல்லது இவரது கவிதைகள் பற்றியோ பேச முற்படும்போது அவரது இந்தக் கவிதையை யாரும் எளிதில் கடந்து சென்று விட முடியாது. அந்த வகையில் இந்தக் கவிதை ஒரு வரலாற்று முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

*1940*ல் ஏப்ரல் *9*ம் திகதி நோர்வே நாசிப் படைகளினால் முற்றுகையிடப் பட்டது. நாசிகளுக்கெதிரான நடவடிக்கைகளில் பங்கேற்றதால் சுவீடனில் *1943* முதல் தலைமறைவு வாழ்வை மேற்கொள்கிறார். ஜேர்மானிய நாசிப் படைகளின் தாக்குதல்களுக்கெதிராக அவர் எழுதிய கவிதைகள் மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதே காலகட்டத்தில்தான் மேற்குறிப்பிட்ட கவிதையை அவர் எழுதுகின்றார். அவரது 'தொடர்ந்து' என்ற கவிதைத்தொகுப்பில் இடம் பெறும் «Aust vågøy» கவிதை நாசிப்படையெடுப்பினால் பாதிக்கப்பட்டிருந்த மக்களை சென்றடைகின்றது. *2*வது உலகப் போரின்போது விடுதலையின் பொருட்டு நோர்வே மக்கள் என்னவெல்லாம் இழக்க நேரிட்டது என்பதும் கணக்கிலடங்கா தமது உறவுகளை இழந்த போதும் எஞ்சியிருந்தவர்கள் எவ்வாறு ஒன்றாக பலமாக எதிர்த்து நின்றனர் என்பதையும் அவர் இந்தக் கவிதையினூடு வெளிக் கொணர்ந்தார்.

நாசிகளின் கெடுபிடி காரணமாக இந்தக் கவிதையை எழுதியவரை வெளிப்படுத்த இயலவில்லை. இந்தக் கவிதை வெளிவந்தபோது பலரும் இது போராளியும் படைப்பாளியுமான அர்னொல்வ் ஓவலாண்ட் என்றே நினைத்திருந்தனர். இங்கர் ஹாகரூப் பிரபல்யமாவதற்கு முன்னரே அவரது கவிதை துண்டுப் பிரசுரமாக மக்களிடையே கொண்டு செல்லப்பட்டது.

இந்தக் காலப் பகுதியில் லண்டனிலிருந்து பிபிசி வழியாக 'லண்டன் குரல்' நீண்ட அலைவரிசையில் நோர்வேக்கான ஒலிபரப்பு நிகழ்த்தப்பட்டது. இந்த நிகழ்ச்சி நோர்வே தேசிய தொலைக்காட்சியின் பணியாளர்களால் நோர்வே அரசாங்கத்தின் செய்திகளுடனும் ஒலிபரப்பப் பட்டது. நாசிகளுக்கெதிரான யுத்தத்தில் ஈடுபட்டிருந்த மக்களுக்கு மிகப் பெரிய ஆதரவுக் குரலாக இந்த ஒலிபரப்பு அமைந்தது. லண்டன் குரலில் இந்தக் கவிதையை வாசித்துக் கேட்ட போது இங்கர் ஹாகரூப் மிகவும் அதிர்ச்சி அடைந்தார் ஏனெனில் தனக்கு மிகவும் நெருங்கிய *5* நண்பர்களிடத்தில் மட்டுமே இந்தக் கவிதையை வாசிக்கக் கொடுத்திருந்தார்.

Aust vaagoy வட பகுதியிலுள்ள பல தீவுக் கூட்டங்கள் சேர்ந்த பகுதியில் மிகப் பெரிய தீவுப்பகுதி. பெரும்பான்மையான பிரதேசம் மலைகளால் சூழப்பட்டிருப்பதோடு பரந்த கடற்பரப்பையும் கொண்டதாகும்.

## சாம்பல் வானத்தில் மறையும் வைரவர்

# பதின்ம வயதின் அற அலைச்சல்

**அனோஜன் பாலகிருஷ்ணன்**




Post-war காலப் பகுதியில் வெளியாகிய பல்வேறு கதைகள் பெரும்பாலும் ஒத்த தன்மைகளைக் கொண்டிருப்பதை அவதானிக்க இயலும். பெரும்பாலான கதைகள் புலம்பெயர் தேசத்தில் இருக்கும் நாயகன் முன்னாள் போராளி ஒருவரைத் திருமணம் செய்ய இலங்கைக்கு வருவார் ஆனால், அவ்வீட்டுக்கு அருகிலிருக்கும் உள்ளூர்வாசியொருவர் பொறாமையில் அம்முன்னாள் போராளியைப்பற்றித் தவறாகச் சொல்ல நாயகன் அதனை நம்பி விட்டுவிட்டு மீண்டும் தான் வாழும் நாட்டுக்குச் செல்வார். (புலம்பெயர்ந்த நாம் உதவிசெய்ய வந்தாலும் உள்ளூர் வாசிகள் விடுவதில்லை என்ற தொனி அதிலிருக்கும்) இல்லையெனில் முன்னாள் போராளிகள் வெவ்வேறு விதமாகச் சமூகத்தினால் புறக்கணிக்கப்படுவதை மீண்டும், மீண்டும் தேய்வழக்குடன் கற்பனைவளமின்றி எழுதிக்கொண்டிருப்பார்கள். அதெல்லாம் இலங்கையில் வாழ்ந்த நிகழ்வுகளில் எஞ்சியதை வைத்து ஏதோவொரு கதையை எழுத முயல்வதாக இருக்கும்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் எழுத்தாளர்களிடம் எதிர்பார்ப்பது என்ன? அங்கிருக்கும் வாழ்க்கையை, புலம்பெயர்ந்து அந்நாட்டுப் பண்பாட்டுச்சூழலில் புகும்போது ஏற்படும் முரண் இயக்கங்களை வைத்துக்கொண்டு நுண்மைகளோடு எழுதப்படும் கதைகளைத்தான். ஆனால் அவ்வாறு எழுதப்படும் கதைகள் ஒப்பீட்டு அளவில் மிகக்குறைவானவை என்பதே உண்மை.

பத்திகளைச் சலிப்பில்லாமல் எழுதுவதற்குப் பெயர்போன இளங்கோ [டி.சே.தமிழன்] அபூர்வமாக எழுதிய புனைவுகளில் சிலவற்றை ஏற்கனவே முன்னம் வாசித்திருக்கின்றேன். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு இயல்பாக எழும் சிக்கல்களை வைத்து, பதின்ம வயதுகளில் புலம்பெயர்ந்த ஒருவனின் பார்வையில் நகரும் கதைகளாக அவையிருந்தன. இளங்கோவின் சாம்பல் வானத்தில் மறையும் வைரவர் புத்தகம் கைக்குக் கிடைத்தபோது ஆர்வமாகத் தட்டிப்பார்த்தேன். மொத்தம் பன்னிரண்டு கதைகள்.

‘கோபிகா ஏன் அப்படிச்செய்தாள்’ சிறுகதை நீண்ட நாட்களுக்குப் பின் நாட்டுக்கு வரும் ஒருவரின் பார்வையில் நகரும் கதை. நீண்ட நாட்களுக்குப்பின் தாய்நாடு வரும்போது ஒருவித மிதப்பான பார்வையில் புறச்சூழலை அவதானிக்கிறார் கதைசொல்லி. மச்சாள்காரி விழுந்து விழுந்து கவனிக்கின்றாள். அவளின் கணவர் சிவா இயக்கத்தில் இருந்துவிட்டு இடைவிலகி வந்தவர். அதற்குக் காரணமாகயிருக்கும் சம்பவம் சுவாரசியமானது. கோபிகாவைக் காதலித்த கபிலன் இயக்கத்துடன் தொடுப்பில் இருந்தவர். தனிப்பட்ட துரதிர்ஷ்டமான சம்பவத்தினால் ஏற்கனவே இயக்கம் மீது கடும் சினத்திலிருக்கும் கோபிகாவின் தகப்பன் வேறொருவருக்கு கோபிகாவை திருமணம் செய்துவைக்க முயல்கிறார். கோபத்தில் கிளர்ந்தெழுந்த கபிலன் தகப்பன் இல்லாத நேரம் கோபிகாவின் வீட்டில் புகுந்து கோபிகாவின் காலில் வெட்டி விடுகிறான். ஒரு காலில் மூன்று விரல்கள் செயலிழந்து விடுகின்றன. தடுக்க வந்த தாய்க்கும் வெட்டு. பிற்பாடு அவன் வன்னிக்குச் சென்று முற்றுமுழுதாக இயக்கத்துடன் இணைந்துவிடுகிறான். அங்குதான் கபிலனுக்கு சிவா அறிமுகமாகிறான். சிவாவுடன் நண்பனாக இருந்த கபிலன் சொல்லாமல் கொள்ளாமல் ஒருநாள் இயக்கத்தைச் சுழித்துவிட்டுப் படகேறி இந்தியா சென்றுவிடுகிறான். அந்தச் சம்பவத்தால் சிவா பங்கருக்குச் செல்ல நேர்கின்றது. அப்படியே இடைவிலகி இயக்கத்தைவிட்டு வந்தவர்தான் சிவா. இந்தியா சென்ற கபிலன் ஒரு பெண்ணோடு காதல்வயப்பட்டு அப்பெண்ணைக் கடத்த முயன்று மாட்டுப்பட்டு சிறைவாசம் சென்று இறுதியில் பம்பாய் சென்றுவிடுகிறான். இந்தக்கதைகளை கேள்விப்படும் கதை சொல்லிக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. அதைவிடப் பெரும் அதிர்ச்சிதரும் விடயத்தைக் கேள்விப்படுகிறான், அது கோபிகா ஒருநாள் கடிதம் எழுதிவிட்டு கபிலனை தேடிப்போய்விட்டாள்



என்பதே. அதை மட்டும் கதை சொல்லியால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. கதைக்குள் எங்கையோ ஒரு ஒருமை புதைந்திருக்கின்றது. அதை கண்டறியவே அவனால் முடியவில்லை. அந்த திகைப்பு புதிதாக வாங்குக்கு அடித்த வார்னிஷ் நிறப்பூச்சில் ஒட்டிய தூசு போல துடைத்தெறிய முடியாமல் இருக்கின்றது. கோபிகா ஏன் அப்படிச்செய்தாள் என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல் திணறும்போது மக்களும் இயக்கத்தை அவ்வாறு நேசித்திருப்பார்களோ என்று அவனுக்குத் தோன்றுகின்றது. நேசித்த இயக்கம் என்னதான் நேசித்தவர்களுக்கே துன்பம் தந்தாலும் இயக்கத்தை வெறுக்கவே இயலவில்லை. அதுவே தவிர்க்க இயலாத பொது மனநிலையாக இருக்கின்றது. வெறும் கதை சொல்லலால் நகரும் இக்கதை புறச்சூழல் வழியே கேள்விப்படும் கதைகளை அடுக்கி ஒரு புனைவாக எழுகிறது. கணவாய் கறியும் புட்டும் மாம்பழமும் சாப்பிட்டு ருசி காணும் சில நுண்மையான அவதானங்களோடு நகர்கின்றது.

‘பனி’ என்கின்ற கதை இத்தொகுப்பில் எனக்கு பிடித்த கதைகளில் ஆகச்சிறப்பானது. கனடாவுக்கு பதின்மவயதில் விசா இல்லாமல் குடியேறவரும் ஒருவனைப்பற்றிய கதை. சடகோபன் விசா இல்லாமல் கனடாவிற்கு வந்து நாட்டில் கடுமையான யுத்தம் என்று இமிகிரேஷன் அதிகாரிகளுக்கு முன் கையைத் தூக்குகிறார். அங்கிருந்து கனடா வாழ்க்கை அவருக்கு

ஆரம்பமாகிறது. வீட்டில் இரண்டு தங்கைச்சிகள், அவர்களை மறந்திடவேண்டாம் என்று அம்மா தினமும் நச்சரிப்பு. பாடசாலைக்குச் செல்வதும் பகுதிநேர வேலைகளுக்குச் செல்வதுமாக அவனது பொழுதுகள் நீளுகின்றன. எப்போதும் வேலையும் படிப்புமாக இருக்கும் அவனுக்குப் பிலிப்பைன்ஸ் வம்சாவளியைச் சேர்ந்த பெண் தோழியாக அறிமுகமாகிறாள். அவளுடனான ஊடல்கள் அவனுக்கு மகிழ்ச்சியையும் விடுதலையையும் தருகின்றன. எந்த நாட்டுப் பெட்டைகளுடனும் திரி; ஆனா, பிலிப்பைன்ஸ் நாட்டுக்காரி மட்டும் வேண்டாம் அவர்கள் நச்சரித்து உன்னிடம் இருக்கும் பணத்தையெல்லாம் கறந்துவிட்டுக் கழற்றி விடுவார்கள் என்று வழமையான தமிழ் மனநிலையில் உபதேசம் செய்கிறார்கள். அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் அவளுடன் இனிமையாக நாட்களைக் கழிக்கிறான். வாரத்தில் ஆறு நாட்களை குடும்பத்துக்கு உழைப்பதற்கும் மிகுதி ஒரு நாளை அவளுக்காகவும் ஒதுக்கி வைத்திருந்தான். இளமையின் தனிமைகளை வெற்றிடங்களை நிரப்பிக்கொள்ள பெண்வாசம் தேவையாக இருக்கின்றது. நிராகரிக்க முடியாத அடிப்படை மனித இயல்பாக அது இருக்கின்றது. இறுதியில் அவளின் உறவை இக்கதை ஆழமாக, புலம்பெயர் தேசத்தில் வாழ முனையும் தமிழ் மனநிலையை பேசுகின்றது. ஒவ்வாத தேசத்தில் கிடைக்கும் இன்பங்கள் பல இடங்களில் தேவையாக இருந்தாலும் அதை மறுக்கும், வெட்டும் இடங்கள் தமிழ் மனநிலை புனிதப்படுத்தும் இடங்கள். பிலிப்பைன்ஸ் நாட்டுக்காரியின் உடலும் முத்தமும் சுட்டெரிக்கும் காமத்தை ஈடுசெய்யத் தேவையாக இருக்கின்றது, அதே நேரம் அவளை மணமுடிக்கத் தமிழ்மனம் தடையாக இருக்கின்றது. திருமண உறவின் மூலமாகத் தமிழ்ப் பெண்ணின் யோனியே தமிழ் ஆணின் விறைத்த குறிக்குத் தேவையாக இருக்கின்றது. தன் தாய் நாட்டில் இருக்கும் ஒரு பெண்ணைத் தேடி அலையும் அவன் மனம், அது கிடைக்கும்போது அனைத்தையும் அடைந்துவிட்டதாக நினைக்கின்றது.

சுகந்தி விவாகரத்துக் கேட்கும்போது தன் காதல்கதையைச் சொல்கிறாள். “அப்படியெனில் ஏன் என்னை விருப்பம் இல்லாமல் கலியாணம் செய்தனீர்?” என்று திரும்பிக் கேட்கும்போது, எல்லாம் மறந்திடலாம் என்று நினைச்சன். ஆனால், முடியவில்லை என்ற இலகுவான ஒரு பதிலைச் சொல்கிறாள். அப்ப இதற்கெல்லாம் நானா பலியாடு என்று சடகோபன் கத்துகிறான். சக மனிதன் பற்றி

**தமிழர்கள் சோற்றுக்கு வழியில்லாவிட்டாலும் உளவுபார்க்காமல் உயிர்வாழ மாட்டார்கள் என்று குறிப்பிடப்படும் இடங்கள் கூர்மையான நகைச்சுவையை உணர்விக்கும் இடங்கள்.**

இவனே வெட்டிவிட வேண்டியதாகின்றது. காலம் செல்லச்செல்ல பொருளாதாரம் விரிய தங்கச்சிமாருக்குத் திருமணம் செய்து தன் மீது சுமத்தப்பட்ட பொறுப்புகளைக் களைகிறான். இலங்கையில் இருந்து வரும் சுகந்தி என்ற பெண்ணோடு அவனுக்கும் திருமணம் நிகழ்கிறது. திருமணத்திற்கு பிறகு அவனது வாழ்க்கை ஒரு நிலையான நிலைக்கு வரும் என்று எதிர்வு கூறியபோதும், அது முற்றிலும் சிதைகின்றது. சுகந்திக்கு இலங்கையில் இறுக்கமான காதல் இருந்தது, அதிலிருந்து வலுக்கட்டாயமாகப் பிடுங்கி எறியப்பட்ட தாபங்கள் இன்னும் ஓயாமல் இருக்கின்றது. உடலுறவில் இருந்து அனைத்துச் செயற்பாடுகளிலும் அவளது வெறுப்பு கசிகிறது. ஒரு கட்டத்தில் அவள் இவனிடம் இருந்து விவாகரத்துப் பெற்று இலங்கைக்கே சென்று விடுகிறாள். வேகமாகச் சிதையும் அவனது உளவியல் மனப்பிறழ்வுக்குக் கொண்டு செல்கின்றது.

அக்கறை கொள்ளாத ஆதிப் பண்பான மனித இயல்பு வெளிப்படும் தருணம் அது. அந்த நேரத்தில் அவனுக்கு “என்னைக் கலியாணம் செய்யும்போது சுகந்தி வெர்ஜின் இல்லையா?” என்ற கேள்வி எழுகிறது. தமிழ் மனநிலையை ஒளிபாய்ச்சிக் காட்டும் இடங்களவை.

‘கொட்டியா’ என்ற சிறுகதை கொழும்பில் வெளிநாடு செல்வதற்காகத் தங்கி நிற்கின்ற பொடியனைப் பற்றிய கதை. யுத்தம் வடபகுதியில் தீயாக எரிகிறது. கொழும்பிலும் தாறுமாறாகக் குண்டுகள் வெடிக்கின்றன. தமிழர்கள் தங்கியிருக்கும் இடங்களெல்லாம் ராணுவம் திடீர்...திடீர் பரிசோதனைகளைச் செய்கின்றது. அச்சமயம் அறையொன்றில் தங்கியிருக்கும் பதின்ம வயதுப் பொடியனின் அனுபவங்கள்தான் கதை. ஒரு முறை சோதனைக்கு வரும் இராணுவச் சிப்பாய் நித்திரையில் இருந்த இவனை எழுப்பும்போது இவனின் குறியைப் பிடித்துவிடுகின்றான். எப்படி

**ஒரு சம்பவத்தை உண்மையாக நிகழ்ந்ததை அச்சொட்டாக அப்படியே எழுதுபவர் புனைவு எழுத்தாளரே அல்ல. அது அவரது வேலையும் அல்ல.**

அவன் இதைப் பிடிக்கலாம்? என்ற திடுக்கிடல் அரியண்டமாக அவனைக் கொல்கின்றது. கதை வளர்ந்து செல்லும்போது அதிலிருந்து விலகிப் பெண்களின் மனதைப் பேசும் ஒரு கதையாக முடிவில் எஞ்சுகின்றது.

தமிழர்கள் சோற்றுக்கு வழியில்லாவிட்டாலும் உளவுபார்க்காமல் உயிர்வாழ மாட்டார்கள் என்று குறிப்பிடப்படும் இடங்கள் கூர்மையான நகைச்சுவையை உணர்விக்கும் இடங்கள். புறநிலைத் தகவல்களில் குறிக்கப்பட்டிருக்கும் அரசியல் கிண்டல்கள், தமிழர்களின் பாரம்பரியங்களைக் கிண்டல் செய்யும் இடங்கள் அனைத்தும் கதையைச் சுவாரஸ்யம் குன்றாமல் வாசிக்க வைக்கின்றது. இக்கதையின் கூறு முறையில் இருக்கும் சிக்கல் கதையின் போக்கைச் சாதாரண டெம்பிளேட் கதையாக மாற்றிவிடுகின்றது. கதையின் ஆரம்பத்தில் இராணுவ வீரன் அவனது குறியைத் தடவியதும், அவனது சிங்களக் காதலி அவனுடைய குறியைத் தடவிக் கசப்பான அனுபவத்தை இன்பமாக மாற்றுவதோடு அச்சித்திரிப்புகள் ஓய்ந்துவிடுகின்றன. கதையின் உச்சக்கட்டத்தை நோக்கி நகர்த்திச்செல்ல அச்சித்திரிப்பு உதவவில்லை. அதே இறுதிவரையான கதையின் போக்கைத் தீர்மானிக்கும் குவிவு மையமாக இருந்திருந்தால் இக்கதை சிறப்பான கதையாகியிருக்கும்.

'மூன்றுதீவுகள்' கதையும் சாதாரண டெம்பிளேட் வகையில் சிக்கி வெற்றுவார்த்தைகளாக இறுதியில் எஞ்சும் கதையாக மாறிவிடுகின்றது. ஒரு புதுவித நிலப்பரப்பில் சந்திக்கும் மனிதர்கள், அவர்களின் இரகசியத்தை ஒரு புள்ளியில் விளங்கிக்கொள்ளுதல், பின் வலிந்த முடிவு என்று நகருகின்றது.

பொதுவான இளங்கோவின் கதைகள் அதிகம் நுண்தகவல்களைக் கதைகளோடு சொல்கிறது. புறவயமான சித்திரிப்புகள் தமிழ் மனநிலையைப் பகிடி செய்துகொண்டு முன்னே நகருகின்றது. அகவயமான சித்திரிப்புகள் கதைகளில் இல்லை. அவற்றை ஆழமாகப் பேச எந்தக்கதைகளும் அதிகம் மினக்கெடவில்லை. விதிவிலக்காகக் 'கள்ளி' கதை. வழக்கமாக இலங்கை எழுத்தாளர்கள் எழுதும் குடும்பச் சித்திரத்தை, அல்லது வெற்று அரசியல் கோஷத்தை நோக்கிச் செல்லாமல் கனடிய/ அந்நிய புலம்பெயர் தேச வாழ்க்கைச் சூழலை நோக்கிச் சென்றிருப்பது ஒரு முக்கியமான இலக்கியக்கூறு. அ.முத்துலிங்கம் எழுதிக்காட்டிய புலம்பெயர் மக்களின் வாழ்க்கை அதிகம் பிளாஸ்டிக்தனம் கொண்டது. அங்கு இயல்பான இலங்கையர் ஒருவரைக் காண இயலாது. படித்த மேட்டிமைத்தனம் வாய்த்த ஒருவரையே நோக்க இயலும். இளங்கோவின் கதையில் உள்ள இலங்கையன் யாழ்ப்பாணத் தமிழ் மனநிலையில் இருந்து கொண்டு அங்கு எழும் காமம்,குரோதம் அதில் மறைந்து எங்கோ ஓர் இடத்தில் மேலெழும் அறத்தின் வெளிப்பாட்டில் தத்தளிப்பவன்.

ஒரு சம்பவத்தை உண்மையாக நிகழ்ந்ததை அச்சொட்டாக அப்படியே எழுதுபவர் புனைவு எழுத்தாளரே அல்ல. அது அவரது வேலையும் அல்ல. அவர் முழுக்கமுழுக்கக் கற்பனையால் ஓர் உலகத்தைப்படைத்து மெய்நிகர் வாழ்க்கையைக் காட்டும்போதுதான் அது நிகழும். அத்தகைய கற்பனைத் திறன் இக்கதைகளில் இருக்கின்றன என்பதும் உண்மை.

சிக்கல் இல்லாமல் இயல்பான மொழி நடையுடன், அயர்ச்சியைத் தூண்டாது எழுதப்பட்டுள்ளன இக்கதைகள். ஆனால்,உத்திகளில் இருக்கும் வெற்றிடம் பழைமையானது. ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் சித்திரித்து அவர்களுக்கு இடையில் எழும் பிணக்குகளைத் தொடர்புபடுத்தும் முறையிலிருந்து இளங்கோ வெளிவரலாம். ஆயினும், நிகழ்வுகளிலிருந்து நினைவுகளுக்குச் சென்று அதன் உட்குறிப்புகளை உணர்த்திவிட்டு மீண்டும் வருதல் என்னும் சில உத்திகள் சிறப்பாக இக்கதைகளில் அமைந்துள்ளன. நம்பகமான ஒரு வாழ்க்கைச் சித்திரத்தை அளிப்பது இக்கதைகளில் நிகழ்ந்துள்ளது. அதனாலேயே இலங்கைச் சிறுகதைகள் என்ற அளவில் இக்கதைகள் நிச்சயம் வாசிக்கப்பட வேண்டியவையாக இருக்கின்றன.

●

# யசோதராவெனப்படும் இரண்டு காதல் கவிதைகள்

**அசரீரி**

*01.*

*தொக்கி நிற்கவென இடப்படும்*
*மூன்று புள்ளிகளுக்குள்ளிருந்து*
*முடிவுறாத கவிதையின் அர்த்தங்கள் சிதறுகின்றன*

*தன் பற்றியெழுதப்படாத கவிதையெனைக் கோபங்கொண்டு பிடுங்கிய*
*தலைமயிரொன்றால் என்னைக் கட்டி வைக்கிறாள் யசோதரா*

*என் மார்பின் பூனை ரோமங்கள் மொத்தமும்*
*பாம்பு போல அதனோடு ஒட்டிப் பிணைந்து கொள்கின்றன*

*பிறகு வழக்கம் போல*
*அவளை அதே பெயரறியாத நாணமெனவும்*
*நான் என்பதை பின்னாலிருந்து அணைக்கும்*
*ராட்சதக் காற்றெனவும்*
*இரவு பெயரிட்டுக் கொள்கிறது*

*மூன்று வெவ்வேறு நிறைவுற்ற புள்ளிகள்*
*அர்த்தங்களை முடிவிலியென அறிவிக்கும் அபத்தமே*
*கவிதையெனச் சொல்லிவிடுவதினின்றும்*
*தலைமயிரின் சுகம் இனிது*

*நானெனப்படுவது கவிதை;*
*கவிதையெனப்படுவது உண்மையை மறைப்பது,*
*பின்*
*அதில் சுகிப்பது.*

*இரவின் முடிவில்*
*ஒரு பூ வளையமெனத் தன்னை சுற்றியிருக்கச் செய்து*
*சத்தமாகப் பாட்டிசைக்கிறது நான்*

*தூய அர்த்தமாகிய யசோதரா*
*என் இசையில் மெல்லக் கரைந்து*
*காற்றெங்கும் அத்தர் போல மணக்கிறாள்*

அசரீரி

*02.*

*முத்தங்களின்றி வரண்ட காடொன்றினை*
*வரைந்து முடித்த வேளை*
*தீர்ந்து போன உஷ்ணத்துக்கான நிறங்களை*
*தன் சிவந்த உதடு கொண்டு வரைந்து வைக்கிறாள் யசோதரா*

*ஓவியத்தில் புத்தமும் துறவும் சூழ்ந்திருந்த*
*காடும் மலைகளும் தீப்பற்றி எரிகின்றன*

*வெறுமையாக விடப்பட்ட இறுதித்தாளின் அமைதியென*
*அர்த்தங்கள் துண்டு துண்டாகச் சிதறுகின்றன அப்போது*


*சொற்களைப்போல அவை எரிந்தெல்லாம் தீர்வதில்லை*

*கோபம் தீராத யசோதராவின் இடது கழுத்து மடிப்பில்*
*ஒரு நதியினளவு இடைவெளியை*
*ஒர் ஒற்றைத் தலைமுடி வரைகிறது.*

*நான் என்பது இனி என்னை நீந்திக் கடக்கும் நதியே அதுவெனச் சொன்னபடி*
*முடிவிலி அர்த்தங்களின் மூன்று புள்ளிகளாக விழுகிறது*
*கவிதைக்குள்ளிருந்து திடீரெனச் சிறகடித்த ஒரு புதுச் சொல்.*

# மக்காத பிளாஸ்ரிக் : சாதிய நச்சு

சி.புஷ்பராணி



முப்பது ஆண்டுகளுக்கு மேல், என் நாட்டில் வாழும்போது, நான் சந்திக்காத சாதி ரீதியான சுடுசொற்களை, இந்தப் புலம்பெயர் தேசத்தில் வாழும், ஈழத்தமிழ் இளைஞர்கள் மூலம் கேட்டுக் கொதித்துப் போயிருக்கின்றேன். இலங்கையில் வாழும்போது, சின்ன வயதில் பள்ளியில் படிக்கும் காலத்தில், என்னையொத்த சிறுமிகளுடன், என் சாதிப்பெயர் சொல்லிப் பழித்து விட்டார்கள் என்று நானுமவர்கள் சாதிசொல்லி மல்லுக்கட்டிச் சண்டைபிடித்திருக்கின்றேன். அது விபரம் தெரியாத பருவம். வளர்ந்தபின் என்னை யாரும் நேரடியாகச் சாதி கூறி இழித்துரைத்ததில்லை. மனதுக்குள் சாதி வெறியை வைத்துக்கொண்டு, முதுகுக்குப் பின்னால்தான், எங்கள் காது படாமல், தங்களுக்குள் பேசிக் கறுவியிருக்கின்றார்கள், முகத்துக்கு நேரே யாரும் கை நீட்டிப் பேச நாங்கள் இடம் கொடுத்ததேயில்லை

நாகரீகம் மிக்க...பல மொழிகள் பேசும், பல்லின மக்கள் வசிக்கும் இந்த பிரான்சிலும் இலண்டனிலும் குடியிருக்கும் சிலர்,முகநூலில் என்னைச் சாதியின் பெயரால் இழிவுபடுத்தி, ஏக வசனங்களில் எழுதிக் கொதிப்படைய வைத்ததை என்றென்றைக்கும்

என்னால் மறக்க முடியாது. அதுவும்,இளைஞர்கள் இவர்கள்.

ஏதோ,இவர்களின் பணத்தில் நாம் வெளிநாட்டுக்கு வந்ததுபோல, 'இந்த எளிய சாதிகளை, வெளிநாட்டுக்கு வரவிட்டது எமது பிழை. ஊரில் எம்மைக் கண்டால், குனிந்து வணங்குபவர்கள் வெளிநாட்டுக்கு வந்தவுடன் பெரிய ஆட்கள் ஆகிவிட்டினம்' என்று கூட எழுதினார்கள். எவ்வளவு சாதித்திமிர் தெறிக்கும் வார்த்தைகளிவை!

'எம்மிடையே நிலவிய சாதியென்ற ஒன்று என்றோ அழிந்துவிட்டது, இல்லாத ஒன்றை இருப்பதாகக் காட்டி, நீங்கள்தான் சாதியை நிலைநாட்ட முனைகிறீர்கள்' என்றும் சிலர் சொல்லித் திரிவது இந்த நூற்றாண்டின் பெரிய பகிடியாகும். இப்படிக் கூறுபவர்களே பல இடங்களில் தாங்கள் உயர்குடியில் பிறந்தோர் என்று படிக்க முடியாதளவுக்கு நிரம்பி வழியும். அவைபற்றி எழுத ஆயிரம் பக்கங்களும் போதாது.

ஒடுக்கப்பட்டோர் பல வழிகளிலும் போராடிப் போராடி முன்னேறி விட்டதாலும், அவர்களின் தீர்க்கமான போர்க் குணத்தாலும் பல உரிமைகளைப் பெற்றிருக்கின்றார்களேயொழிய, ஆதிக்கசாதியினர் எனப்படுவோர் எதையும் கிள்ளிக் கூடக்கொடுக்கவில்லை, இன்னமும், எம்மவர் மத்தியிலே நிலவும் சாதிவெறியின் அகோரம் கொஞ்சம் கூடத் தணியவில்லையே. அது நாம் வாழும் ஐரோப்பிய நாடுகளில் கூட தமிழர்களிடையில் தீவிரமடைவதையல்லவா கேள்விப்படும் செய்திகள் நெருப்பாக அள்ளிக் கொட்டுகின்றன.

சில மாதங்களின் முன்பு கேள்விப்பட்ட செய்தி, ஃபேஸ்புக்கில் பகிரப்பட்ட செய்தி, யாழ்ப்பாணத்தில் ஓர் இந்துக்கோவிலில், தாழ்த்தப்பட்ட இனத்தைச்

**அவர்களோடு, பழகுங்கள் பிரச்சனையில்லை ஆனால் காதலித்து விடாதீர்கள்,ஊரில் இவர்களையெல்லாம், வீட்டு வாசல்படிக்கே ஏத்தமாட்டோம்**

மறைமுகமாகவும்,தங்களையறியாமலும், பதிவுகள் போட்டுத் தங்களை நிரூபித்து விட்டார்கள்.

கலாச்சாரம், மதம் என்ற போர்வைக்குள் மறைந்து, எம்மவர்கள் வாழும் நாடுகளுக்கெல்லாம் கடத்தப் பட்டிருப்பதில் முதன்மை வகிப்பது, 'சாதி'. தன் சாதியை மறைப்பதற்காக, சாதியென்பது எங்கே இருக்கின்றது? என்று வாயளவில் சொல்வோர் பின்னே, நிழலாக ஒட்டிக்கொண்டிருக்கும், ஒருவர், முகநூலின் உட் பெட்டிக்குள் வந்து' இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சாதிப்பாகுபாடுகளை உடனடியாக மாற்ற முடியாது அது மெல்லத்தான் போகும்' என்கிறார் மெல்ல... மெல்ல என்றால் எப்போ? உலகில் மனித இனமே அழிந்த பிறகா? சாதியென்பதை அழிப்பது முடியாத காரியம் என்பதை ஒப்புக் கொள்வதில், ஏன் இந்த வழுவழுப்பு?

இந்து மதத்தினால் புகுத்தப்பட்ட வர்ணாச்சிரமப் படிமுறைகளிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட தீண்டாமைக்கொடுமைகள் பல்வேறு வடிவங்களில் எப்படியெல்லாம் ஒடுக்கப்பட்டோரை நசுக்கி இழிவுபடுத்திக் கொண்டேயிருக்கின்றன என்பதை விளக்க ஆதாரங்களைக் குவித்தால் அவை நீங்கள் சேர்ந்தோர் தேர் இழுக்கக் கூடாது என்ற இழுபறியில் இராணுவம் தலையிட்டு, இராணுவத்தினர் அத்தேரை இழுத்தனர். சொந்த ஊரவர்கள் தொட்டு இழுக்கக்கூடாத தேர் அப்படியாக இழுபட்டது. இது இந்த 2016 இல் தான் நடந்தது. வடமராட்சியில் உள்ள இன்னொரு இந்துக்கோவிலில், ஒடுக்கப்பட்டோர் நுழைந்து தேரைத் தொடக்கூடாது என்பததற்காக முள்வேலி போட்டு அடைக்கப்பட்டுள்ளது. யாழ் குடாநாட்டின் தென்மராட்சிப் பிரதேசமான வரணியிலுள்ள, சுட்டிபுரம் அம்மன் கோவிலில் தாழ்த்தப்பட்டோர் தேர் வடம் பிடித்து இழுத்ததால் நடைபெற்ற மோதலின்பின் 20 வருடங்கள் பூட்டிவைக்கப்பட்டு மீண்டும் திறக்கப்பட்டாலும், ஆதிக்க சாதியினரின் ஆதிக்கமே இப்போதும் அங்கு நடைபெறுகின்றது. இவையெல்லாம் 1950 களிலோ 1960 களிலோ நடந்தேறவில்லை. இப்போதுதான் நடந்திருக்கின்றன.

மனிதரைக் கடைசியில் கொண்டுபோய் எரிக்கும், சுடுகாட்டில்கூட சாதிபேதம் யாழ்ப்பாணப் பகுதியில் இருப்பதாக அறிந்தேன். தனியான அலங்காரப் பாடையும், தனிப்பாதையும் இருப்பது மேலதிக வெட்கக்கேடான தகவல். இறுதி யுத்தத்தின்

போது தப்பி வந்தோரிடையே கூடச் சாதித் துவேசம் இருந்ததைப் பலரும் எழுதியுள்ளார்கள். தப்பிவரும்போது, பல இடங்களில் தங்கி வரும்போது நடந்த ஒரு சம்பவம் காறித்துப்ப வைக்கின்றது

ஓரிடத்தில் பலசாதிப் பிரிவுகளுக்குள் அடங்குவோர், தங்கி உணவு சமைத்து இளைப்பாறியிருக்கின்றனர். அங்கிருந்த கிணறு ஆதிக்கசாதியான ஒருவருடையதாம். இக்கிணற்றில் அங்கிருந்தோர் அனைவரும் தண்ணீர் அள்ளிப் பாவித்துள்ளனர். இதைப் பொறுக்காத யாரோ இறந்த பூனையொன்றைக் கிணற்றுக்குள் போட்டுவிட்டாராம். இப்படி எத்தனை கதைகள்? சாதியென்றாலே என்னவென்று தெரியாத புகலிடம் வாழும் குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் எம்மிடையேயுள்ள சாதிப்பிரிவுகள் பற்றிச் சொல்லிச் சொல்லியே வளர்க்கின்றார்கள். இலண்டனில் வசிக்கும் என் தங்கையொருத்தியின் மகன், தாயிடம் வந்து ‘அம்மா சதி என்றால் என்ன?’ என்று கேட்டிருக்கின்றான். என் தங்கைக்கு உடனே விளங்கிவிட்டது இவன் சாதிபற்றித்தான் கேட்கின்றான். ‘ஏன் கேட்கின்றாய்?’ என்று தாய் வினவ, ‘என்னோடு படிக்கும் ஒரு பிரெண்டு கேட்டவ, நீ என்ன சதியென்று’ இது மகனின் பதில் இப்படிச் சாதி பற்றி விளக்கும் பெற்றோர்களால் இங்கு பிறந்த பிள்ளைகள் ஒன்றும் புரியாமல் குழம்பித் தவிக்கின்றனர்.

தங்கள் பிள்ளைகள் வேறு பிள்ளைகளோடு பழகும்போது, அந்தப் பிள்ளைகளின் குலம்-கோத்திரத்தை எப்படியோ மோப்பம் பிடித்து ‘அவர்களோடு, பழகுங்கள் பிரச்சனையில்லை ஆனால் காதலித்து விடாதீர்கள்,ஊரில் இவர்களையெல்லாம், வீட்டு வாசல்படிக்கே ஏத்தமாட்டோம்’ என்று பிள்ளைகள் மனதிலும் நஞ்சையேற்றுகின்றார்கள் புலம்பெயர்ந்து வந்தும் சாதித்திமிர் அடங்காதோர்.

இதை எழுதிக் கொண்டிருக்கும்போது எனக்குக் கிடைத்த செய்தியொன்று, இலண்டனிலிருந்து கனடாவுக்குக் குடியேறிய இரு குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு பெண் பிள்ளைகள் விடுமுறையில் இப்போது இலண்டனுக்கு வந்திருக்கின்றார்கள். இரண்டுபேரும், என் தங்கையின் மகளோடு முன்பு படித்தவர்கள். இதில் ஒரு பெண்பிள்ளை தன் உறவினர் வீட்டிலும், ஏனையவர் என்தங்கையின் மகளோடும் தங்கினர். உறவினர் வீட்டில் தங்கிய நண்பியை வீட்டுக்கு வரும்படி தங்கைமகள் கூப்பிட்டிருக்கின்றாள் பிறகு வருவதாகச் சொன்ன அந்த நண்பி வரவேயில்லையாம். ‘குறைந்த சாதி ஆட்கள் வீட்டுக்குப் போகவேண்டாம்’ என்று உறவினர்கள் அந்தப் பிள்ளையைத் தடுத்ததாக என் தங்கை மகள் பின்னர் அறிந்தாள்.இப்போது சாதி ஒழிந்து விட்டது என்போரே கேட்கின்றதா இவையெல்லாம்.

இலண்டன் பல்கலைக் கழகத்தில் படிக்கும் தமிழ் மாணவர்கள் சாதியறிந்த பின்னரே காதலில் இறங்குவார்களாம். அந்தளவுக்குப் பெற்றோரால் புடம் போடப்பட்டுள்ளார்கள். இதை உறுதிப்படுத்தி எனக்குச் சொன்னவர்கள் இலண்டனிலுள்ள வெவ்வேறு பல்கலைக் கழகங்களில் படிக்கும் என் உறவினர்களின் மகள்கள்.

அந்தக் காலத்தில் போராட வந்த பழைய போராளிகள் பற்றியும் இப்போது நினைத்துப் பார்க்கின்றேன். பலர் தாம் தங்கிய, பழகிய வீட்டுப் பெண்பிள்ளைகளைக் காதலித்துத் திருமணம் செய்துள்ளனர். அட! எல்லோரும் உயர் குலத்தோராம், இவர்கள் காதலித்துக் கைப்பிடித்தோரும் அதேதான் அது எப்படி? குழம்புகின்றேன்.

எங்களோடு பழகிய பழைய போராளிப் பெண்ணொருவரும், [இவர் ஒடுக்கப்பட்ட இனத்தில் பிறந்தவர்] ஆதிக்கசாதியில் பிறந்த ஆரம்பப்போராளிகளில் ஒருவரும் காதலித்து,தமிழ் அரசியல் தலைவர்களின் தலைமையில் திருமணம் செய்தவர்கள். கொஞ்ச நாட்களுக்குமுன் கணவர் மாற்று இயக்கத்தாரால் கொல்லப்பட்டார். .அந்தப் பெண்ணும், பிள்ளைகளும் வடபகுதியிலேயே இப்போது வசிக்கின்றனர். சமீபத்தில் அந்தப் பெண்ணின் உறவினப் பெண்ணொருவரோடு தொலைபேசியில் பேசும் வாய்ப்புக் கிடைத்தது அந்தத் தோழி பற்றி விசாரித்தேன். அவர் சொன்ன தகவலை இன்னும் என்னால் நம்பமுடியவில்லை. ‘அவ இப்போது எங்களுடன் பேசுவதில்லை. பிள்ளைகளையும் எம்மோடு பழக விடுவதில்லை. உயர் சாதித் தகப்பனுக்குப் பிறந்த தன் பிள்ளைகளை எங்களோடு கொண்டாட விடுவதில் தனக்கு விருப்பமில்லையென்று மறைமுகமாகச் சொன்னவ’ அந்தப் பிள்ளைகளும் தகப்பனின் உறவினர்களுடன்தான் உறவாடுகின்றார்கள். பிள்ளைகள் எல்லோரும் உயர் பதவிகளில் இருப்பதால் இது சாத்தியப்படுகின்றது’ என்றும் அந்தப் பெண் கூறினார் மனிதர்கள் இப்படியும் மாறுவார்களா?

அண்மையில் நடந்ததொன்றை இங்கு நான் குறிப்பிட்டே ஆகவேண்டும். இது பிரான்சில் நடந்தது. பாரிஸில் வானொலி, ஃபேஸ்புக், கூட்டங்கள் எனத் தானொரு சமூக அக்கறையாளரான பெண் என்ற அடையாளம் கொண்டவராக பேசுபவர். நண்பர் ஒருவரின் தாயின் மரணசடங்கின் நிகழ்வுக்கு வந்திருந்தார். ஃபிரான்சில் இருக்கும் என் தங்கையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தாள்.என் தங்கையிடம் இவர் பேசிக்கொண்டிருக்கும்போது, ‘உங்கள் அக்கா தன் சாதியை ஏன் பகிரங்கமாகச்

சொல்கின்றா? 'என்று கேட்டிருக்கின்றார். இதற்கு என் தங்கை ஏதோ கடுப்பாகப் பதில் சொல்லி-யிருக்கின்றாள். எழுந்து முன் வரிசைக்குப் போன இந்தப் பெண்ணிடம், வேறொரு பெண், 'என்ன பிரச்சினை ?' என்று கேட்க, 'அவ சாதியிலை குறைஞ்சவ அதுதான் அவவுக்கு உடனே கோபம் வந்துவிட்டது' இவர் கூறியது என் தங்கைக்குக் கேட்டுவிட்டது. கோபத்தில் என் தங்கை 'என்ன சொல்கின்றாய்?' என்று கொஞ்சம் கத்தியிருக்கின்றாள். 'ஐயோ கோபிக்காதேங்கோ, எங்கள் தாய் தகப்பன் சொல்லி வளர்த்ததால் என்னையறியாமல் வாயில் வந்து விட்டது' என்று இவர் தடுமாறியிருக்கின்றார். பொது வெளிக்கு வந்து இயங்கும் இந்தப் பெண்ணுக்கே சாதியம் இரத்தத்தில் ஊறியிருந்திருக்கின்றதே.

இன்னுமொரு சம்பவம் இதுவும் மிகச் சமீபத்தில் தான் நான் நன்கறிந்த குடும்பத்தில் நடந்தது. ஆதிக்கசாதியைச் சேர்ந்த ஆரம்பப் போராளிகளில் ஒருவரின் மகனுக்கும், ஒடுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெண்ணுக்கும் திருமணம் நடந்தது. மணமக்கள் இருவரும் பல்கலைக் கழகப்படிப்பை முடித்து உயர் பதவிகளில் இருக்கின்றார்கள். இது ஒரு காதல் திருமணம். திருமண நிகழ்வின்போது மணமகனின் பெற்றோர் மகிழ்ச்சியுடன் இருக்கவில்லையென்பதை அறிந்தேன். மகனின் பிடிவாதத்தாலேயே திருமணம் நடைபெற்றிருக்கின்றது. இந்தக் கல்யாணத்துக்கு மாப்பிள்ளையின் உறவினர்கள் பெரும்பாலும் வரவில்லை.

இவர்களின் இன்னோர் மகன் மணமுடித்தது ஆபிரிக்கப் பெண்ணை. இதில் தவறேதும் நான் காணவில்லை. ஆனால் மணமகனின் தாய், வேறொருவரிடம் சொல்லி வருந்தியதுதான் இங்கு முக்கியமானது, 'ஆபிரிக்கப் பெண்ணை மூத்தவன் கட்டியது பிரச்சினையில்லை அதில் சாதி என்ற பேச்சுக்கே இடமில்லை. சொந்தக்காரரர்களும் எதுவும் கூறவில்லை. ஆனால் இவன் போய் ஊரில் நாங்கள் புழங்காத,குறைஞ்ச சாதியிலை கல்யாணம் செய்து எங்கடை, இனசனத்துக்கு முன்னால், தலைகுனிய வைச்சு விட்டானே' என்று அவர் பெரிதும் கவலைப்பட்டாராம். இப்படி, ஆதிக்க சாதியினரின் சாதிச் செருக்கு ஒரு புறமென்றால்,ஒடுக்கப்பட்டோர் சிலர் பரவசமடையும் கேவலமும் இன்னொரு வளத்தால் இருக்கிறது. எங்களுக்குத் தெரிந்த ஒருவரின் மகளுக்கு, விரைவில் திருமணம் நடைபெறவிருக்கின்றது. பெண்ணின் தாயிடம், 'மாப்பிள்ளை யார்?' என்று சாதாரணமாகக் கேட்டேன். 'அவர்கள் மற்ற ஆட்கள்' என்று, ஒருவிதச் சிரிப்புடன் அந்தப்பெண் சொன்னார்' அப்படியென்றால்' என்று நான் இழுத்தேன். 'வெ' என்று மலர்ச்சியோடு [அதையும் முழுதாகச் சொல்லவில்லை ] என்னைப்பார்த்தார் அந்தப்பெண். எனக்குப் புரிந்துவிட்டது மாப்பிள்ளைப்பகுதி வெள்ளாளர்! எங்களை விட அவர்கள் உயர்ந்தவர்கள் என்ற ஒருவித அடிமைப்புத்தியே இந்த மகிழ்வுக்குக் காரணம்.

நானும் ஓர் ஒடுக்கப்பட்ட இனத்தில் பிறந்தவள் என்பதால், இந்தக் கேடு கெட்ட குதூகலத்தை வெறுப்போடு பார்க்கின்றேன். ஆதிக்க சாதியைச் சேர்ந்தவர்கள் தமது சாதியை உரக்கச்சொல்லுதல், அகங்காரத் தம்பட்டம் என்றால், ஒடுக்கப்பட்டோர் தம் சாதியைப் பகிரங்கமாகக் கூறுதல் 'நாம் எவருக்கும் குறைந்தவர்களில்லை' என்ற செருக்கோடு, தீண்டாமையை மறுத்துரைத்தல். இது ஏன் இத்தகையோருக்குப் புரிய மாட்டேனென்கின்றது?

வடபகுதியில் காணி வாங்கவோ, விற்கவோ போனால் கூட அங்கே சாதி தலை தூக்குவதாய் என் தோழியொருவர் சொல்லக் கேட்டேன். என் தோழியின் தாய் தன் காணியில் ஒரு பகுதியை. ஒடுக்கப்பட்ட இனத்தவர் ஒருவருக்கு விற்க முனைந்தபோது, அயலிலுள்ளோர் குறைந்த சாதியினருக்கு விற்கக் கூடாது என்று தடுத்துவிட்டார்களாம். இது நடந்தது சில மாதங்களுக்கு முன்பு தான்.

என் வீட்டுக்குக் கொஞ்சம் தள்ளிவசிக்கும் வீட்டில் ஒரு சம்பவம். அவர்களின் மகள் தன் பதினெட்டாவது வயதில். வீட்டுக்குத் தெரியாமல் தான் காதலித்த பையனுடன் போய்விட்டாள். தாய் குய்யோ முறையோ என்று ஆர்ப்பாட்டம் செய்து உறவினர்களை வீட்டுக்கு அழைத்தாயிற்று. வந்த பெண்கள் தாயைத் தேற்றினார்கள் இப்படி சரி சரி கவலைப்படாதே. அவள் என்ன நளவன்,பள்ளனுடன் போகவில்லையே எங்கடை சாதிப் பெடியனோடு தானே (வெள்ளாளன்) போயிருக்கின்றாள்.

ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக வந்து வாழும் எம்மவர் மத்தியில் நிகழும் இது போன்ற நிறைய விபரங்களை வரிசையாகச் சொல்லிக்கொண்டே போகலாம். எனக்கு அலுப்புத் தட்டுகின்றது. ஆற்றாமை பொங்குகின்றது. சினம் ஏற்படுகின்றது.

மக்கும் தன்மையற்ற பிளாஸ்டிக்கினால் வரும் தீங்குகளை விளக்கி உலகெங்கும் பிளாஸ்டிக் பாவனைக்குத் தடை கூடிக்கொண்டே போகின்றது. ஆனால் ஒரு காலத்தில் இந்தப் பிளாஸ்டிக்கை உருத்தெரியாமல் அழிக்கும் முறை ஏதாவது கண்டுபிடிக்கப் படலாம் ஆயினும் கூட இந்தச் சாதியை இன்னும் பல ஆயிரம் வருடங்கள் சென்றாலும், அழிக்கவே முடியாது. அது முடியக்கூடிய காரியமுமில்லை.

●

கருணாகரன்

01 *நீங்கள் கொண்டு வந்த உப்பையே*
*இன்று கடலில் கரைத்தேன்*

*தலைமுழுகி எழும்போது*
*கதகதக்கும்*
*உங்கள் மடியாகியிருந்தது கடல்*

*முன்னோர்களின் நிழலாடக் காக்கைகள் பறந்தன*

*அத்துவானத்தில் நிர்மலம்*

02. *நடந்து கொண்டிருக்கும்போது*
*சிங்கத்தின் நினைவு குறுக்கே சென்றது*
*ஒரு கணம் தாமதித்தேன்*
*கடந்து செல்கிறது முயல்*
*முந்திச் சென்ற ஆமையை*
*அது நினைத்திருக்கக்கூடும்*

*வழியில் எதிர்ப்பட்டவுடன் கரைந்தது யானை*
*அந்த இடத்திலே நின்றனர்,*
*துப்பாக்கிகளும் சுருட்டுமாகச் சேயும் ஃபிடலும்*

*நாங்கள் அணி வகுத்தபோது*
*களைப்பின்றி*
*வேட்டையாடிக் கொண்டிருந்தது சிங்கம்*

*புலி உறங்கிக் கொண்டிருக்கும்வரையில்*
*மான்கள் வாழலாம் என்று நீ சொன்னாய்*

*இரத்த வாசனை நீங்காத இரவை*
*எங்கே புதைப்பதென்று தெரியாமல்*
*இன்று முழுவதும் ஆராய்ந்து கொண்டிருந்தவர்களை*
*அருகிலே வந்து முகர்ந்து பார்க்கின்றன*
*சிங்கங்களும் புலிகளும்.*

*ஓடித்தப்புவதற்கிடையில்*
*வேட்டையின் இரண்டாவது ஆட்டம் தொடங்கியிருந்து*
*விதிரேகையில்.*

கருணாகரன்

03. திரும்பி,
கனலும் உலைமுகத்தில் முகத்தை வைத்து
ஒரு நெடும் பிரார்த்தனை.

தகர்ந்து, பின்னெழுந்த காலத்தின்
மூன்றாவது அடுக்கில்
சேமித்து வைத்திருந்த
நவமணிகளை அள்ளி வாயிலிட்டேன்

ஒரு கைப்பிடியளவு நதிநீரைப் பருகினேன்

செல்க என்றொரு குரல்
வருக என்றொரு அழைப்பு

நிற்பதற்கு இடமும் புள்ளியுமில்லாத் திசையில்
யாத்திரை

காடு எங்கிருந்து எதுவரை
கடல் எங்கிருந்த எதுவரை
வெளி எங்கிருந்து எதுவரை
வானம் எங்கிருந்து எதுவரை
கருணை எங்கிருந்து எதுவரை
அன்பு எங்கிருந்து எதுவரை

விரித்த கைகளில் பறவை
விரிந்த சிறகில் வானம்
துளிர்த்த செடியில் சிரித்த நம்பிக்கை
என்றெழுதியிருந்த வார்த்தைகளைக் கண்டு
சிரித்தது உலைமுகவாய்.

எங்கிருந்து எதுவரை
இந்தப் பயணம் என்று தெரியவில்லை
நெஞ்சுருகியோர் பிரார்த்தனை
அலையடங்கியது கடலில்.

# சந்திரா என்றொருத்தி இருந்தாள்

ஜெ.கே



நீண்ட நாவலின் இறுதிப்பக்கங்கள் நகர மறுக்கின்றன. இதுவரை எழுதிய வார்த்தைகள் எல்லாம் புற்றீசல் போலப் புறப்பட்டுச்சென்று விளக்குக்குமிழியில் முட்டிமோதிக்கொள்கின்றன. அவற்றைத் தடுத்து நிறுத்துவதா? அல்லது நாவலை எழுதி முடித்துவிடுவதா? என் செய்வேன்?

கதைகளைச் சொல்லாமல் விட்டால் என்ன என்று எக்கணம் தோன்றுகின்றது. இது ஒரு அபாயகரமான சமிக்ஞை என்று தெரியும். ஆனாலும் நான் இதுவரை சொல்லாத கதைகளே என் சிறந்த கதைகள் என்று தோன்றுகின்றது. சொல்லிய பின்னர் பருவமெய்திய பறவைகள் போல கதைகள் என்னை விட்டுப் பிரிந்துபோகின்றன. அவை திரும்பி வருவதேயில்லை. அவ்வப்போது கடந்து செல்கையிலும் ஒரு வழிப்போக்கர் போலக்கூட அவை என்னை இனங் கண்டு சிரிப்பதில்லை. கதைகளை எழுதாமல் இனி நம்மோடேயே கூட வைத்திருக்கலாம் என்று சந்திராவிடம் சொன்னேன். அவளும் அது சரியே என்று ஒப்புக்கொண்டாள்.

'வாழ்க்கையை நீ எப்படி எழுதுவாய்? உனக்கு

அதைப்பற்றி என்ன தெரியும்?' என்று ஒருநாள் அம்மா கேட்டார். அப்பாவைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? என்று திருப்பிக் கேட்டேன். அம்மா எதுவுமே பேசவில்லை.

அம்மாவும் அப்பாவும் பிரியும்போது எனக்கு பதினொரு வயது இருக்கும். இனிமேல் அப்பா வீட்டுக்கு வரமாட்டார் என்று என் தலையைத் தடவிவிட்டவாறே சொன்னது இன்னமும் ஞாபகம் உள்ளது. ஏன் என்று நானும் கேட்கவில்லை. அம்மாவும் சொல்லவில்லை. அன்று பகல் முழுதும் நான் அம்மாவுடனேயே இருந்தேன். அம்மாவின் மடியில் குந்தியிருந்து சித்திரக்கதைகள் படித்தேன். அம்மாவும் ஏதோ படித்தார். அடிக்கடி புத்தகத்தை மூடிவைத்து அழுதபடியிருந்தார்.



புத்தகங்களை வாசித்து அழும் பழக்கம் எனக்கு அம்மாவிடம் இருந்தே தொற்றியிருக்கவேண்டும். வசந்தகாலத்தின் முதற்பகலை வெயில் எரித்தது. கிளைகளை மாத்திரமே கொண்ட மரங்களிலிருந்து இலைகளை முந்திக்கொண்டு பூக்கள் வெளிவரத்தொடங்கின. இரண்டு நாட்களில் மழை கொட்ட ஆரம்பித்தது. அடுத்தநாள் மழை வடிந்தபின் பூக்கள் எல்லாம் தெருவில் சிதறிக்கிடந்தன. என் சப்பாத்துக்கடியிலும் ஒரு பூ நசுங்கிக் கிடந்தது. இத்தனைப் பருவங்களும் காத்துக்கிடந்து, மொட்டுவிட்டு, அடுத்தநாளே என் சப்பாத்துக்கடியில் சிக்குப்பட்டதன் தாற்பரியந்தான் என்னவோ? குளிர் மீண்டும் பரவலாயிற்று. உதறல் எடுத்தது. மரத்தில் ஓரிரு பூக்கள் இன்னமும் எஞ்சியிருந்தன. எனக்குச் சந்திராவின் ஞாபகம் வந்தது.

எதுவுமே அவை எழுதப்படும்வரையிலும் எனக்கு நிஜமில்லை. மரணங்கூட. நான் கடைசியாக அழுதது சந்திராவின் மரணத்தின்போது.

நான் சந்திராவின் கன்னங்களை வருடினேன். குருதி தோய்ந்த விரல்கள் சிவப்புக்கோடுகளை வரைந்தன. அவளுடைய தலையைத் தூக்கி மடியில் கிடத்தினேன். 'என்னையுங் கூட்டிக்கொண்டு போயிருக்கலாமெல்லே' அவளின் கழுத்தில் தலை புதைத்துக் குலுங்கிக் குலுங்கி அழுதுகொண்டேயிருந்தேன். ஷெல் சத்தங்கள் மறுபடியும் கூவின.

'அம்மாவை உனக்கு எவ்வளவு பிடிக்கும், அவர்தானே உன்னைத் தனியராகத் தாங்கி இப்படி வளர்த்துவிட்டவர், அம்மாவின் மரணத்தைப் பற்றி ஏன் எழுதவில்லை?' என்று எல்லோரும் கேட்டார்கள். இதுதான் காரணம். அழுதுவிடுவேன். அம்மா வாசிக்கும்போது மாத்திரம் அழுவார். நான் எழுதும்போதே அழுதுவிடுவேன்.

பட்டமளிப்புவிழாவின் போது அப்பாவைச் சந்தித்ததை நான் அம்மாவிடம் கூறவில்லை. 'உனக்கு என்ன பிடிக்கும்? வாங்கித்தருகிறேன்' என்று அப்பா கேட்டார். 'ஒரு பறவைகள் சரணாலயம் வேண்டும்' என்றேன். அப்பா என்னை விசித்திரமாகவே பார்த்தார். 'நீயும் புத்தகங்கள் வாசிக்கிறாயா? அம்மா போல கெட்டுப்போய்விடாதே. புத்தகங்களை எந்நேரமும் வாசித்து நிஜ நண்பர்களை இழந்துவிடாதே' என்றார். 'எனக்கு நிறைய நண்பர்கள் உண்டு' என்றேன். 'ஒருவரைச் சொல்லு' என்று அவர் கேட்டார். நான் 'பலீனா' என்றேன். அவளை எனக்கு மிகவும் பிடிக்கும் என்றேன். அவள் என்னை ஒரு புழுவிலும் கேவலமாக, அடிமை வீட்டு அடிமையென நடத்துகையில் என் உள்ளம் பூரிக்கிறது என்றேன். அப்பா கோபத்துடன் சென்றுவிட்டார். எனக்கும் கோபம். அன்றிரவே அப்பாவைப்பற்றி ஒரு கதை எழுதினேன். அப்பா கதையாக விரிந்து வானத்தில் கூழைக்கடா போல பறந்து ஐரோப்பா திரும்பியதைப் பார்த்துக்கொண்டேயிருந்தேன்.

அப்பா சொன்னது என்னவோ உண்மைதான். நான் இன்னமும் இவ்விடந்தான் இருக்கிறேனா என்று எவரும் அறிவரோ அறியேன். புத்தகங்கள் என்னைக் கைவிட்டுவிட்டன. என் நண்பர்கள் எவரும் தங்கவில்லை. பலீனா விரைவிலேயே ஒரு ரஷ்யப்பிரபுவைத் திருமணம் முடித்துக்கொண்டாள்.


‘உனக்கு எல்லாமே புத்தகங்கள் தானா?’ என்று சந்திரா கேட்டாள். ‘புத்தகங்களில் இல்லாதது என்று ஒன்றில்லை’ என்றேன். ‘மூடிவைத்துவிட்டுப் பார், தெரியும்’ என்றாள்.

சந்திராவைப் பார்க்கும்போதெல்லாம் மனம் சஞ்சலமடைகிறது. இவள் எனக்கு முன்னமேயே இறந்துவிட்டால் என்னிலை என்னாகும் என்று கவலை பிறக்கிறது. எனக்குப் பின்னேயே இவள் என்றால் இவள் நிலை என்னாகும்?

திரெளபதி துகிலுரியப்படுகையில் அருச்சுனனின் மனநிலையை எண்ணிப்பார்க்கிறேன். இதற்காகவா சுயம்வரத்தில் வென்றேன்? இதற்காகவா இவள்மீது மையல் கொண்டேன்? இவளை நான் உண்மையிலேயே காதல் புரிகிறேனா? ஒரு கையாலாகாத அண்ணனுக்காகக் கட்டிய மனைவியை எவனும் காவு கொடுப்பானா? என் தோள்கள் என்னைவிட்டுப் பிரிந்துசென்று துச்சாதனனை மோதித்தள்ளாதா? என் கைகள் அவள் கரங்கள் பற்றி யாருமேயில்லாத குருசேத்திரத்திடலுக்கு இப்போதே ஓடிச்செல்லாதா? உதிட்டிரன்மீது கோபம் பொத்துக்கொண்டுவந்தது. தானே காதலித்து, சுயம்வரத்தில் வென்று அவளைத் திருமணம் முடித்திருந்தால் அவன் இப்படி கட்டிய மனைவியை பணயம் வைப்பானா? தன் மனைவியைப் பணயம் வைக்கையில் தம்பி மனைவிதானே என்று எண்ணினானோ? என்னைப்போல ஒரு ஏமாளி ஏழுலகத்திலும் இருக்கமுடியுமா? என் கால்கள் என் அண்ணனின் மார்பில் உதைந்து அவனைப் பிய்த்து எறியாதா? எது தடுக்கின்றது? ஏன் என் உடலும் என்னைப்போலவே வாளாவிருக்கின்றது? எப்போதிருந்து பாவியானேன்? அல்லது எப்போதுமே நான் பாவியேதானா?

என் பயணங்கள் மரங்களுக்குப் பிடிப்பதில்லை. நான் செல்கையில் சாலையோர மரங்கள் அனைத்தும் எதிர்த்திசை நோக்கியே செல்கின்றன. என் பக்கத்து இருக்கை எந்நேரமும் காலியாகவே இருக்கிறது. சந்திரா ஏன் என்னோடு கூடவரவில்லை? தூங்கலாம்தான். ஆனால் தூங்கினால் கனவு வருகிறது. கனவில் வாழ்க்கை இனிக்கிறது. அந்த வாழ்க்கைக்காக உழைக்கவும் தொலைக்கவும் வேண்டியிருக்கிறது. கனவின் கொடும்பாரம் நெஞ்சை அழுத்துகிறது. தூங்கமுடியவில்லை. மகிழ்ச்சியான கனவுகள் கொடுமையானவை.

நேரத்தை எப்போதிருந்து தொலைக்க ஆரம்பித்தேன் என்று தெரியவில்லை. வேலைப்பளு என்றைக்குக் கனக்க ஆரம்பித்தது என்றும் ஞாபகமில்லை. நட்சத்திரங்கள் இன்னமும் கண் சிமிட்டுகின்றனவா? யாராவது ரசிக்கிறீர்களா? அவ்வப்போது தட்டிச் சொல்லுங்களேன்.



ஒரு ஞாயிறு அதிகாலைப்பொழுதில் கண்விழித்தபோது அலுவலகமேசை முன்னிருந்தேன். அன்றே வேலையைத் துறந்துவிட்டேன்.

வார்த்தையில் வடிக்கமுடியாதது என்று ஒன்று உள்ளதா என்ன? எங்கே சொல்லுங்கள் பார்க்கலாம்? பிறந்தவுடனேயே அவனைக் கையிலேந்தினேன். கட்குழிகள் இன்றி, கைகள் சோகையாய், சுவாசிக்கச் சிரமப்பட்டு. உடல் முழுதும் நடுங்கியது. பிறந்தவுடனேயே அவன் பறக்கத் தயாராயிருந்தான். ஆனால் அவனுக்கு இறக்கைகள் முளைத்திருக்கவில்லை. சந்திரா ஆழ்ந்த உறக்கத்திலிருந்தாள். இவள் என்னை ஒருபோதும் மன்னிக்கப்போவதில்லை.

மெல்லியநீலத்தில் சிறுகோடு வரைந்த சட்டையினையே நான் அதிகமாக அணிகிறேன். எத்தனை புதுச் சட்டைகள் வாங்கினும் இதுவே என்னுடைய முதன்மைத் தெரிவாயிருக்கின்றது. இதுவே என்னுடலுடன் ஒட்டி அளவாகத் தெரிகின்றது. அழுக்காயிருந்தாலும் இதனையே மனம் நாடுகிறது. சிறு கந்தல் விழுந்தும் எனக்கு அதனை விட்டுவிட மனமில்லை. ஒருநாள் சந்திரா அதை எடுத்து ஒளித்து வைத்துவிட்டாள்.

நான் கோபப்படுவேன் என்று சந்திரா நினைத்தாளோ

என்னவோ. சட்டை எங்கே போனது என்று கத்துவேன் என்று நினைத்திருக்கலாம். நான் சட்டையே பண்ணவில்லை. மெல்லிய ஊதாவில் வெள்ளைக்கோடு வரைந்த இன்னொரு சட்டையும் எனக்கு நன்றாகவே பொருந்தியது. முன்னொருபோதுமில்லாதவண்ணம் சட்டை அச்சொட்டாகப் பொருந்தியது. நிறையச் சட்டைகள் நமக்கென நெய்யப்பட்டுக் காத்திருக்கின்றன. நாம்தான் அவற்றை அணிவதில்லை. என் மொழியையும் சந்திரா தான் ஒளித்து வைத்திருப்பாள் என்று உணர்கிறேன். ஆனால் அவள் மீது எனக்குக் கோபம் இல்லை. என் மொழி கந்தலாகிவிட்டது. மெல்லிய ஊதாவில் வெள்ளைக்கோடு வரைந்த புதுமொழியைத் தேடிக்கொண்டிருக்கிறேன்.

நாவலை எப்படி முடிப்பேன் நன்னெஞ்சே? என் ரயில் பெட்டிக்குள் நிறையக் கதைப்புத்தகங்கள். ஒருத்தி அழுதபடி உட்கார்ந்திருந்தாள். பறவைகள் வானில் பறந்து கொண்டிருக்கையில் அழுவதுண்டா? பறவைகளின் சோகந்தான் மழையாய்ப்பொழிவதுண்டா?

ஏன் தேடவேண்டும்? அறிவை வளர்க்கவேண்டும்? மற்றவர்க்கு உதவவேண்டும்? நல்லவராய் இருத்தல் வேண்டும்? ஒரு ரூபாய் போதாதா? விழுந்தால் ஒலி கேட்காதா?

குளிர்கிறது. ஒரு போர்வை போதும். வேண்டுமானால் புத்தகம் வாசிக்கலாம். சிரிக்கலாம். அழ விருப்பமில்லை எனில் மூடி வைத்துவிடலாம். எதற்கு நிஜத்தில் வாழ்ந்து கழிக்கவேண்டும்?
பயணத்தை இரத்துச் செய்துவிட்டேன்.

நான் செல்லவிருந்த ஆகாய விமானம் வெடித்துச் சிதறுவதைக் கண்டேன். பயணப் பொதிகள் வானில் மின்னிடக் கண்டேன். கரடிப்பொம்மை ஒன்று கருகிய நிலையில் என்னருகில் வந்து விழுந்தது. அது விமானத்தில் இருந்த குழந்தையுடையதா? பெண்ணுடையதா? அல்லது யாருக்கேனும் பரிசாகப் பயணித்ததா?

பொம்மையை உடனேயே குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டேன். சந்திரா வந்தால் அவன் எங்கே என்று கேட்பாள். சந்திராவுக்குத் தெரியவேண்டாம். சந்திராவின் அருகாமை இல்லாமல் கதைகளைத் தனியே சுமப்பது இப்போதெல்லாம் கனக்கிறது. பட்டென்று போட்டுவிடவும் மனமில்லை. கட்குழிகள் இன்றி, கைகள் சோகையாய், சுவாசிக்கச் சிரமப்பட்டு, கதைகள் பறக்க ஆசைப்பட்டாலும் அவற்றுக்கு வலு இல்லை. நடுவழியில் கழுகுக்கு இரையாகிவிடும், கதைகள் என் வயிற்றினுள்ளேயே இருக்கட்டும்.

நூலகத்துக்குச் சென்றிருந்தபோது யாருமே இருக்கவில்லை. ஹெமிங்வேயைத் தூக்கிக்கொண்டு தரையிலேயே உட்கார்ந்தேன். சுற்றிவரப் புத்தக அலமாரிகள். பறவைகள் கீச்சுகீச்சு என்று கூடுகளுக்குள் உட்கார்ந்திருந்து கத்திக்கொண்டிருந்தன. இவற்றையெல்லாம் யார் யாரெல்லாம் வாசித்திருப்பார்கள்? எங்கிருந்தபடி வாசித்திருப்பார்கள்? கட்டில், வரவேற்பறை, ரயில், மலையுச்சி, ஆற்றங்கரை, வனம் எத்தனை கதைகள்? ஹெமிங்வே என் நாவலுக்கு வார்த்தைகளை உபாசம் செய்வான் என்று அவனைத் திறந்தேன். அட்டைப்படத்தில் அவனுடைய முகம் அதீத உள்ளக் கிளர்ச்சியைக் கொடுத்தது. இறுதிக்காலத்தில் வலி தாளாமல் அவன் தற்கொலை செய்தானா? எந்த வலி? பறக்குந்திறனை இழந்துவிட்ட ஒரு வயோதிபப் பறவையின் வலியாய் இருக்குமா? தன்னுடைய வானத்தில் ஏராளம் பறவைகள் சிறகடிப்பதைப் பார்த்துத் தாங்கொணாத பெருந்துயரா? ஊர்ந்து. ஊர்ந்து மலையுச்சி சென்று அங்கிருந்து பாய்ந்து விழுந்திருப்பானா? அல்லது அவனும் ஒரு கதையென வானின் எல்லை கடந்து சென்றிருப்பானா?

என் அப்பா ஏன் மீண்டும் தென்துருவம் திரும்பவில்லை? என்னைப்பார்க்க வரவில்லை? அம்மாவின் மரணச் செய்தியைக் கேட்ட சமயம் அழுதிருப்பாரா?

நூல்கள் என்னை மிரட்டுகின்றன. கை விடுகின்றன. நண்பர்கள் என நான் நினைத்தவர்களுக்கு நான் ஒரு கணக்கேயில்லை என்பது இப்போதுதான் புரிகிறது. சந்திரா ஒருத்திதான் இருந்தாள்.

அவளும் வெறுங்கதை தானோ என்ற சந்தேகம் எழுகிறது. 'சந்திரா என்றொருத்தி இருந்தாள்' என்ற வரியிலேயே கதை தொடங்கி முடிந்து பறந்தும் போய்விடுகிறது. ஒவ்வொரு முறையும் அழுது அழுது கண்கள் முகிழ்ந்துவிட்டன.

நகர முடியவில்லை. பேசாமல் இறந்துவிட்டால் என்ன? ஒன்று புதிதாய் எதுவாவது காணக்கிடைக்கும். இல்லை, இதுவே முடிவேயாயினும் குடியா மூழ்கிவிடப்போகிறது?

தற்கொலை செய்பவர்கள் பாக்கியசாலிகள்.

இறுதியாக என் மரணத்தை மட்டுமேனும் எழுதிவிடவேண்டும். அது கதையாகப் பறந்து என்னைவிட்டுப் பிரியட்டும். அவ்வப்போது வழிப்போக்கராக வாசல் கடக்கையில் வாசிக்கலாம். என் மரணத்தை வாசித்து நானே அழுதுதீர்க்கலாம். பறந்தபடி.

●

# சாதிய சமூக ஒடுக்குமுறைக்கு முக்கியத்துவம் கொடுத்து பண்பாட்டுக் கலாசாரத் தளத்தில் செயற்படும் எந்த இயக்கமும் எம்மத்தியில் தற்போது இல்லை.

**இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணி**

**மக்கள் மத்தியிலிருந்து இயல்பாக போராட்டங்கள் மேலெழுந்து வராமல், புலம்பெயர்ந்தவர்களால் தலித்தியச் சிந்தனை திணிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறதே இதனை நாம் எப்படி எதிர்கொள்வது? ஏன் இதனை கேட்கிறோம் என்றால் இலங்கையில் யாரும் தம்மை தலித்தாக அடையாளப்படுத்துவதாகத் தெரியவில்லையே? தலித் அமைப்புகளும் இருப்பதாகத் தெரியவில்லையே?**

கடந்த ஆக்காட்டி 12வது இதழிலும் சாதிய சமூகநிலை மீதான விவாதத்தையும் உள்ளடக்கிய ஆக்கங்களை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. விவாதங்கள், உரையாடல்கள் மூலமாக சாதியம் குறித்த தெளிவான ஒரு கருத்துநிலையை உருவாக்க முனையும் ஆக்காட்டி சஞ்சிகையின் ஆசிரியர் குழுவினருக்கு முதலில் எமது பாராட்டுகள்.

இலட்சக்கணக்கான மக்கள் அழிவிற்கும், பொருள் இழப்பிற்கும் உள்ளான தமிழ்த் தேசியவிடுதலைக்கான ஆயுதப்போராட்டமானது மக்கள் மத்தியிலிருந்து இயல்பாக மேலெழுந்த ஒரு போராட்டமா? என்பதாக வாதத்திற்கான ஒரு கேள்வியாக முன்வைத்து கடந்து போகும் விடயம் அல்ல சாதியம் என்பது. மனிதர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு நெருக்கடிகள் என்பன இல்லாமல் இருந்து தோன்றியவையாக இருப்பதுபோலவே, சாதியம் என்பதும் இல்லாமல் இருந்து தோன்றிய ஒன்றுதான். சாதிய சமூக ஒடுக்குமுறை என்பது கண்ணுக்கு புலப்படுவதாகவும், கண்ணுக்கு புலப்படாத வகையிலும் இயங்கும் நிலைகொண்டது. முன்பு ஒருகாலத்தில் கண்ணுக்கு புலப்படும் வகையிலான சாதிய ஒடுக்குமுறை என்பது மிகவும் கொடூரமான முறையில் மேற்கொள்ளப்பட்டது. அந்தத் தருணத்திலும்கூட ஒடுக்கப்பட்ட தலித் மக்கள் மத்தியிலிருந்து இயல்பாக போராட்டங்கள் மேலெழுந்ததில்லை. சாதிய சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராக கட்சிகளினாலும், அமைப்புகளினாலுமே போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. கண்ணுக்குப்புலப்படும் வகையிலான சாதிய ஒடுக்குமுறை என்பது கிராமமட்டங்களில் (பல்வேறுவகையில்) தற்போதும் நிலவுகிறது. அவை சமூக முரண்பாடாக, கலவரங்களாக கூர்மையடைவதில்லை. அதற்கு பல்வேறு புறநிலைக் காரணங்கள் இருக்கலாம். ஆனாலும் கண்ணுக்கு புலப்படாமல் இயங்கும் சாதியம் என்பது கிராமம், நகரம் எனும் வேறுபாடின்றி எங்கும் வியாபித்தே இயங்குகின்றது. இதனூடாகவும் சமூக ஏற்றத்தாழ்வும் ஒடுக்குமுறைகளும் மேற்கொள்ளப்பட்டே வருகிறது. எனவே இதற்கான சிந்தனையும், கருத்துருவாக்கமும், அமைப்புரீதியான செயற்பாடுகளும் அவசியமானதே. சாதியம் என்பது எமது பண்பாட்டு கலாசாரத்துடன் இணைந்து இயங்குகின்ற ஒரு கருத்தியலாக உள்ளது. இவ்வாறான பண்பாட்டு கலாசாரங்களை கேள்விக்குட்படுத்தியே சாதியத்தை உலுப்பவேண்டியுள்ளது.

தலித்தியச் சிந்தனை திணிக்கப்படுவதாகச் சொல்லப்படுவதற்கும், தலித் அமைப்புகள் இலங்கையில் இல்லாத நிலை குறித்த உங்கள் கேள்விக்கு: மார்க்சியம் எனும் கருத்தியலானது எவ்வாறு பல்வேறு தரப்பினரால் பல்வேறுவிதமாக புரிந்துகொண்டு செயற்படுகின்றதோ, தலித்-தலித்தியம் எனும் கருத்துநிலையும் அவ்வாறே செயற்படுத்தப்படுகிறது.

சுருக்கமாகக் கூறுவதானால், தலித்தியம் என்பதை நிரந்தரமாகக் காவிச்செல்லும் ஒரு சொல்லாடலாகவோ, கருத்தியலாகவோ நாம் கருதவில்லை. தேசியவிடுதலைப் போராட்டம் எனும் பெயரில் நிகழ்ந்த அவலங்களில் மூழ்கி எழுந்த



Asemic Writing/Art from Thomas Jordan

*கருத்தியல் அனுபவத்தினூடாகவே தலித்தியத்தைப் பேசும் சமூக நெருக்கடிக்குள்ளானோம். தலித்தியம் எனும் கருத்து நிலையைத் திணிப்பதாக கருதுபவர்களிடம் நாம் கேட்பது: எமது சமூகத்தில் புலப்பட்டும், புலப்படாமலும் இயங்கிவரும் சாதியத்தையும் அதனால் எதிர்கொள்ளும் சமூக நெருக்கடிகளையும் எதிர்கொள்வதற்கான வழிமுறைகள்தான் என்ன? சாதிய இழிவுபடுத்தல், சாதிய வேறுபாடுகள் காரணமாக கிராம அபி-விருத்திகளில் பாராபட்சம், பதவி உயர்வுகளில்; சாதிரீதியான பாகுபாடுகள், கோவில் நிலங்களில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டதன் காரணமாக காணிஉரிமை மறுக்கப்பட்டு வரும் அவலம், தொடர்ந்தும் பேணப்பட்டு வரும் வழிபாட்டுப் புறக்கணிப்புகள் போன்ற சமூகபாரபட்சங்களும் எங்களால்தான் திணிக்கப்படுகின்றதா? இவை குறித்துச் சிந்திப்பதும் இதனைக் கேள்விக்குட்படுத்தி செயற்படுவதென்பது எந்தவகையில் ஒரு திணிப்பாகக் கருதமுடியும். எனவே இவைகுறித்துச் சிந்திப்பவர்கள் செயற்படுபவர்கள் அதற்கான செயல்பாட்டு வழிமுறைகள் பற்றி விவாதித்து செயற்படுபவர்களாக இருப்பின், எமது சூழலுக்கு அமைய தலித்தியம் எனும் சொல்லாடல் அவசியமா இல்லையா என்பதை நாம் மீள் பரிசீலனை செய்யவும் தயாராகவே உள்ளோம்.*

*தலித் அமைப்புகள் அல்ல! சாதிய சமூக ஒடுக்குமுறைக்கு முக்கியத்துவம் கொடுத்து பண்பாட்டுக் கலாசார தளத்தில் செயற்படும் எந்த இயக்கமும் எம்மத்தியில் தற்போது இல்லையே! (விதிவிலக்காக இலக்கியப் பிரதிகள்) இனப்பிரச்சனையை பிரதான பிரச்சனையாக முன்வைத்து சாதியை பின்னால் வைத்து பேசும் கட்சிகளும், உதிரிகளும்தான் தலித்திய சிந்தனை திணிக்கப்படுவதாகக் கருதுகிறார்கள்!*

**சாதியப் பிரச்சினைகளை எழுதிவரும், அதுகுறித்த விவாதங்களை முன்னெடுக்கும் அறிவுஜீவிகள், பேராசிரியர்கள் மட்டத்திலும் தம் அடையாளத்தை முன்வைத்து உரையாடும் போக்கு அறவே இல்லாதுள்ளதே ஏன்?**

*அடையாளத்தைப் பிரகடனப்படுத்திச் செயற்படும் மனப்போக்கின் விளைவுகளைக் கேள்விக்குட்படுத்தும் காலமாக தற்போதைய கருத்துநிலையில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகிறது. சாதியப் பிரச்சனை குறித்துமட்டுமல்ல எந்தப்பிரச்சினையாக இருந்தாலும் மனிதன் எனும் அடையாளத்துடன் பேசுவதற்குத் தயாராக இருந்தாலே போதுமானது. தலித் எனும் அடையாளத்துடன்தான் சாதியப் பிரச்சனைகள், அதன் ஒடுக்குமுறைகள் குறித்துப் பேசவேண்டும் என்பதல்ல. சிங்கள-தமிழ் இனவாதம் குறித்தெல்லாம் மொ-ழிசார்ந்த அடையாளங்களுடன்தான் பேசவேண்டும் என்பதல்ல. தனித்துவ அடையாளங்களை வலியுறுத்தி, அதன் அடிப்படையிலேயே சிந்திப்பதானது பிறஅடையாளங்களுடனான முரண்பாட்டை நீடிப்பதற்கும், தக்கவைப்பதற்குமான ஒரு கருத்தியலாக நிலைபெறும் அவலமே தொடரும்.*

**இலங்கையில் தலித்தியம் பேசுவதில் உள்ள போதாமைகளாக நீங்கள் இப்போது எவற்றைப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள்?**

*ஒரே இனம், ஒரே மதம், ஒரே மொழி பேசிவரும் சமூகமானது அடிப்படையில் ஒரு சாதிய சமூகம். இவ்வாறான சாதிய சமூகமான எமக்குள் நிலவும் வேற்றுமைகளும் சாதிய ஒடுக்குமுறை மனநிலையையும் புரிந்து கொள்வதிலேயே 'போதாமைகள்' அதிகம். இவற்றைப் புரிந்துகொண்டு அதற்கான முக்கியத்துவம் கருதிச் செயற்படும் சக்திகள் முன்வரவேண்டும். அவ்வாறான நிலை உருவாகும் பட்சத்தில் தலித்தியம் என்பதை இரண்டாம் நிலையில் வைத்து அவர்களுடன் நாம் உரையாடமுடியும். தலித்-தலித்தியம் என்பது செயற்பாட்டிற்கும், இணக்கத்திற்கும் தடையாக இருப்பதாகக் கருதும்பட்சத்தில் அதைக்கடந்துதான் பயணிக்கவேண்டும். செயற்பாட்டில் எவ்வித கருசனையும் இல்லாது நாம் முன்வைக்கும் குறியீட்டு அடையாளத்தை மட்டும் கேள்விக்குள்ளாக்குவதில் மட்டுமே கவனம் செலுத்தப்படுகிறது. இது எந்தவகையில் நியாயமானது?*

**குறிப்பாக தென்னிந்தியாவில் தலித்தியச் சிந்தனை, அரசியலில் தலித்துகளின் எழுச்சி பெற்ற தொண்ணூறுகளின் பின்னர் நிகழ்ந்த மாற்றங்களாக எவற்றை நாம் அடையாளப்படுத்தலாம்?**

*1990களில் தலித் சிந்தனை, அதன் அடையாளம் என்பது தலித்துகளின் அரசியல் உரிமை மீதான கருத்தியலாகவும், அதுவரைகாலமும் புரிந்து கொள்ளப்பட்ட சாதியம் பற்றிய கருத்தியலிலும் மாற்றம் அவசியம் என்ற புரிதலுடனும் முன்னெடுக்கப்பட்ட ஒரு காலமாக கருதலாம். துரதிருஷ்டவசமாக அதில் பெரிதாக எந்த மாற்றமும் நிகழ்ந்திடவில்லை. மாறாக சாதிரீதியாக ஒடுக்கப்பட்டு வரும் தலித் சமூகமானது அனைத்து வகையிலும் பாரிய நெருக்கடிகளையே எதிர்கொண்டு வருவதை நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.*

*திராவிட இயக்கங்களின் மீதான அதிருப்தியே தலித் இயக்கங்களும் தோன்றுவதற்கு காரணமாக இருந்தது. திராவிட இயக்கங்களின் அரசியல் அதிகார நலன்களுக்கான ஆதரவை நாடுவதற்கான சக்திகளாக பெரும்பான்மை இடைநிலை ஆதிக்க சாதிகள் உள்ளனர். அங்கு சாதிய நெருக்கடிகளை கூர்மைப்படுத்தும் போக்கை நிர்ணயிக்கும் சக்தியாகவும் அரசியலே முன்னணி வகிக்கின்றது. சமூக நீதியை நிலைநாட்டியது தமிழகம் எனும் கதையாடலை தமிழகத்திலுள்ள*

புதிய தலைமுறையினர் தற்போது கேள்விக்குட்படுத்தி வருவதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. பெரும்பான்மை வாதம் என்பது இந்திய சாதிய சமூகத்தைப் பொறுத்தவகையில் சமத்துவமற்ற நிலையை நீடிக்கவே செய்யும். அதைக் கருத்தில் கொண்டுதான் தீண்டாமைக்குள்ளான மக்களுக்கும், பழங்குடிமக்களுக்குமே இடஒதுக்கீடு அவசியமானது என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். அதையே இந்தியச்சட்டம் வலியுறுத்தியபோதும், மாகாணங்கள் விரும்பினால் பிற்படுத்தப்பட்ட பிற சாதியினருக்கும் இடஒதுக்கீட்டைப் பரிசீலிக்கலாம் என்ற சரத்தையும் இணைத்துக்கொண்டது. அதைக் காரணமாக முன்வைத்தே பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் என இட ஒதுக்கீடுகள் பகிரப்பட்டன. இதையும் ஒரு முற்போக்கான அம்சமாகவே திராவிடக்கட்சிகள் கருதினார்கள். ஆனால் இதுவே பெரும்பான்மை ஆதிக்க சாதியினரின் அனைத்து ஒடுக்கு முறைக்கும் தலித்துகள் உள்ளாகும் நெருக்கடிகளை தோற்றுவித்திருக்கின்றது எனக் கருதுகின்றனர். இவ்வாறான பல விடயங்களை நாம் அவதானிக்க முடியும்.

**கல்விமறுப்பு, தேநீர்க் கடைப் பிரவேசம், கோவில் நுழைவு, போன்ற சமூக ஒடுக்குமுறைகளை நேரடியாகத் தலித்துகள் எதிர்கொண்டவர்களாக இருந்தனர். எனவே அதற்கான போராட்டங்களிலான அவசியத்தை உணரக்கூடியதாக இருந்தது. தற்போது அனைத்திலும் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இவ்வாறு கலாசார, கல்வி வெளிகளிலும் நவீன தொழில்நுட்பங்களின் வருகையும் அனைவருக்குமான வாய்ப்பை வழங்கி வரும் சூழலில் சாதிய மனநிலையில் ஏதாவது மாற்றங்களைக் கொண்டுவருமா?**

நிச்சயமாக... புறநிலை அழுத்தங்களானது மாற்றங்களுக்கான உந்துதலாக அமையும் என்பதையும் அவதானிக்கவேண்டும். கல்வி வாய்ப்புகளும், நவீனதொழில்நுட்ப வளர்ச்சிகளும், நகரமயமாக்கலும் சாதியம் கடைபிடித்துவரும் இறுக்கமான சமூக-முரண்பாட்டுக் கண்ணிகளைத் தகர்ப்பதற்கான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தவே செய்யும். அந்த வகையில் சாதிய ஒடுக்குமுறையில் கண்ணுக்குப் புலப்படும் வகையிலான தோற்றம் குறைவாகவே உள்ளது. அதனால் சாதியத்தை மறுத்து முன்னேறும் ஒரு முற்போக்குச் சமூகத்தின் நிகழ்வாக இதைக் கருதமுடியாது. ஆரம்பகாலத்தில் சாதியத்தைப் பேணுவதும் தீண்டாமைக்குள்ளான சமூகத்தை ஒடுக்கி வாழ்வதும் சமூகத்தின் பெருமையாகவும் கௌரவமாகவும் கருதப்பட்ட சூழல் இருந்தது. தற்போதைய சூழலில் சாதிய குரோத மனப்பான்மை



கொண்ட எவருமே தமது சாதியப் பாகுபாட்டின் இயல்பை வெளிப்படையாக, கௌரவமாகவோ பெருமையாகவோ பேசமுடியாத மனநிலையில் மட்டுமே மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. எம்மத்தியில் நிலவும் சாதிய சமூக முரண்பாடுகளை அரசியலால் கூர்மைப்படுத்தமுடியாததும் ஒரு சாதகமான சூழல். அத்தோடு இந்துமத அடிப்படைவாத செயல்பாடுகளை மேற்கொள்ளாத சமூகமாகவும் எமது சமூகம் இருப்பதால் நவீனமாற்றங்களை உள்வாங்கி தகவமைக்கும் வாய்ப்புகளும் உள்ளன. தற்போது அந்த நம்பிக்கையும் தகர்ந்து போவதற்கான தலையீடாக இந்தியத் தலையீடுகளானது அரசியலிலும்-பண்பாட்டுத்தளத்தில் மேற்கொள்ளப்படுவதாகவும், அதன் விளைவாகச் சாதிய-சமூகப் பாகுபாடுகள் கூர்மைப்படுத்தப்படக்கூடிய அபாயம் நேரிடலாம் என்கிற ஒரு கருத்தும் மேலோங்கி வருகிறது.

இந்திய சாதிய சமூகத்தில் இருக்கும் சாதியமுரண்பாடுகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும், எம்மத்தியில் நிலவும் சாதிய முரண்பாடுகளுக்கும் பல வேறுபாடுகள் இருப்பதை நாம் அவதானிக்கலாம். குறிப்பாகச் சனத்தொகையில் இந்தியாவுடன் ஒப்பிடும்போதும் மிகவும் குறைந்த சனத்தொகையுடையவர்களாக நாம் இருக்கின்றோம். ஒடுக்கப்படும் சாதியினரும் செறிவாக எங்கும் பரந்து வாழும் நிலை இருப்பதால் சாதிய முரண்பாடுகளும் கூர்மையடையாததற்கு ஒரு காரணமாக உள்ளது. எனவே சாதிய சமூகமாற்றத்தை எதிர்கொள்ளும் புறநிலை வாய்ப்புகள் எமக்கு அதிகமாகவே இருக்கின்றது.

**தமிழகத்து அரசியலில் தலித்கட்சி ஒன்றின் தலைவராக உள்ள திருமாவளவனின் செயற்பாடுகளை எப்படி மதிப்பிடுவீர்கள்?**

தோழர் திருமாவளவனது விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும், டாக்டர் கிருஸ்ணசாமியின் புதிய தமிழகம் கட்சியும் 90களில் தலித் சமூகத்தின் மேம்பாட்டிற்கான சக்திகளாகவே கருதப்பட்டன. அதுவும் தோழர்

திருமாவளவன் அவர்கள் திராவிடக் கட்சிகளை விமர்சனபூர்வமாக எதிர்கொண்டு தலித்துகளின் நலன்களுக்கான ஒரு அடையாளமாகத் திகழ்ந்தார். 2003ல் பாட்டாளி மக்கள்கட்சி தலைவர் ராமதாசுடன் இணைந்து தமிழ் பாதுகாப்பு இயக்கத்தை தொடங்கி தலித்சமூகத்தின் தனித்துவமான நலன்களில் இருந்து விலகினார். தேர்தல் அரசியலின் பெரும்பான்மை அரசியல் தாக்கமானது அவரையும் இழுத்துச்சென்று தலித் சமூகத்திற்கு எதிரான சக்திகளுடன் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தியது. அந்தவகையில் திராவிடக் கட்சிகளும் பெரும்பான்மை ஆதிக்கசாதிக் கட்சிகளும் தமது நலனுக்கு ஏற்றவகையில் திருமாவளவனைப் பயன்படுத்திக்கொண்டார்கள். 2012ல் தர்மபுரி மாவட்டத்திலுள்ள மூன்று தலித் கிராமங்கள் எரித்து நாசமாக்கப்பட்டதன் பிற்பாடான திருமாவளவன் அவர்களின் நடவடிக்கைகளில் சில மாற்றங்களைக் காணக்கூடியதாக இருந்தது. வன்னியர் சாதிப்பெண்ணைத் தலித் ஒருவர் காதலித்தார் என்ற காரணத்திற்காகப் பாட்டாளி மக்கள் கட்சியின் ஆதரவாளர்களாலேயே அக்கிராமங்கள் அழிக்கப்பட்டது. அந்த சம்பவத்தையும், பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரான ராமதாஸையும் திருமாவளவன் கடுமையாகக் கண்டித்தார். இவ்வாறான அனுபவங்களோடு திருமாவளவன் முதிர்ந்த போதிலும் தமிழ்நாட்டிலுள்ள தேர்தல் அரசியல் சூழலில் அனைத்துப் பெரும்பான்மை ஆதிக்க சாதிக்கட்சிகளும் (திராவிட கட்சிகள் உட்பட) வாக்கு எண்ணிக்கையிலான கூட்டிற்கே முன்னுரிமை கொடுத்து வருகிறது. அந்த வகையில் கடந்த சட்டமன்றத் தேர்தலிலும் திருமாவளவனால் வெற்றி பெறமுடியாது போனது. அரசியல் கட்சிகளின் நிலையில் திருமாவளவன் எதிர்கொள்ளும் நெருக்கடி இவ்வாறு இருக்க, தமிழக புத்திஜீவிகளின் ஆதரவும், முறையான வழிகாட்டலும் உரையாடல்களும் இல்லாத ஒரு நெருக்கடியில் திருமாவளன் இருப்பதாகவே நாம் கருதுகின்றோம்.

### அம்பேத்கரை நம் சூழலில் எப்படி அறிமுகம் செய்யலாம்?

சாதிய சமூகம் குறித்த ஆய்விற்கான பல்வேறு கருத்துருவாக்கத்தை டாக்டர் அம்பேத்கர் முன்வைத்திருக்கின்றார். அவரது தனித்துவமான சாதியம் குறித்த ஆய்விற்கும், அவரது மேடைப்பேச்சின்போது, அந்தச் சந்தர்ப்பத்தை எதிர்கொள்வதற்குமாக அவர் முன்வைத்த கருத்துகளும் என அவரது கருத்துருவாக்கங்களை நாம் பிரித்தறிவதும் அவசியம். எப்போதுமே சூழலும்-காலமும் கருத்துருவாக்கத்திற்கான பிரதான அம்சம் என்பதையும் நாம் கருத்தில்கொள்ளவேண்டும். அந்தவகையில் அம்பேத்கர் அவர்களின் கருத்துருவாக்கங்களை அவரது காலத்தோடும் சூழலோடும் இணைத்தே அணுகவேண்டும். இல்லாது தோன்றிய ஒரு சாதியின் தோற்றம், அது ஏற்படுத்திய சமூக ஏற்றத் தாழ்வுகள், அதற்கு மூலமாக இருந்த இந்துமதம்-பார்ப்பனியம் அதன் தோற்றுவாயிலிருந்து பிறப்பின் அடிப்படையில் அனைவராலுமே சாதியத்தைக் கௌரவமாகவும் மதிப்பாகவும் கருதும் நிலைக்குள்ளான அவலம் போன்ற பல்வேறு நெருக்கடிகளுக்கான புரிதலை நாம் அம்பேத்கரிடம் இருந்து கற்றுக்கொள்ளலாம். எனவே அனைத்துச் சிந்தனைகளைப்போலவே அம்பேத்கரிடமிருந்தும் எமது சூழலுக்கேற்ப கருத்துருவாக்கத்தை நாம் உருவாக்கவேண்டும். முதலில் அம்பேத்கர் பற்றி அடிப்படைப்புரிதல் எமக்கு அவசியம். அதற்கான முயற்சி என்பது எமது சூழலில் நடைபெறவில்லை. முதலில் அது நடைபெறவேண்டும. அதற்கு பின்பாகவே எமக்கேற்றவகையான கருத்துருவாக்க உரையாடல்கள் நடைபெறவேண்டும்.

### நீங்கள் உங்களை ஒரு அரசியல் கட்சியாக அடையாளப்படுத்துகிறீர்களா? அரசியல் அதிகாரம் கைப்பற்றுவதுதான் சாதி ஒழிப்பிற்கான தீர்வா? அல்லது அதுதான் தீர்விற்கான முன் நிபந்தனையா?

அல்லவே அல்ல. இவ்வாறான கேள்வியை நாம் பல இடங்களிலும் எதிர்கொண்டோம். இதற்கான பதிலையும் பல தடவை கூறியும் இருக்கின்றோம். நாம் ஒரு அரசியல் கட்சி அல்ல. கலாசார-பண்பாட்டு தளத்தில் இயங்குகின்ற ஒரு அமைப்பு. தலித்மக்களுக்கான அரசியல் பிரதிநிதித்தும் தேவை என்பதன் அடிப்படையில் அதற்கு முன்னுரிமை கொடுக்கும் கட்சிகளை விமர்சனபூர்வமாக எதிர்கொள்வது, ஆதரிப்பது. அதிகாரத்தைக் கைப்பற்றுவதென்பது எமது தீர்வுமல்ல முன் நிபந்தனையுமல்ல. மறுக்கப்பட்டு வரும் சலுகைகள்-உரிமைகள் பாரபட்சமின்றி பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தி வருகின்றோம். ஒரு சமூக அமைப்பானது தான் அக்கறைகொள்ளும் விடயத்திற்கான கருத்துருவாக்கத்தின் அடிப்படையில் செயற்பட்டாலும் அந்தக் கருத்துருவாக்கமும் செயற்பாடுமே சமூகத்தில் இயங்கிவரும் பிற அமைப்புகளிற்கும் பொருந்துவதாக இருக்காது. எமது சமூகத்தில் சாதியம் என்பது மிக முக்கியமான பிரச்சினையாக இருப்பினும், வேறுபல பிரச்சினைகளையும் எதிர்கொண்டே சமூகம் இயங்குகிறது. பெண்கள் பிரச்சினை, பால்வேறுபாட்டுப் பிரச்சினை, சுற்றுச்சூழல் பிரச்சினை, மாற்றுத்திறனாளருக்கான பிரச்சினை, யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் பிரச்சினை, இனப்பிரச்சினை எனப் பல்வேறுபட்ட பிரச்சினைகள் எதிர்கொள்ளப்பட வேண்டியிருக்கிறன. அதற்கான பல்வேறு அமைப்புகளும் தமக்கான

கருத்துருவாக்கத்துடனும், அனைத்துக்கும் இடையிலான நெருக்கமான உறவுடனும், ஆதரவுடனுமே செயற்படவேண்டும். அவ்வாறு இணைந்து செயற்படும் தருணங்களில் அவரவர் தமது கருத்துருவாக்கங்களில் மாற்றங்கள் நிகழ்த்தவேண்டிய அனுபவங்களையும் பெறக்கூடியதாக இருக்கும்.

இப்படி எல்லாம் இயங்குவதுதான் அனைத்துவகையிலும் ஒரு சமூகம் தன்னை மேன்மைப்படுத்துவற்கான அறிகுறிகள் என நம்புகின்றோம். ஆனால் அதற்கான எந்த சமிக்ஞையையும் காணோமே... !

**இலங்கையில் தலித் சமூக மேம்பாட்டு முன்னணி-யினரின் செயற்பாடுகள் எப்படி இருக்கின்றன? எதிர்காலத் திட்டங்கள் என்ன? தலித் எனும் சொல்லாடலின் கருத்தாக்கத்தை எவ்வாறு எதிர்கொள்கிறீர்கள்?**

யுத்தம் மிக மூர்க்கமாக நடைபெற்று வந்தபோது அங்கிருந்த இறுக்கமான சூழலில் தகவலின் அடிப்படையிலும், கற்றுக்கொண்டிருந்த சிந்தனைகளையும் அடிப்படையாக கொண்டு செயற்பட்டுவந்தோம். பிரான்சிலும், இலண்டனிலும் தலித் மாநாட்டை ஏற்பாடுசெய்து கலந்துரையாடல்களை மேற்கொண்டோம். அதன் தொடர்ச்சியாக 'வடு' எனும் சஞ்சிகையை வெளியிட்டுவந்தோம். யுத்தம் முடிந்ததன் பிற்பாடு இலங்கையிலுள்ள ஆதரவாளர்களோடு கிராமமட்டங்களில் நிலவும் சாதிய ஒடுக்குமுறைகளை அம்பலப்படுத்தும் கட்டுரைகள் கிடைக்கப்பெற்று அவற்றைப் பதிவுசெய்தும் வருகின்றோம். இலக்கிய செயற்பாடுகளில் ஈடுபாடுடையவர்கள் மட்டுமன்றி பல்வேறு அமைப்புகளுடனும் நெருக்கமான உறவை பேணுவதில் ஆர்வமுள்ளவர்களாகவும் செயற்பட்டு வருகிறோம். அதேபோன்று அரசியலிலும் ஆதரவான சக்திகளை இனங்கண்டு உரையாடுவதில் முனைப்பாகவும் இருக்கின்றோம்.

**தலித் கருத்தாக்கம்**: இது முன்பு குறிப்பிட்டதுபோல் பலரும் பலவிதமாக எதிர்கொண்டு செயற்பட்டு வரும் நிலையாக இருக்கிறது. விடுதலைச் சிறுத்தை அமைப்பின் தலைவர் திருமாவளன் 'தேர்தல்காலத்தில்' கேள்வி ஒன்றை எதிர்கொள்ளும் விதத்தில் இவ்வாறு கூறினார்: 'தலித் என்பது ஒடுக்கப்படும் அனைவருக்குமான ஒரு சொல். இலங்கையை எடுத்துக்கொண்டால் சிங்கள அரசினால் தமிழர்கள் ஒடுக்கப்படுவதால் தமிழர்கள் அனைவருமே தலித்தான்' என்றார்.

காலம் காலமாக தீண்டும் சாதியினரால் விளிக்கப்படும் அடையாளம் யாவும் தம்மை இழிவுபடுத்தும் சொல்லாடல்களாக கருதப்பட்டு வந்தது. எனவே தீண்டப்படாதவர்கள் நிலையிலிருந்து 'தலித்' எனும் 'அழைப்பானது' தீண்டப்படாதவர்களாக அடையாளப்படுத்தப்பட்டவர்களை இணைக்கவும், கௌரவப்படுத்தும் ஒரு சொல்லாடலாகவும் கருதப்பட்டது. உலகளவிலும் தலித் என்பது தீண்டாமைக்கு உள்ளான சாதியினரைக்குறிக்கும் ஓர் அடையாளமாக வலுப்பெற்றுள்ளது என்பதும் உண்மையே. சாதிய ஒடுக்குமுறை என்பது படிநிலை முறையில் அனைத்துச் சாதியிலும் வேர் ஊன்றியிருக்கும் தன்மையை கருத்தில்கொண்டு தலித் எனும் சொல்லாடல் ஒடுக்குமுறைச் சாதியினருக்கு எதிரான சொல்லாடலாக மட்டும் கருதப்பட்டு வந்த நிலையும் தற்போது கேள்விக்குட்படுத்தப்பட்டு வருகிறது.

எமது சூழலில் சாதிய-சமூக ஒடுக்குமுறையை நாம் இரண்டு வகையாக எதிர்கொள்கின்றோம். முதலாவது சாதி ஒழிப்பு என்பது சமூகம் சார்ந்த ஒரு விடயமாக கருதுகின்றோம். அதில் தலித், தலித் அல்லாதவர்கள் எனும் வேறுபாட்டிற்கு இடமில்லை. ஆகவே சாதி ஒழிப்பிற்கான வழிமுறைகளை டாக்டர் அம்பேத்கர் சிந்தனையை பயில்வதனூடாகக் கண்டடைவது. இரண்டாவது சாதியப் பாகுபாட்டின் நிமித்தமாக மறுக்கப்பட்டு-நிராகரிக்கப்பட்டுவரும் சமூக-அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கான அரசியல் பலத்தை (அதிகாரத்தை), பிரதிநிதித்துவம் மூலமாக உத்தரவாதப்படுத்துவது.

தலித் எனும் சொல்லாடல் மீதான 'எமது கருத்தாக்கம்' சம்பந்தமான உங்கள் கேள்விக்கு: தீண்டப்படாத சாதியினர் என வரையறுக்கப்பட்டவர்கள் மத்தியிலான ஐக்கியத்தை மேற்கொள்வதற்கான அரசியல் சொல்லாடலாகவே தலித்-தலித்தியம் எனும் சொல்லாடலை நாமும் பயன்படுத்துகிறோம். ஆனால் இச்சொல்லாடலை தலித் சமூகத்தவர்களே ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். அவர்கள் தம்மை வேறுவகையிலேயே அடையாளப்படுத்த விரும்புகிறார்கள் என்பதான குரல்களும் எமது காதுகளில் ஒலித்துகொண்டுதான் இருக்கின்றது. அவ்வாறு சொல்பவர்களும், மறுப்பவர்களும் சாதிய சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும், அவர்களுக்கு மறுக்கப்பட்டு வருகின்ற அரசியல் உரிமைகளுக்கான செயற்பாட்டில், 'தங்களுக்கு ஏற்புடைய' பாதையிலாவது பயணிக்கவேண்டும்.. 'எமது பாதையில்' சென்றுகொண்டிருக்கும் நாம், அவர்களைச் சந்திக்கும் தருணங்களில் எமக்கிடையிலான உரையாடல்களும் கருத்துப்பரிமாற்றங்களும் பல்வேறு மாற்றத்திற்கும், புரிந்துணர்விற்குமான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும். இறுக்கமான, எவ்வித மாற்றத்திற்கும் உள்ளாகாத கருத்துநிலை என்று எதுவும் எம்மிடம் இல்லை.



# கால்கள் தரித்து நிற்க எங்கே இடமுண்டு ?

தர்மினி

The Last Halt கடந்த நவம்பர் 13ம் திகதி பாரீஸ் நகரில் திரையிடப்பட்டது. இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவராக இலண்டனில் வாழ்ந்து கொண்டிருக்கும் சுஜித் ஜீ இயக்கிய ஒரு மணிநேரத் திரைப்படமிது. இதற்கு முன் சுஜித் ஜீ என்ற கலைஞனைக் குறும்படங்கள் மற்றும் அவரே எழுதிப் பாடிய பாடல்கள் ஊடாகவே அறிந்திருந்தேன். அவரது வித்தியாசமான குரலும் தமிழ் ராப் இசையுமாக தனித்துவமானவையாக என் இரசனைக்கிருந்தன. பொது உளவியலில் ஏற்கப்பட்டவற்றைக் கேள்விக்குட்படுத்தும் பாடல்கள் குறுந்திரைப்படங்கள் என அவரொரு கவனிப்புக்குரிய கலைஞனாக இருக்கிறார். இவை தந்த எதிர்பார்ப்பு த லாஸ்ற் கோல்ற் திரையிடலுக்குச் செல்வதற்கான ஆர்வத்தை எனக்கு ஏற்படுத்தியிருந்தது.

அரங்க வாசலில் வரிசையிலும் வீதியோரத்திலும் தமிழர்கள் கூடியிருந்தனர். சம்பிரதாயமான முகமன்கள், வாழ்த்துகள் என குறிக்கப்பட்ட நேரத்தைத் தாண்டி ஆரம்பமானது. ஆனாலும் படம் தொடங்கியதும் மக்கள் திரையோடு கவனமானார்கள். இருக்கைகள் நிறைந்து விடப் படக்குழுவினர் தரையிலிருந்து மக்களோடு படத்தைப்பார்த்தனர். அது அவர்களுக்கு ஒரு இனிய அனுபவமாகவே தான் தோன்றியிருக்கும்.

இலங்கையிலிருந்து அகதிகளாக வந்து ஃபிரான்ஸில் உலையும் வாழ்வை கவிஞர் அருந்ததி இயக்கிய முகம் (1996) படம் யதார்த்தமாக எளிமையாக வெளிப்படுத்தியிருந்தது. அகதிகள் இருப்பிடங்களுக்காகவும் வேலைக்காகவும் வீசாவுக்காகவும் தத்தளிக்கும் தனிமையில் அலையும் நிலையைப் பல வருடங்களின் முன் காட்சிப்படுத்தியதன் நினைவு அங்கு அப்போது ஏற்பட்டது. இலண்டனுக்கு மாணவர் வீசாவில் வந்து துன்பப்படும் பெண் இப்போதும் கூட இவ்வளவு தமிழர்கள் வாழும் சூழலையுடைய நாட்டில் உறவு - சட்ட உதவி மற்றும் மொழியறிவு என்று இருந்த போதும் யாருமற்றவளாக - எதுவும் செய்ய முடியாதவளாக நாட்டுக்குத் திரும்பிப் போகவேண்டி ஏற்படுகிறது.

நிலானி சட்டத்தரணியோடு ஆலோசித்துவிட்டுப் பல்வேறு தரிப்படங்களில் தான் நின்று விட்டவராக நினைவுகளோடு பின்னால் போகின்றார். படிப்பதற்கான வீசா பெறுவதில் ஏற்படும் பணச்செலவு - ஏமாற்று - இங்கிலாந்தில் உள்ள சட்ட திட்டங்கள் நாளாந்த வாழ்வுக்கான கேள்விகளாக அப்பெண்ணை வீதிகளின் நீளத்திற்கு நடக்கவும் தரிப்பிடங்களில் காக்கவும் எனக் காட்சிகள். அவற்றைப் பார்க்கும் பார்வையாளருக்கு களைப்பும் சலிப்பும் ஏற்படுகிறது. அது அக்கதாபாத்திரத்தின் அலைவின் சலிப்பு. சட்டத்தரணியிடம் ஆலோசனை - வேலை தேடுதல் - வீதியில் சிந்தித்தபடி நடத்தல் - இங்கு எதுவும் பிரச்சினை இல்லை என நாட்டிலுள்ள தந்தைக்குப் பொய் சொல்லுதல்-நினத்து வந்த

மேற்படிப்பு சாத்தியமாகாத நிலையில் ஒரு வேலை-தங்குமிடமாவது நிலைக்காதது இவை எல்லாமும் அந்த நாட்டில் வாழுவதற்கான வீஸா இன்றி முடியாத போது அதற்காக ஒரு சட்டப்படியான கல்யாணம் செய்வது என என்னென்ன வழிவகைகள் உண்டோ அவற்றை முயற்சிக்கின்றார்.

மேற்குலகு பற்றிய விம்பங்கள் வேறாகவும் உண்மைகள் வேறாகவும் நேருக்கு நேரான தரிசனங்களில் தான் காண முடிகின்றது.நிலானி விதவிதமான ஆடைகளின்றி அனேகமாக ஒரே விதமான உடைகள், தலைப்பின்னல் ஒப்பனைகளற்ற முகம் என இயல்பான புதிதாக வந்திறங்கிய களைப்பு நிறைந்த யோசினைகளோடு தட்டத்தனியாகத் திரியும் பெண்ணாகக் காட்டப்பட்டிருப்பது இயல்பாயிருக்கிறது. அவரது நடிப்பும் அவ்விதமே. அதிகம் நாம் பார்க்கும் ஒரு பெண்ணைப்போன்ற சாதாரண நமக்குப்பழக்கமான முகம் அது. அவர் உதவி கேட்கும் ஆண்களெல்லாம் தமிழர்கள் - இலங்கையர்கள் - அகதிகளாக வந்தவர்கள் என்ற எந்தவிதமான இரக்கத்தின்பாற்பட்டும் அவளுக்கு உதவுவதாயில்லை. அவளொரு பெண். அவள் பாலியற் பண்டம் என்ற புள்ளியிலிருந்து அவர்கள் உதவ முன்வருகிறார்கள். உறவினரின் வீட்டிலும் பொருளாதார நிலை வீட்டை விட்டுத் துரத்திவிடுகின்றது. அவ்வீட்டின் சக பெண்ணும் குழந்தைப்பேறின்மையின் சமூகப் புறக்கணிப்பு-கடன்-வீட்டிற்குள் தனிமையை உணர்தல்-அதிகாரமேதுமற்றவளான வாழ்வு தான் கொண்டிருக்கின்றார். அவ்விரு பெண்களும் தத்தமது துயரங்களைப்பகிர்ந்து ஆறுதல் சொல்வதன் காட்-சிகள் சிறப்பு.

படப்பிடிப்புத்தளத்திலேயே ஒலிப்பதிவு செய்யப்பட்டிருக்கிறது. திரைப்படத்திலோ கதையிலோ குறுக்கிடாத இடைஞ்சலற்ற இசையும் மிதமான ஒளியும் பார்வையாளர்களுக்கு ஆறுதல். பத்து நாட்களுக்குள் எடுக்கப்பட்ட படம் என்பது அவர்களது வேகமான வேலையால் முடிந்திருக்கிறது. ஆயினும் குறும்படத்திற்கான கதையை ஒரு மணிநேர திரைப்படமாக்கியது அனாவசியமான காட்சிகளை இணைக்கவேண்டியதாகவே தோன்றுகின்றது. அன்ரன் என்ற பாத்திரம் எப்போதும் தட்டுகளில் பொருட்களை அடுக்கியபடியே இருப்பது போல நம் மனதில் பதிந்துவிடுமளவு திரும்பத்திரும்ப அக்காட்சி வருகின்றது. அவரது ஒன்றித்த நடிப்பு அதையும் நம்மை இரசிக்கச்செய்தது என்பது ஒரு ஆறுதல் தான்.

பலவிதமான பிரச்சினைகளோடு நாளாந்தம் வீதிகளில் திரியும் பெண்ணை வழிமறித்துக் காதலைச் சொல்லும் இளைஞன் நம்மிடையே சொகுசாகப் பவர் காட்டியபடி திரியும் இளைஞர்களில் ஒருவன் தான். அப்பெண்ணின் அந்தரித்த நிலையும் மனமும்



இவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. இலண்டனுற்குப் படிப்பதற்காக பல்வேறு பிரச்சினைகளோடு வருபவர்களின் துயரின் ஒரு பகுதியையாவது சொல்லிவிடும் முனைப்போடு இப்படத்தை முன் வைத்திருப்பதும் ஒரு பெண்ணின் மனநிலையை உணர்ந்தவராகக் காட்சிகளை அமைத்தமைக்கும் சுஜித் ஜீக்குப் பாராட்டு.

ஆயினும் சில போதாமைகளும் சுட்டிக்காட்டப்படுவது கலைஞர்களுக்கு வளர்ச்சிக்கு அவசியம் தான். தந்தை இறந்துவிட்டாரென்ற செய்தி கேட்டதும் நிலானி முகத்தைக் கைகளால் மூடியபடி அழுவது எனக்காட்சி படமாக்கப்பட்டுள்ளது. அவரால் உணர்ச்சிகளைக் காட்ட முடியாத போது ஒரு தப்பித்தலாகவே முகத்தை மறைக்கவேண்டி ஏற்படுகின்றது.அந்நேரம் கமரா ஆடுகின்றது. அவரைக் குலுக்குவது போலவே அது இருக்கிறது. இது பார்வையாளர்களை ஒன்றிக்க விடாமல் கவனத்தைக் குலைத்துவிடும் சினிமாவின் தந்திரமோ என்றும் கேள்வி வருகிறது.

'இனியும் என்னால் தாங்க ஏலாது' எனக் கதறும் நிலானி தனது கடைசித்தரிப்பிடம் சொந்த நாடு தான் எனத் திரும்புகின்றார் என முடிவைத் தலைப்பாக்கிய தீர்வு சொல்வது எதை? தந்தையின் சாவு தனித்த தாய் என இலங்கை. கல்வி-வீஸா-வேலை-இருப்பிடமற்ற இங்கிலாந்து என்ற இரு பக்கங்களில் அவர் போராட முடியாதவராக களைத்துத் திரும்புவது எங்கு தரித்து நிற்பதற்காக? சொந்த நாடென்ற தரிப்பிடம் அவருக்கு ஆறுதலை வழங்குமென்பது என்ன தான் நிச்சயம்?

●

கதை

# The Starry Night

தர்மு பிரசாத்



### 01.

இவன் அந்தத் தடிமனான கண்ணாடிக் கட்டிடத்தை விட்டு எழுந்து ஓடிவிட நினைத்தான். ஹீற்ரர் வெப்பம் பிடரி, காதுமடலின் பின்புறம் எங்கும் கொதித்தது. பல சோடிக்கண்கள் தன் பிடரியில் மொய்த்திருப்பதை நினைத்துப் பார்த்தான். தனது உடல் கேள்விகளால் துகிலுரிந்து நிர்வாணமாவதைப் பதட்டத்துடன் எதிர்கொண்டான். ஒவ்வொரு கேள்வியும் துப்பாக்கி ரவைகளை விட அதிக ஆழத்தில் அவனைத் துளைத்தன. உச்சமாக அவனுடைய அக்காவைப்பற்றிக் கேட்டது நீலப்படத்தின் சில துண்டுக் காட்சிகளை நினைப்பூட்டியது. சிப்பாயின் உள்ளாடையின் நிறத்திலிருந்து அக்காவின் முனகல்வரை விபரித்தான். முடிவாக 'நாயைமாரி என்ர மனுசியை ரோட்டில் சுட்டு போட்டிருந்தாங்கள்' என்றான். கேள்வியாளனுக்கு அப்போதும் நம்பிக்கை வரவில்லை உதட்டைப் பிதுக்கினான். நாயின் ஆவேசத்துடன் எழுந்து வாங்கின் மேல் துள்ளி ஏறிக் கால்களை அகட்டிக் குனிந்து மூன்றுமுறை இடுப்பை அசைத்து இயங்கிக்காட்டினான். பின்னால் பலசோடிக் கண்களினூடே விரியும் காட்சிகளில், அக்கா மேலும் பலமுறை துகிலுரியப்படுவாள் என்ற அச்சமும் ஏற்பட்டது. மேசையின் கால்களை ஆத்திரத்துடன் அழுத்திப் பிடித்தான். இதையெல்லாம் தாங்காது அம்மாவை முன்னரே ஷெல்லடியில் சாகடித்தது அர்த்தபூர்வமாகப்பட்டது. கண்ணாடிச் சுவரின் வெளியே பனி தூவுவதும் விடுவதுமாகப் போக்குக்காட்டியது. மடித்து வைத்திருந்த குளிர் அங்கி கையில் கனத்தது. அது படிந்து கிடந்த

தொடையில் இன்னும் சூடு மிச்சமிருந்தது.

நடுவிலிருந்த பிரதான விசாரணையாளன் குனிந்து வெள்ளைத் தாளில் அடிக்கடி ஏதோ குறிப்பெடுத்தான். அவனின் கையெழுத்தைக் கூர்ந்து கவனித்தான். கிறுக்கலில்லாத நேரெழுத்துகளிலிருந்தன. கேள்விகள் முன் - பின்னாகவும் ஒன்றை ஒன்று இடைவெட்டுவெட்டும் அவநம்பிக்கைகளின் பிரதிபலிப்புக்களாக இருந்தன. குரலில் கனிவும், உதடுகளில் மெல்லிய அசைவுகளாகவும் கேள்விகள் வெளிவந்தன. இவன் மெதுவாகத் தலையைத் திருப்பி வலதுபக்கம் அமர்ந்திருந்த தனது லோயரைப் பார்த்தான். கலைந்திருந்த செம்பட்டைத் தலைமுடியை ஒதுக்கி விட்டிருந்தார். தனக்கான நேரம் முடிந்துவிட்ட தோரணையில் கை நகங்களின் இடுக்கில் ஒட்டியிருந்த அழுக்கைத் திறப்பால் நீக்குவதில் மூழ்கியிருந்தார். நாடகத்தின் பகுதிபோல எல்லாம் இயல்பாய் நிகழ்ந்து கொண்டிருந்தன. இன்னுமொரு கேள்வி மாத்திரமே எஞ்சியிருந்தது. அதற்கான வேளை இன்னும் வரவில்லை என்பது போல எல்லோரும் காத்திருந்தனர்.

இடதுபக்க விசாரணையாளன் இவனை, இவனின் சிறு அசைவைத் தன் இடுங்கும் கண்களால் அளந்தபடியிருந்தான். அசைவே இல்லாத அவனின் நீலக்கண்களில் அவநம்பிக்கை துளிர்த்திருந்தது. மணிக்கட்டிலிருந்து முழங்கை வரை பயிற்றைக் கொடியாய் சுருண்டு நீண்ட தழும்பை அவனின் பார்வையில் தெரியும்படி தன் கையைத்திருப்பினான். அவனிடமிருந்து எந்தக் கேள்வியும் வராததில் அவன் முன் முடிவுடனே வந்திருப்பதாகப்பட்டது. பிடரிக்குப் பின்னால் மெதுவாகக் கதவு திறப்பதும் மூடுவதுமாக இருந்தது. காலடியோசைகளைக் கூர்ந்து கவனித்தான். அதில் ஒரு காலடியோசை மட்டும் அகன்ற பாதங்களில் அழுத்தமாக நிலத்தில் பதிந்து வெறுங்காலில் நடப்பது போலவுமிருந்தது. பழகிய காலடியோசைகள் போலவுமிருந்தன. தூக்கத்திலிருந்து விழித்தவனாய் பிரதான விசாரணையாளன் அந்தக் கடைசிக் கேள்வியையும் கேட்டான். ‘இப்போது நீங்கள் நாட்டுக்கு திரும்பிச் செல்வதில் உங்களுக்கு என்ன பிரச்சினை’ மொழிபெயர்ப்பாளனை முந்திக்கொண்டு இவன் பதில்சொன்னான், ‘காணாமல் போனவர் பட்டியலில் ஒருவனின் எண்ணிக்கை கூடும் அல்லது துரோகிகளின் பட்டியலில்’ என்றான். குரலில் அழுத்தம் கூடியிருந்தது. திரும்பி லோயரைப் பார்த்தான். அவர் சின்னி விரலிற்கு வந்திருந்தார்.

கலைந்திருந்த தாள்களை அடுக்கி மேசையில் குத்தியபடி நடுவிலான் எழுந்தான். பின்னாலிருப்பவர்கள் கலைந்து செல்லும் இரைச்சல் கேட்டது. கடைசி ஆளும் வெளியேறும் வரை அசையாமல் காத்திருந்தான். ஹீற்றர் ‘ர்ர்ர்ர்ர்’ என்று ஓடியது. சில நிமிடங்களுக்கு முன்னர் ஒருத்தி சிதைக்கப்பட்டதற்கான எந்தத்தடயமும் இல்லாமல் விசாரணை அறை நிசப்தத்தில் கிடந்தது. முடிவு தெரிவதற்கு இன்னும் இருபத்தியொரு நாட்கள் இருக்கின்றன. விசா கிடைத்ததும் அதை முதலில் பெரியப்பாவின் முகத்தில் தூக்கி அடிக்கவேண்டும் என நினைத்தான். இல்லை இல்லைப் பிரியாவின் முகத்தில்.

வீதியெங்கும் பனித்தூவல்கள் இறைந்து குவியல்களாகக் கிடந்தன. பனியின் அடர்த்தி நீர்த்தாரைபோல கூடிவந்தபடியிருந்தது. மரங்களின் இலைகளில், நிறுத்தியிருந்த கார்களின் மேல் சிறு கோபுரம் போல பனி வீழ்ந்திருந்து கொண்டிருந்தது. வீதியில் வாகனங்கள் மிக மெதுவாக நீண்ட வரிசையில் அரக்கியபடியிருந்தன. நிலக்கீழ் மெத்ரோ தரிப்பிடம் வந்தபோது இன்னும் பனி அடர்ந்து பெய்வது போலிருந்தது. இவன் இங்கு வந்த பின்னர் இப்போதுதான் பனி இவ்வளவு தொடர்ச்சியாகக் கொட்டுகிறது. அங்கிருந்த சிறிய தொலைக்காட்சிப் பெட்டியில் பனியின் அபாய அளவுகுறித்து சிவப்பு எச்சரிக்கை செய்தபடியிருந்தார்கள். விரியும்காட்சிகளில் பனி புயலைப்போல மூர்க்கமாகப் பெய்துகொண்டிருந்தது. மெத்ரோ பிளாட்பாரத்திலிருந்து வீதியை வேடிக்கை பார்த்தான். பிளாட்பார கீழ் மூலையில் அழுக்குத் துணிக்கந்தலுக்குள் வெளிறிய கிழவன் சுருண்டுகிடந்தான். அருகில் அவனது நாய் முன்னங்கால்களை நீட்டிப் படுத்திருந்தது. அதன் கால்களிடையே நசுங்கிய காகிதக்கோப்பையில் சில செம்மஞ்சள்நிற அழுக்கு நாணயங்கள் சிதறிக்கிடந்தன. குளிரையும் மீறிச் சடைத்திருந்தது அவனது பழுப்பு நிறத்தாடி. குளிரின் நடுவே மெல்லிய கதகதப்பான குன்றுபோல படுத்திருந்தான். ஆழ்ந்த நித்திரையின் வெப்ப மூச்சுக்காற்று பனிப்படலமாய் அவனது முகத்தில் வெடித்துச் சிதறியது. மெத்ரோ மிக அருகில் வந்துவிட்டதற்கான இயந்திரக்குரலின் அறிவிப்புத் தொடங்கியது. அறிவித்த நேரத்திலும் இரண்டுநிமிடங்கள் முன்னதாகவே வந்திருந்தது. தனது கனத்த குளிரங்கியைக் கழட்டி நாயின் மேல் கவனமாகப் போர்த்திவிட்டு மெத்ரோவை நோக்கிப் பாய்ந்து ஓடினான் இரும்புத்தண்டவாளத்தில் கரிய எறும்புபோல மெத்ரோ பெரிதாகியபடி வந்தது. குளிரங்கியின் இரகசிய மடிப்பினுள் செருகிவைத்த நூறுயூரோத் தாளின் நினைவும் கூடவே வைத்திருந்த நைந்த கடிதமும் மின்னலைப்போல நினைவில் வெட்டிச் சென்றது.

## 02.

சரியாக இருபத்தொரு நாட்களின் பின்னர் அவன் ஹெரோயின் பொட்டலம் போல சித்தப்பாவின் கைகளுக்குக் கை மாற்றப்பட்டிருந்தான்.




இருபத்தியொருநாட்களும் அந்தச் சிறிய நிலவறையினுள் அடைபட்டு கிடக்க வேண்டும் என்று ஒருபோதும் நினைத்ததில்லை. இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சரியாக அய்ந்து நாட்களில் ஃபிரான்ஸின் சார்ள்ஸ் து கோல் சர்வதேச விமானநிலையத்தில் வந்திறங்கியவனை 'ஏஜென்சி'க்காரன் விரிந்த புன்னகையுடன் கைலாகு கொடுத்து விமான நிலைய வாசலிலேயே வரவேற்றான். தன்னைச் சந்திரன் என அறிமுகம் செய்தவனின் பிரகாசமான முகமும் கம்பி மீசையின் அடியில் தெரிந்த வெளுப்பும் இன்னும் சில நிமிடங்களில் தொடங்க இருக்கும் பேரம் பேசலின் எந்தச் சுவடுகளுமற்று இளகிக் கிடந்தன. பின்னொரு ஞாயிற்றுக்கிழமையின் மாலையில் மரச்சட்டமிட்ட ஃபிரெஞ்சு மதுக்கூடத்தில் கோப்பையில் நிரம்பியிருந்த இளமஞ்சள் பியரை உறிஞ்சிய போது, ஃபிரான்ஸில் அவன் கழித்த அந்த முதல் இருபத்தியொரு நாட்களைக் குறித்துக் கேட்டேன். உறிஞ்சிய பியரைக் கவனமாக வட்ட அடித்தட்டில் வைத்துவிட்டு வாயைப் புறங்கையால் துடைத்தான். 'அது சித்தப்பன்ரை நூத்தியம்பது யூரோ பெற்றோல் காசுக்கு நடந்த பேரம்' என்றபடி வெளிவீதியை வேடிக்கை பார்த்தான். அந்த இருள் சூழ்ந்த அறை, அதன் மண்டிய வீச்சம் இன்னும் நாசிகளில் ஒட்டியிருக்கிறது என்றான்.

அந்த அறையுள் சின்னத் தடுப்புடன் கூடிய கழிப்பறையும் ஒரு கட்டிலும் மட்டும் வைக்கவே இடம் போதுமாயிருந்தது. கட்டிலில் படுத்திருந்து பார்த்த போது எதிரே கிடந்த சுவரில் நில மட்டத்தின் மேல் பதித்திருந்த தடினமான கண்ணாடி மட்டுமே ஆசுவாசமாயிருந்தது. காலையில் அதனூடு அலைபுரண்டுவரும் ஒளிவெள்ளத்தை வைத்து அதைக் கிழக்கு எனக் குறித்தான். மரக்கட்டிலின் விளிம்பில் பெயர்கள் கூர் ஊசியால் கிறுக்கப்பட்டிருந்தன. கட்டிலையொட்டி சுவரில் அறையப்பட்டிருந்த மரச்சட்டத்தில் வெளிறித் தளர்ந்த முலைகளுடைய பெண்ணின் நிர்வாணப்படம் ஒட்டப்பட்டிருந்தது. உப்பிய வயிற்றின் முடிவில் சிசேரியன் தளும்பு மஞ்சளாய் மினுங்கியது. அவளின் உடல்முழுவதும் கரும்புள்ளிகள் நெல்லியில் சூத்தை போலச் சிதறிக் கிடந்தன. மேலே பின்னிரவுகளில் சில காலடியோசைகளும், சில கிசுகிசுப்புகளும் மட்டுமே அரிதாகக்கேட்கும். சாலையில் விரையும் வாகனங்கள் தார் வீதியில் உராயும் இரைச்சல் மட்டும் பின்னிரவு தாண்டியும் கேட்கும். இரவில் தடித்த கண்ணாடியில் தெரியும் நட்சத்திரங்கள் வட்டமாகவும், சுழன்றடிக்கும் தீக்கோளங்களாகவும் தெரிந்தன. அவை ஒன்றையொன்று விழுங்கும் வான்கோவின் நட்சத்திரங்கள் என்றான். அறையின் மூலையில் குண்டு பல்பு ஒன்று வெப்பமாக எரிந்தபடியிருந்தது. அதன் மெல்லிய கண்ணாடி ஒடு புகைப்பிடித்தது. அதனை அணைப்பதற்கான விசை வெளியிலிருந்திருக்க வேண்டும். அதிலிருந்து கசிந்த ஒளியில் அறை எப்போதும் இளமஞ்சளில் இருந்தது. முதல்நாள் இரவு கண்ணை இறுக்க மூடியதும் இளமஞ்சள் ஒளி கண்ணுக்குள் பிரகாசமாய் ஒளிர்ந்தது. அன்று மட்டும் தூக்கம் வர நெடுநேரம் எடுத்தது என்றான். நெடுஞ்சாலையில் விரைந்து செல்லும் வாகனங்களை எண்ணியபடி படுத்திருந்தேன் என்றான். அதன் பின்னர் ஒருபோதும் செம்மஞ்சள் ஒளி தொந்தரவாயிருக்கவில்லை என்றான். கண்ணை மூடியதும் அணைக்கவே முடியாதிருந்த மின்குமிழ் தான் கண்ணினுள் அணைந்தேவிட்டது என்றான்.

கதவு திறக்கும் சிறுசத்தமோ அது பூட்டப்படும் ஓசையையோ ஒருபோதும் அவன் கேட்கவில்லை. இரண்டுநேரச் சாப்பாடும் சரியான நேரத்திற்குக் கதவருகில் எப்போதும் இருந்தது. இவ்வளவு ஏன் கதவு பூட்டியிருக்கிறதா என்று ஒருபோதும் திறந்து கூடத் தான் பார்க்கவில்லை என்றான். எப்படி நினைவுபடுத்திக் கொண்டாலும் அந்த

இருபத்தியோராவது நாளின் பிற்பகல் மட்டும் சரியாக நினைவுக்கு வரமறுக்கிறது என்றான். நித்திரையிலிருந்தேனா அல்லது பின்னேர வானத்தின் குருதிச்சிவப்பைத் தடித்த கண்ணாடியில் பார்த்து லயித்திருந்தேனா எனச் சரியாகத் தெரியவில்லை, அந்தக் கம்பிமீசைக்காரனின் குரல் அறையின் இளமஞ்சள் இருளினுள்ளிருந்து தீர்க்கமாக ஒலித்தது. 'இன்னும் அய்ந்து நிமிடத்தில் நாம் புறப்படவேணும்'. கதவு திறந்த சிறுசத்தமுமின்றி திறப்பின் துளை வழிநுழையும் காற்றுப்போல அறையினுள் அவன் பிரசன்னமாகியிருந்தான். இளமஞ்சள் ஒளியில் அவன்முகம் தங்கம்போல சுடர்ந்தது. கட்டளையிட்டு விட்டுத் தலையை 'வெடுக்' எனத் திருப்பிக் கொண்டான். அப்போது அவனின் தடித்த கம்பி மீசையினுள் புன்னகை அடர்ந்திருந்ததா? இல்லை கோபம் மிச்சமிருந்ததா? தெரியவில்லை. ஆனால், இருபத்தியொரு நாட்களுக்கும் போட்ட இரண்டுவேளை சாப்பாட்டுக்கும் முந்நூற்றிப் பதினைஞ்சு யூரோவையும் மேலதிகமாக எண்ணி வைத்த பின்னர்தான் என்னை அவனுடைய காரிலிருந்து கீழே இறங்கவிட்டான் என்றார் சித்தப்பா. முதல் வேலை கிடைத்து முதலில் போட்ட சீட்டை எடுத்துச் சித்தப்பாவிடம் எண்ணி வைத்தது அந்த முந்நூற்றியஞ்சு ரூபாயைத்தான் என்றான். ஆனால் எனக்கு என்னமோ சித்தப்பாவையும் நம்பமுடியாது என்றான். என்னை ஏற்றவந்த பெற்றோல் காசையும் அதற்குள் சேர்த்துவிட்டிருப்பார்.

தன் அழுக்குத்துணிப்பையை காரின் இருக்கையில் வீசிவிட்டு இவன் காரில் ஏறும்வரை சித்தப்பா ஒரு சிறிய கொப்பியை காரின் ஸ்ரேறிங்கில் வைத்து ஏதோ குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார். இலக்கங்களின் அருகில் கூட்டல் குறிகள் இருந்தன. இவனைத் திரும்பிப்பார்த்துச் சிறுதலையசைப்புடன் காரைக்கிளப்பினார். கார் முதல் வளைவில் திரும்பியதும் உதடுகளைக் குவித்துப் புன்னகைத்தார். 'அப்பன் இங்கை உனக்குக் கொஞ்சம் மூளை இருந்தா முப்பதாயிரத்திமுந்நூற்றி அஞ்சு யூரோவையும் வெறும் ஆறு மாசத்திலை உழைச்சுப் போடலாம் என்ன? கொப்பரைப் போல பேயனா இல்லாம இருந்தாச் சரி '

### 03.

வளைவில் திரும்பியதும் சிலர் சந்தியில் நின்று பத்திரிகை விற்பதைக் கவனித்தான். அந்த மென்னிருளிலும் பத்திரிகை விற்பவர்களுக்கு இராணுவத்தினர் பாதுகாப்பிற்காகச் சுற்றி நின்றனர். இவன் அவர்கள் அருகில் வந்ததும் ஓரமாக நின்றிருந்தவன் வீதியின் நடுவில்வந்து சைக்கிள் கான்டிலில் கையை வைத்து இவனை மறித்தான். அவன் மிக நேர்த்தியாகத் தாடி மீசை மழித்திருந்தான் முகத்தோல் வழுவழுப்பாக இருந்தது. கட்டிலிருந்து உருவிய பத்திரிகையை விசிறியைப்போல் முகத்தின் முன் நீட்டினான். பேசாமல் அதை வாங்கிக் கரியலில் செருகினான். சைக்கிளை கிறவல்வீதியில் இறக்கி அம்மன் கோயிலை நோக்கிப் போனான். இருள் சூழ்ந்த கோயிற் பிரகாரம் சலனமற்றுக் கிடந்தது. கருங்காலி மரத்தையொட்டி பிரிந்த ஒற்றையடிப்பாதையில் சைக்கிளை இறக்கியதுமே தூரத்தில் யாரோ கிணற்றில் நீரள்ளிக் குளிக்கும் சத்தம் கேட்டது. தெய்வாவாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தான்.

தெய்வா வரும்வரை கல்வீட்டை ஒட்டிக்கிடந்த மண் திண்டில் காத்திருந்தான். இருள் இன்னும் படிந்து போயிருந்தது. தெய்வா ஈர உடைகளை ஒரு பிளாஸ்டிக் வாளியில் நிரப்பித் தூக்கியபடி ஒற்றையடிப்பதையில் வந்தாள். உலர்ந்துகிடந்த செம்பாட்டு மண் அவளின் நீரேறிய பாதங்கள் பட்டுக் குளிர்ந்து வந்தது. திண்டில் சரித்துவிட்டிருந்த 'லேடிஸ்' சைக்கிளைப் பார்த்து, 'என்ன பூனையைப்போல பதுங்கி வந்திருக்கிறாய்' என்றாள். ஈர உடைகளை உதறிச் சணல் கொடியில் நன்றாக விரித்துப் போட்டாள். இவன் எதுவும் பேசாமல் இடுப்பில் செருகியிருந்த சிவப்பு பிஸ்டலை எடுத்து இரு முறைதிருப்பிப் பார்த்துவிட்டு திண்டின் மணலில் ஏறிந்துவிட்டு எழுந்து வீட்டினுள் போனான். குண்டுபல்பின் பிரகாச ஒளியில் ஒடுங்கிய விறாந்தையின் சுவர் அழுக்கேறி காரை பெயர்ந்திருந்தது. அதன் வெள்ளை பெயராத சாந்தில் கலர் பென்சில் கோடுகளும், குச்சியான மனித உருவங்களும் பல நிறங்களில் வரையப்பட்டிருந்தன. விறாந்தையின் ஓரத்தில் பவுண் நிறத்தில் சட்டமிடப்பட்டு ஒரு



படம் கொழுவப்பட்டிருந்தது. அதன் முன்னால் சிறுவிளக்கு புகைந்தபடியிருந்தது. படத்தின் நெற்றியில் இடப்பட்டிருந்த சந்தனப் பொட்டு வட்டமாகவும், உலர்ந்து நிறம் மங்கியுமிருந்தது. கண்ணிற்கு கீழே சிறு பிறைவடிவத் தழும்பும் கத்தையான கம்பிமீசையினூடு தெரிந்த புன்னகையும் வசீகரமாயிருந்தது. மகிழ்ச்சி கொப்பளிக்கும் ஒரு துண்டுக் கணம் அதில் சலனமில்லாமல் உறைந்திருந்தது. சிவானந்தம் கதிரேசன் என்ற பெயரின் கீழ் மலர்வு **27.11.1969** என்றும் உதிர்வு - சூனியமாக வெறுமையாகக் கிடந்தது. சட்டமிடப்பட படத்தில் விரிந்திருந்த சிவானந்தம் கதிரேசனின் கண்கள் விறாந்தை முழுவதுமாக வியாபித்திருந்தது.

பின்னொரு குளிர்கால இரவென்றின் மதுவிருந்தில் ஐஸ் துண்டுகளை கைகளால் மதுக்கோப்பைகளில் இட்டபோது இது தெய்வாவைப் போல குளிர்ந்திருக்கிறது என்றான். மதுவின் மெல்லிய போதையில் அந்த நாளின் இரவை, தெய்வாவை பின்னொருபோதும் மறந்ததில்லை என்றபடி ஐஸ்துண்டை வாயிலிட்டு மென்று விழுங்கினான். அன்றுதான் அவன் கடைசியாக தெய்வாவைப் பார்த்தது. குண்டுபல்பின் ஒளியில் அவள் நிழல் விறாந்தை முழுவதும் நீண்டிருந்தது. அன்று பின்னிரவு முழுவதும் அவனின் ஒடுங்கிய மார்பின் முடிகளைக் கோதியபடியிருந்தாள். அவனின் கையைச் சுற்றி பயிற்றங்கொடி போல படர்ந்திருந்த நீண்ட தழும்பை மெதுவாக வருடினாள். 'தழும்புகள் குழந்தையின் மிருதுவான பாதங்கள் போலிருக்கின்றன' என்றாள். தன் உடைகளைக் களைந்துவிட்டு நிர்வாணியான போது தளர்ந்திருந்த இவனின் குறியில் குருதியின் உள்ளோட்டத்தை உணர்ந்தான். அவளின் தளர்ந்த உடலில் தொய்ந்த மார்புகள் மேடிட்ட வயிற்றில் படிந்து போயிருந்தன. நீண்ட தழுவலின் பின் இவள் குளிர்ந்து பனிக்கட்டியாகி அவனுடலில் உருகிக் கொண்டிருந்தாள். உருகி, உருகி அவனுடலில் கரைந்துபோகும் ஆவேசம் அவ்வுடலிலிருந்தது. தான் முதன் முதலில் இலக்குத் தவறாமல் சுட்டு வீழ்த்திய பெயர் தெரியாத குருவியை நினைத்துக் கொண்டான். அது குருதி வடியும் தசைப்பொட்டலாம் போல புற்தரையில் விழுந்து கிடந்தது. இவன் குறி விறைக்கவில்லை. தளர்ந்த குறி வேண்டாத தசைத் திரட்சி போல வதங்கிக் கிடந்தது. 'அதுவொரு ரவுண்சைப்போல உள்ளே பதுங்கிவிட்டது' என்றான். தான் சுட்டு வீழ்த்திய கல்லூரி அதிபரின் கடைசிச்சொற்களை நினைவிலிருந்து எடுக்க முயன்றான். 'அப்பன் நானும் உம்மடை அப்பா மாதிரித்தான், ஆயிரம் குழந்தைகளின் அப்பா'. ரத்த நாடிகள் விரிந்து மூளைக்குள் இரத்தம் இளஞ் சூட்டுடன் படர்ந்தது. குறிவிறைக்கவில்லை. 'ஆம் உன் கைகளின் இளஞ்சூடு என் குறியில் படரும் வரை அது விறைக்கவேயில்லை. ரத்த நாடியின் ரகசியமுடிச்சு அவிழ்ந்தது போலிருந்தது அன்று உன் தொடுகை' என்றான்.

சரியாக ஒருவாரத்தின் பின்னர் தெய்வாவின் அழுகி உருக்குலைந்த உடலை வீட்டை உடைத்து ஊர்மக்கள் எடுத்ததாகப் பத்திரிகைச் செய்தியில் வாசித்ததாகச் சொன்னான். அப்போது தான் தெய்வா வீட்டிலிருந்து பல மைல் தூரத்தில் தெரிந்தவரின் வீட்டுக் கூரைக்குள் பதுங்கியிருந்ததாகச் சொன்னான். நாட்டைவிட்டுத் தப்பிச்செல்லும் கலவையான எண்ணங்கள் சூழ்ந்த நாட்களவை என்றான். மேற்கூரை இருளினுள் பத்திரிகையில் வந்த உருக்குலைந்த அவளுடலின் புகைப்படத்தை மிகக் கவனமாகச் சோதித்தபோதும் அதில் ரவுண்ஸ் பாய்ந்த இடத்தைத் தன்னால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. அது அவளின் மார்பில்தான் பாய்ந்திருக்க வேண்டும் என்றான். புகைப்படத்தில் மார்பு கரைந்துபோயிருந்தது. ஆனால் அவ்வுடல் பரிசுத்த நிர்வாணமாக இருந்தது அதன் தசைகள் உருகிக்கிடந்தாலும் அது தெய்வாவைப்போல இருந்தது என்றான். உதடுகள் ஏதோ சொல்லவருவது போல இழுபட்டு இருந்தன. தெய்வாவிற்குத் தண்டனையை உறுதிப்படுத்தி மேலிடத்திலிருந்து வந்த நான்காவது கடைசிக்கடிதத்தை இங்கு வரை பத்திரமாக எடுத்து வந்ததாகச் சொன்னான்.

## 04.

இவன் இருபத்தியொராவது நாளில் விசாரணை மன்ற வாசலில் ஒட்டப்படும் முடிவைப் பார்க்கப் போகவில்லை. 'எப்படியும் விசாக் குடுக்கத் தானே வேணும், நான் சொன்ன கதை அப்பிடி நம்பாமல் இருக்க முடியாது' என்றுவிட்டு என்னைப்பார்த்துச் சிரித்தான். முப்பது நாட்களின் பின்னர் அரசாங்க இலச்சினை பொறிக்கப்பட்ட கடிதத்துடன் வீட்டிற்கு வந்திருந்தான். அதை என்னிடம் வாசிக்கக் கொடுத்து விட்டு எதிரிலிருந்த சோபாவில் தலைகுனிந்து அமர்ந்திருந்தான். 'திருவாளர் சிவானந்தம் கதிரேசன் ஆகிய உங்களுக்கு நாங்கள் அறிவிக்கிறோம், நீங்கள் நாட்டிற்குத் திரும்பிச் செல்வதால் உங்களுக்கு உயிராபத்து இருக்கிறது என்பது தெளிவாகியுள்ளது. ஆகவே உங்களுடைய அரசியல் அகதித்தஞ்சக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள நாங்கள் முடிவெடுத்திருக்கிறோம். உங்கள் நாட்டில் நிலமைகள் சீரடையும் வரை இங்கே தற்காலிகமாகத் தங்கியிருக்கும் வதிவிட உரிமையை வழங்குவதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம். இழந்த உங்கள் குடும்பத்திற்கும் மனைவி தெய்வதர்சினிக்கும் எங்கள் ஆழ்ந்த வருத்தங்கள். நல்வரவு'.

●

தர்மினி

*‘ஒய்வெடுத்தால், ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினால்*
*நான் பைத்தியம் ஆகிவிடுகிறேன்’*

*- சில்வியா பிளாத்*

ஆகவே தான், மற்றொருத்தி
திராட்சை இரசத்தைப் பருகிவிட்டு மயங்கிப்போகின்றாள்.
இசையை ஒலிக்கவிட்டுச் சாவைத் தொடுவது போல் சன்னதங் கொள்கின்றாள்.
கால்களால் நிலத்தை அளந்து அளந்து நடந்தபடியிருக்கின்றாள்.
கத்தியெடுத்து எதையாவது வெட்டத் தொடங்குகின்றாள்.
பிரச்சினைகளைக் கௌவத் தொடங்கும் மூளைக்குப் புத்தகங்ளைத் தீத்தி விடுகின்றாள்.
கண்கள் இமைப்பதை மறுக்கும் வரை கணினியைப் பார்க்கின்றாள்.
பைத்தியக்காரியாகி விட்டால்
மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவேண்டுமென்ற
உறுதிமொழியை இவர்களிடம் வாங்கிக் கொண்டு
தொலைவுக்கும் தொலைவான கதைகளோடு...




இலங்கை வடமராட்சியைக் கதைக் களனாகக் கொண்டியங்கும் இந்நாவல் புனைவென்று கடக்க முடியாத உலைக்கலனாய் தகிக்கின்றது. அதே சமயம் எளிய மொழியில் சாதிய இருப்பையும் , அதன் அமைப்பையும், அது பற்றிய புரிதலையும் எல்லோரிடமும் கொண்டு செல்லும் வகையில் எழுதப்பட்டுள்ளது. ஈழப் பிரதேசத்தின் சாதிய முகத்தையும் அதை எதிர்க்கும் போராட்டத்தையும் தொடர்ந்து இலக்கியமாக்கி வரும் அய்யா தெணியானின் இந்நாவல் சாதியத் தமிழ் சமூகத்தின் மோசடித் தேசிய முகத்தினை அம்பலப்படுத்தும் மிக முக்கிய தலித் நாவல்.

- கருப்புப் பிரதிகள்-